கூடாதது ஒன்றும் இல்லையே!

Dr. லலிதா செல்லப்பா

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கூடாதது ஒன்றும் இல்லையே!

(திரு.சுந்தர் எக்பர்ட் அவர்களின் வாழ்க்கை வரலாறு)

எழுதியவர்கள்

Dr. S.லலிதா செல்லப்பா M.A., Ph.D., &

Dr. J.செல்லப்பா M.Sc., Ph.D.

கூடாதது ஒன்றும் இல்லையே!

(திரு.சுந்தர் எக்பர்ட் அவர்களின் வாழ்க்கை வரலாறு)

ஆக்கியோர்

Dr. S.லலிதா செல்லப்பா M.A., Ph.D., &

Dr. J.செல்லப்பா M.Sc., Ph.D.

All rights reserved. Written permission must be secured from the author to use or reproduce any part of this book, except for brief quotation in critical reviews or articles.

முதற்பதிப்பு 2010

விலை ரூ.60/-

சமர்ப்பணம்

பலவீனமானவரைக் கொண்டு பலவீனர்களுக்காய் பலமான பணிகளைச் செய்த பரமன் இயேசுவின் இணையில்லா நாம மகிமைக்கு அர்ப்பணம்

- திரு.சுந்தர் எக்பர்ட்

புத்தகம் கிடைக்குமிடம்

திருமதி.சுகந்தம் எக்பர்ட்

191, சூர்யா அப்பார்ட்மெண்ட்

பெருமாள்புரம், திருநெல்வேலி 627 007.

போன்: 0462-2533035 செல்: 9443117420

அச்சிட்டோர்

ஜெயம் பிரிண்டோகிராப்ஸ்

சிவகாசி. செல்: 9843125045

பொருளடக்கம்

அத்தியாயம்	பக்கம்
1. துள்ளும் பருவமும் துவண்ட வாழ்வும்	9
2. விடியலைத் தேடி	22
3. காத்தரீன்பூத் மருத்துவமணை	35
4. ஸ்வீடிஷ் ரெட்கிராஸ்..................................	43
5. இணையும் துணை	56
6. யார் அது?..	62
7. கனவும் நனவும்..	67
8. அறியாத எல்லைகளில் அன்புள்ளங்கள்........	83
9. ஆஸ்திரேலியா நியூசிலாந்து பயணம்	92
10. கல்யாணமாம் கல்யாணம்	100
11. காலச் சக்கரத்தில் இரண்டு சக்கர நாற்காலிகள்..................................	105
12. ஏணிப் படிகள்..	115
13. இணைந்து செய்த ஊழியங்கள்	127
14. பிரிவு உபசாரம்...	135

முன்னுரை

'இயலாதவர்களால்' செய்யப்படும் அசாதாரண செயல்கள் என்ற நூலை படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

1954ம் ஆண்டு கனடாவைச் சேர்ந்த ஜோனி பதினைந்து வயது சிறுமியாக இருந்தபோது ஒரு விபத்தில் முதுகெலும்பு பாதிக்கப்பட்டது. மருத்துவமனையை நிதானமாக பார்க்கும் வாய்ப்பு அப்போது அவளுக்கு கிடைத்தது. இனி நடக்க முடியாது என்ற சூழலுக்கு அவள் தள்ளப்பட்டாள். உலகம் அவளைப் பார்த்து பரிதாபப்பட்டது. சக்கர நாற்காலி வீட்டில் குடிபுகுந்தது. கேண்டர் பரி என்னும் இடத்தில் அவளது தகப்பனார் ஒரு வீடு கட்டினார். மகளின் வசதிக்கேற்ப சக்கர நாற்காலி தாராளமாக உருண்டு வர அகலமான வாசல்கள், படிக்கட்டுகள் தவிர்க்கப்பட்டு சாய்தளமாக வைத்துக் கட்டினார். மகளை உற்காகப்படுத்தினார். அதன் விளைவு அவள் சட்டம் பயின்று வக்கீலானாள். ஜோனியின் நகைச்சுவை உணர்வில் மயங்கிய ஒரு வாலிபர் அவளைத் திருமணம் செய்தார். இன்று ஜோனி பெண் இயக்குனராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணிபுரிகின்றாள். 'ஊனம்' என் முன்னேற்றத்தை தடை செய்யாது! என சவால் விடுகிறாள்.

'கிரேட் பிரிட்டனைச் சேர்ந்த 'எலிசபெத்' ஒரு டாக்டரின் மகள். பாலே நடனமாடுவதில் சிறந்தவள். போலியோவினால் தாக்கப்பட்டு ஆடிய கால்கள் அசைவில்லாமல் போனது. முயற்சியை விடவில்லை. மனஉறுதியுடன் ஓவியம் வரையத் தொடங்கி இன்று பிரபல ஓவியராக, எழுத்தாளராக, நல்ல ஆசிரியராகப் பணி செய்கின்றாள்.

'பெர்ஸி 28 வயது வாலிபன். முதுகில் கதவு விழுந்து நரம்புகள் பாதிக்கப்பட்டு செயலிழந்தான். இன்று விளம்பரத்துறையின் நிர்வாகியாகக் கொடிகட்டிப் பறக்கிறான். அதில் பல விருதுகளும் பெற்றுள்ளான்'.

இப்படி ஊனமுற்றோரை ஊக்கப்படுத்தும் வகையில் நம் நாடு இன்னும் முன்னேறவில்லை. இருந்தும் பதினொரு வயதில் விளையாட்டு வீரனாகப் படிப்பில் சுட்டியாக இருந்த சிறுவன், போலியோவினால் பாதிக்கப்பட்டான். இரண்டு கால்கள், ஒரு கை பாதிக்கப்பட்டது. இருக்கும் ஒரே கை போதும்! என்று உறுதியோடு கடவுள் நம்பிக்கையை அஸ்திவாரமாகக் கொண்டு அகில உலகமும் தன்னை அறியும்படி செய்தவர் சுந்தர் எக்பர்ட். அவரைக் குறித்து 1984ஆம் பிப்ரவரி மாதம் வந்த 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' மாத இதழ் என்ற கட்டுரையில் கேத்தி ஸ்டாக்வின் என்பவர் பாராட்டி எழுதியுள்ளார். ஆனந்த விகடனும் தன் பங்குக்கு 27.1.85 அவரது சேவையைப் பாராட்டியுள்ளது.

'ஊனமுற்ற தனி மனிதன், சமுதாயத்திற்கு எந்த அளவு உதவமுடியும்' என்ற நோக்கில் 'ரானேசாண்ட்' என்ற பிரபல சமூகச்சேவை துறை 1982–ஆம் ஆண்டு பிரிட்டனில் விருது கொடுத்து அவரைக் கௌரவித்தது.

இப்படிப்பட்ட சமூகத்தொண்டர், கிறிஸ்துவின் அன்பை ருசித்தவர், தன் மனைவியை அதிகமாக நேசித்தவர். அவரின் மனைவி சுகந்தம் எக்பர்ட் தன் கணவரின் வாழ்க்கையை எழுத எங்களை வேண்டிக் கொண்டதின் நிமித்தம் அதை எழுதும் வாய்ப்பு கிடைத்தது. சுகந்தம் தன் கணவர்மேல் கொண்டுள்ள மரியாதை, அன்பு, அவர்கள் தேவன்மேல் வைத்துள்ள அசைக்க முடியாத விசுவாசம் எங்களை நெகிழவைத்தது.

சுந்தரின் நண்பர்கள், மற்றும் தொழில் ரீதியான மக்களிடம் அவரைக் குறித்த விபரம் திரட்டியபோது அவரது அர்ப்பணிப்பு நிறைந்த வேலைத்திறன் பளிச்சிட்டது. அவரே எழும்பி வந்து பேசியதைப் போல உணரமுடிந்தது.

பலவருட எங்கள் எழுத்து அனுபவத்தில் மிக குறுகிய காலத்தில் எழுதப்பட்ட ஒரு நூல் இது என மகிழ்ச்சியுடன் கூறுகின்றோம். அதற்கு முக்கிய காரணம் சுகர் த்தின் தகவல் திரட்டும் பணி. அது எங்களைப் பிரமிக்க வைத்தது. அவரது ஜெபக் கூட்டாளிகள் எடுத்த ஜெபதூபத்தின் கனி, இந்த நூல். சுந்தர் வாழ்க்கையில் நாங்களும் அநேக காரியங்களைக் கற்றுக் கொண்டோம்.

மாற்றுத்திறனுடைய மக்களுக்கு ஒளிமிகுந்த எதிர்காலம் உண்டு என உறுதிப்படுத்தும் நூலைக் கர்த்தர் ஆசிர்வதிக்க வேண்டுகிறேன். 'இதைத் தொடங்கி, முடிக்கச் செய்த கர்த்தருக்கு எங்கள் நன்றியை மனப்பூர்வமாகக் காணிக்கையாக்குகிறோம்.'

டாக்டர். லலிதா செல்லப்பா,
டாக்டர் செல்லப்பா.

18.12.09
திருச்சி.

முன்னுரை

பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். (1கொரி 1:27) என் கணவர் திரு.சுந்தர் எஸ்பர்ட் வாழ்க்கை தேவன் தெரிந்து கொண்ட வாழ்க்கையாக அமைந்திருந்தது. பலவீனமான அவர்களைத் தேவன் தெரிந்து கொண்டதால் அநேகருக்கு அவர்களை ஆசீர்வாதமாக வைத்தார். நானும் என் கணவரிடமிருந்து அநேக காரியங்களைக் கற்றுக் கொள்ள தேவன் எனக்கு உதவி செய்தார். கர்த்தருக்கு நன்றி.

பதினொரு வயதில் இளம்பிள்ளை வாதத்தினால் (Polio) அவர்களுடைய இரண்டு கால்களும் முழுவதுமாகப் பாதிக்கப் பட்டது. இடது கையும் சற்று பலவீனப்பட்டது. ஓடியாடித் திரிந்த அவர்களுக்கு முற்றும் நடக்க இயலாமல் ஆகிவிட்டது. ஆயினும் தேவனுடைய உதவியினால் அவர்கள் வாழ்க்கையில் முன்னேறி அநேக ஊனமுற்ற (மாற்றுத் திறனுள்ள) மக்களுக்கு உதவி செய்தார்கள். மாற்றுத் திறனுள்ள மக்களை ஊக்குவித்து, அவர்களும் சமுதாயத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காக அவர்களைப் பயிற்றுவித்தார்கள். தொழிற்பயிற்சி கற்றுக் கொடுத்தார்கள். மேலும் அலுவலகங்களில் செய்யக்கூடிய வரவு செலவு மற்றும் கம்ப்யூட்டர் போன்ற காரியங்களில் அவர்கள் திறம்பட செய்ய உதவினார்கள். சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் ஆலோசகராக இருந்தார்கள்.

தேவனுக்குத் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்ததால் தேவன் அவர்களைக் கனம் பண்ணினார். தமிழக அரசாங்கத்திடமிருந்தும், மத்திய அரசாங்கத்திடமிருந்தும் விருதுகள் பெற்றார்கள். சர்வதேச அளவில் International Council of Social Welfare அவர்களுக்கு Rene Sand Award கொடுத்தது. இரட்சண்ய சேனையிடமிருந்தும், பாராட்டுகள் பெற்றார்கள்.

அவர்கள் வாழ்க்கை வரலாறு ஊனமுற்றவர்களுக்கும் (மாற்றுத் திறனுள்ளவர்களுக்கும்) வாழ்க்கையில் வேதனையோடு இருப்பவர்களுக்கும் மற்றும் யாவருக்கும் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்பி இப்புத்தகம் எழுத திருமதி. டாக்டர் லலிதா செல்லப்பா அவர்களையும், அவர்கள் கணவர் திரு.டாக்டர், செல்லப்பா அவர்களையும் கேட்டபோது, அவர்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள். எல்லாவிதத்திலும் அவர்கள் என்னோடு ஒத்துழைத்ததற்காக அவர்களுக்கு நன்றி.

என் கணவரின் வாழ்க்கை வரலாறு ஆங்கிலத்தில் "Brokenness as a way of blessing" என்று திருமதி. உஷா ஜெசுதாசன் அவர்களால் எழுதப்பட்டு வெளிவந்துள்ளது.

என் கணவரின் வாழ்க்கை வரலாற்றின் மூலம் அநேகர் தேவனுக்கு முதலிடம் கொடுக்கவும், அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் அவர்களும் சாதனையாளர்களாக முன்னேறிச் செல்லவும் ஜெபிக்கிறேன். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

திருமதி.சுகந்தம் எக்பர்ட்
191, சூர்யா அப்பார்ட்மெண்ட்
பெருமாள்புரம்
திருநெல்வேலி *627 007.*

ஊனம்
ஒரு இயலாமை அன்று!

ஊனம் என்பது உடலிலே,
உள்வத்தில் என்றும் ஊனம் இல்லையே!

1. ஊனத்தால் இயலாததைக் கவனியாதே!
ஊனத்தால் இயலுவதைக் கவனி!

2. எல்லாரும் உடல், மனம், சமூகரீதியாக
ஊனமுற்றவர் என தெரியுமா?

3. உடலில் உள்ள ஊனம்,
உள்ளத்தில் ஊனம் விளைவிக்கலாமா?

4. ஊனத்தை நோக்காதே!
இயல்வதை நோக்கு.

5. என் உடலில் உள்ளது ஊனம்,
உன் உள்ளத்தில் ஏன் ஊனம்?

6. அங்கத்தில் தான் குறை,
ஆற்றலில் அது, நிச்சயம் இல்லை!

சுந்தர் எக்பர்ட்
நவ. 9-1992.

கர்த்தருக்கே மகிமை!

பூர்வ நாட்களில் தம்மைப் பலவாறாக
வெளிப்படுத்திய தேவன், குமாரனாக
வெளிப்பட்டார். அவர்தம் அடியார் அநேகர்.
அவ்வழியில் ஊனமுற்றோரும் எதிர் நீச்சலடித்து
இவ்வுலகில் தன்னிரக்கமின்றி சுயமாக வாழுமாறு
முன்னோடியாக சுந்தராம் மாவீரனைத் தெரிந்தெடுத்த
தேவன், இரட்சகரைப்புடமிட்டது போன்று
இவரையும் புடமிட்டார். அவர்தம் அருளால்
அடியாரவர், இன்னல்களை வாழும் படிகளாக்கி
ஏதுகளைப் பயன்படுத்தி வாழ்வில் உயர்ந்தார்.
தொழுநோயர், அங்கவீனர் மறுவாழ்வு மையம்
ஆரலில் அமைய ஆங்கதனை நன்முறையில்
இயக்கிய சுந்தர்தம் வாழ்வில் தன் சுகந்த
மணத்தை வீசி சுகந்தம் இணைந்ததும், அவர்தம் செயல்.
இருவரும் திறம்பட உழைத்தபின், ஓய்வு பெற்று
அவ்விடம் விட்டேகினும் ஓய்வறியார்.
அத்துறையின் ஆலோசகராகப்
பட்டி தொட்டிகள் நகரங்கள்
மறுவாழ்வு அமைக்கப் பாடுபட்ட அவர்
கர்த்தர் அழைக்க விண்ணகம் சென்றார்
ஊழியம் வளர்கிறது. சுகந்தத்தின் மூலம்
சுந்தர்தம் வாழ்வு ஏடாக மாறிச் செயல்படவும்
ஜெபவீராங்கனையாக உயிருள்ள கர்த்தரை
நிரூபிக்கும் ஏடாகவும் அவர் வாழ்வு மலருகிறது.
உடன்பிறந்தோர் நாங்கள் எட்டிநின்றது பார்க்க,
"அம்மாவைக் காக்கும் மக்களிருக்க,
தோழிகள் புடைசூழக் கர்த்தரே காக்கின்றார்.

கர்த்தருக்கே மகிமை!

திருமதி. சந்திரலீலா தேவதாஸ் M.A., B.T.,
முதனிலைத் தமிழ் ஆசிரியை (ஓய்வு), சேலம்.
திருமதி. சுகந்தம் எக்பர்ட் அவர்களின்
மூத்த சகோதரி

1

சுந்தர் எக்பர்ட் அவர்களின் பெற்றோர்

துள்ளும் பருவமும் துவண்ட வாழ்வும்

கூடாதது ஒன்றுமில்லையே!

1. துள்ளும் பருவமும் துவண்ட வாழ்வும்

1948-ம் ஆண்டு தூத்துக்குடியில் உள்ள கால்டுவெல் உயர்நிலைப்பள்ளி வளாகம் சிறுவர்களால் நிறைந்திருந்தது. பலவண்ணக் கொடிகள் பறந்து கொண்டு இருந்தன. ஓடும் பாதையில், வெள்ளை மாவு போட்டு அடையாளமிட்டு இருந்தன. அன்று பள்ளியின் விளையாட்டு விழா. பெற்றோரும் கணிசமாகக் கூடி இருந்தனர். பள்ளிவாசலில் பலூன்காரன், ஐஸ்வண்டி, பார்!.....! பட்டணம் பார்! (ஸ்லைடு போட்டுக் காட்டுபவர்) மிட்டாய்க்காரர் சவ்வுமிட்டாய்காரர் என பலர் பஞ்சமில்லாமல் பள்ளி வாசலில் இருந்தனர்.

டிரில் மாஸ்டர் மகாக்கெடுபிடி, அவர் காக்கி அரைக்கால் சட்டை, வெள்ளைச் சட்டையைப் பார்த்தாலே மாணவர்களின் சப்தநாடியும் ஒடுங்கிவிடும். ஒருமுறை விசிலை பலமாக, நீளமாக ஊதினால், பிள்ளைகள் வகுப்புவாரியாக, வரிசையாக நின்றுவிடுவார். விளையாட்டு விழா என்றால், டிரில் மாஸ்டர்தான் அன்றையக் கதாநாயகன். மற்ற வாத்தியார்கள் எல்லாம் டிரில் மாஸ்டர் சொன்ன கட்டளைகளை நிறைவேற்றுவதில் பம்பரமாய் சுழலுவார்கள்.

திரும்பவும் ஒருநீள விசில் ஒலி கேட்டது தான் தாமதம், சிறுவர்கள் கொட்டி விட்ட நெல்லிக்காய்கள் போல ஓடி, வகுப்புவாரியாய் ஒழுங்காக நின்றனர். விழாத்தலைவரின் சிறப்புச் சொற்பொழிவுக்குப்பின், டிரில் மாஸ்டர் அறிவிப்புகளை, அறிவிக்க ஆரம்பித்தார். பல விளையாட்டுகளில் பங்கு பெற்ற மாணவர்கள், அதற்கென குறிப்பிட்ட இடங்களுக்கு ஓடினர்.

ஐந்தாம், ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கான பந்தயங்களில், ஒல்லியாக உயரமான மாணவன் சுந்தர்

அடிக்கடி வெற்றிக்கம்பத்தில் ஏறி பல பரிசுகள் வாங்கினான். மாநிறமான அவன் அமைதியானவனாகக் காணப்பட்டான். அடர்த்தியான முடி, அவன் முகத்தில் விழுந்து அவன் முகத்தை மறைத்தது. கூட்டத்தினர் பார்வை அவன் மீது விழுந்தது.

ஏலே! யாருல இவன் நண்டு மாதிரி குடுகுடுவென ஓடிவந்துர்ரான் என்றான் ஒரு கிராமத்து மாணவன். ச்சு... என்னவே, இது தெரியாதா? அந்தப்பய, பர்மாவிலிருந்துன்னா வந்துருக்கான்... அதான் சிட்டாப் பறக்குதா... ந்தா... பாரு... எம்புட்டு தூரம் தாவுறான்? கூட இருந்த மற்றொரு சிறுவன் உற்சாகக் குரலில் கத்துகின்றான்.

சற்று நேரத்திற்குப்பின், பக்கத்தில் உள்ள கால்பந்தாட்ட மைதானத்திலிருந்து ஒரே சத்தம்.

'டேய்! சுந்தர்! விடாதே! பந்தை ஜெபாவுக்கு குடு! விடாதே!... ஓடு.... ஓடு... திரும்ப ஒரே கூக்குரல். சுந்தர் எதிராளியின் கோல் போஸ்டில் ஒரு கோலைப்போட்டு விட்டான். சுந்தர் எந்தப் பக்கத்தில் நின்றாலும் எதிரணிக்கு ஒன்றிரண்டு கோல்கள் கூடுதலாக விழுவது சர்வநிச்சயம். ஏனெனில் குறைவாக அவனிடம் கண்கள், கால்கள், சிந்தனை மூன்றும் ஒருமித்து செயல்படும். பார்க்கக் கச்சலாக இருந்தாலும், உடலில் சக்தி பொங்கி வழியும். அவன் போட்ட கணக்கு தப்பாது. எந்த இடத்தில் பந்தை அடிக்க வேண்டும். யாருக்குப் பந்தை கொடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சக்தியும், அதற்கு எடுக்கும் நேரமும், அபாரமாக இருக்கும்... 'விளையும் பயிர் முளையிலே' என்பது அவனைக் காண்பவருக்குத் தெரியும்.

மாணவர்கள் மத்தியில் பலரால் அறியப்பட்ட சுந்தரின் சொந்த வாழ்வில் சோகம் குடி கொண்டிருந்தது. அது அவன் கண்களில் ஆழமாய் தேங்கியிருந்தது. சிறுவர்களுக்குரிய குறும்புத்தனம், அடாவடித்தனம், சண்டையிடுதல் என எந்த அடையாளமும் அவனிடம்

காணப்படவில்லை. அதற்கு முக்கிய காரணம், சமீபத்தில் தாயை இழந்திருந்தான். அதுமட்டுமல்ல, இரண்டாம் உலக மகாயுத்தமும் அவன் வாழ்வில் தடம் பதித்திருந்தது.

1941 ம் ஆண்டு வரை பர்மாவில் உள்ள ரங்கூன் நகரில் அரசு அதிகாரியாக எக்பர்ட் என்பவர் செல்வச் செழிப்பில் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவி ரூபி. அவருக்கு மூன்று பிள்ளைகள். சரோஜினி மூத்தமகள், இரண்டாவது மகன் சுந்தர் எக்பர்ட், மூன்றாவது மகன் செல்வராஜ் என்ற செல்வர். சரோஜினி பிறந்ததிலிருந்தே செவித்திறன் மற்றும் பேச்சுத்திறனை இழந்துவிட்டாள். சாடையில்தான் பேசுவாள். இரண்டாவது சுந்தர் மகாகெட்டிக்காரன். பின்னால் இருமுறை டபுள் பிரமோஷன் வாங்கியவன் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

சுந்தர் எக்பர்ட் அவர்கள் குழந்தையாக இருந்த போது தனது குடும்பத்தினருடன்

இவர்களது பூர்வீகம் இந்தியாவின் தென்கோடியில் உள்ள நாசரேத். இன்னும் ஆழமாக எக்பர்ட் அவர்கள் பூர்வீகத்தை ஆராய்ந்து பார்த்தால், *1900* ஆண்டுகளில் இந்தியாவில் 'சர்ச் ஆப் இங்கிலாந்து' என்று கூறப்படும் ஐக்கியத்தில் தேவப்பிரியம் என்ற குருவானவர் இருந்தார். அவர் மிகவும் பிரபலமானவர். ஆரம்பத்தில் புதுக்கோட்டைப் பகுதியிலும் பின்பு சாயர்புரம் பகுதியிலும் தன் குருத்துவப் பணியை அர்ப்பணிப்புடன் செய்து வந்தார். அவருக்கு நான்கு பிள்ளைகள். மூத்தவர் பாக்கியம்தவமணி என்ற பெண். அடுத்தது டி.ஜே. தேவப்பிரியம், மூன்றாவது ஆர்தர் என்ற மருத்துவர், கடைசியாக சுந்தர் எக்பர்ட்டின் தகப்பனார் எக்பர்ட் ஆகிய நான்கு பிள்ளைகள் இருந்தனர். இதில் எக்பர்ட் ரங்கூனுக்கு வேலை நிமித்தம் சென்று ரிஜிஸ்டரர் ஆகப் பணிபுரிந்தார்.

1941ஆம் ஆண்டு ஜப்பானியர்கள் அமெரிக்காவில் உள்ள 'பேர்ள் துறைமுகத்தில்' குண்டு போட்டதினால் உலகமே ஸ்தம்பித்தது. பரப்பளவில் சிறிய நாடான ஜப்பான், உலகின் வல்லரசாக விளங்கிய அமெரிக்க நாட்டின் துறைமுகத்தைத் தாக்குவதா? உலகம் ஸ்தம்பிக்காமல் என்ன செய்யும்? ஜப்பானியர்களின் அடுத்த இலக்கு, பர்மா. அதைத் தாக்கத் திட்டமிட்டனர். இந்தியாவின் கிழக்குப் பகுதியில் பர்மா அமைந்திருந்ததால், யுத்த சத்தம் கேட்டுப் பயந்த இந்தியர்கள் கால்நடையாக ரங்கூனிலிருந்து இந்தியாவுக்கு ஓடத் தொடங்கினர். ரங்கூன் எங்கும் மக்கள் பீதியில் இங்குமங்குமாக ஓடினர். எக்பர்ட் தன் மனைவி மக்களை முதலில் காப்பாற்றத் திட்டமிட்டார். ரங்கூனில் இருந்து சென்னை செல்லும் கப்பல் ஒன்றில் பிள்ளைகளையும் அருமை மனைவியையும் ஏற்றி விட்டார். யுத்தத்தின் விளைவு இரவிலும் விளக்குகள் இல்லை. இருட்டில் ஒன்றும் புரியாத குழந்தைகள் தாய் ரூபியைப் பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தனர்.

கும்மிருட்டு கப்பல் சப்தமிடாமல் நகர ஆரம்பித்தது. ரூபிக்கு இனி தன் கணவரைக் காண முடியுமா? என்ற அச்சம் மேலோங்கி நின்றது. எக்பர்ட்டுக்கும் மனைவி பிள்ளைகளை இனி காண்போமா? என்ற ஏக்கம் இல்லாமலா இருந்திருக்கும்? இருவரும் தங்களை மறந்து கண்களை மூடி, ஐயோ! இவர்களை இந்தப் பயங்கரமான சூழ்நிலைக்கு ஒப்புக் கொடுக்கவில்லை. நான் உம்மிடத்தில் ஒப்புக் கொடுத்த நிம்மதியில் செல்கின்றேன் என தங்கள் ஆத்தும நங்கூரமான கர்த்தரிடம் புலம்பினர். கர்த்தராகிய இயேசுவும், 'இதோ வானமும் பூமியும் என்னுடையது. அவர்கள் வானத்துக்கு ஏறினாலும் நான் அங்கிருப்பேன்! அல்லது பாதாளத்தில் படுக்கை போட்டாலும் இங்கும் இருப்பேன். கலங்காதே! திகையாதே!. உன் தேவனாகிய கர்த்தர் உனனோடு இருந்தது போல அவர்களோடும் இருப்பேன்' என வாக்கு கொடுத்திருப்பார். ரூபியும் பிள்ளைகளும் சென்னை வந்து பத்திரமாய் சேர்ந்தனர். பெரியப்பா தேவப்பிரியம் நாசரேத்தில் இருந்ததால் அங்கு போய்ச் சேர்ந்தனர்.

சுந்தர் எக்பர்ட் அவர்கள் தனது அக்கா மற்றும் தம்பியுடன்

பலவகையான மனஉளைச்சல், பிரயாணம், எதிர்காலத்தைக் குறித்த பயம், மேலும் மற்றவரை அண்டியிருக்க வேண்டிய சூழல். ரூபி பலவீனப்பட்டு நோய்வாய்ப் பட்டாள்.

சுந்தருக்கு அப்போது ஆறு வயது. தாயின் அணைப்புக்கு ஏங்கும் வயது. ஆனால் அச்சிறுவயதில் முழங்கால் படியிட்டு, "இயேசப்பா' எங்க மம்மி கண்ணை திறக்காம படுத்திருக்காங்க. எங்க மம்மிக்கு சுகத்தைத் தாங்க, எங்க மம்மியக் காப்பாத்துங்க' என்று வாய்விட்டு ஜெபம் செய்வான். அவனது ஜெபத்தை சுந்தரின் பாட்டியம்மா கேட்டு, கண்களில் நீர் பெருக, இந்தக் குழந்தை ஜெபத்தை கர்த்தர் கண்டிப்பாகக் கேட்பார். என வருகிறவர்கள், போகிறவர்களிடம் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆனால் கர்த்தரின் சித்தம் வேறாக இருந்தது. ரூபி ஒரு இருட்டு அறையில்தான் படுத்திருப்பார்கள். ஒரு நாள் அந்த அறையில் இருந்தவர்கள், பெருங்குரல் எடுத்து அழ ஆரம்பித்தனர். சிலர் சரோவையும், சிலர் சுந்தர், செல்வரையும் கட்டி பிடித்தபடி அழுதனர்.

சரோ - ஒரு அளவுக்கு நிலைமை புரியம் வயது. அம்மாவின் அறையைச் சுட்டிக் காட்டியபடி பே... பே... என அழ ஆரம்பித்தாள். சுந்தருக்கு ஒரு அளவுக்கு நிலைமை புரிந்தாலும் அங்கு போய் அம்மாவின் உயிரற்ற உடலைக் காண அஞ்சினான். ஆனால் மற்ற காரியங்கள் மடமடவென நடந்தன. சுந்தர் 'அப்பா இருந்தால் நன்றாக இருக்குமே' என ஏங்கினான். நாட்கள் மறைந்து வருடங்கள் ஆயின. சுந்தர் படிக்க வேண்டுமே!.

தூத்துக்குடியில் உள்ள ஞானஜெபமணி ஆசிரியர் வீட்டில் தங்கி சுந்தர் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. சரோவை செவித்திறனற்ற பள்ளி விடுதியில் சேர்த்தார்கள்.

செல்வர் சிறுபிள்ளை. ஆகவே பெரியப்பா வீட்டில் தங்க வைத்தனர் இப்படி தங்கும் வேளையில் சுந்தர் கால்டுவெல் பள்ளியில் சேர்க்கப்பட்டதும் விளையாட்டுப் பிரியனான அவன் விளையாட்டு விழாவில் பங்கு பெற்று வெற்றிகளைக் குவித்ததையும் ஆரம்பத்தில் கண்டோம். ஆங்கிலக் கதைப்புத்தகங்கள் படிப்பதிலும் அதிக ஆர்வம் காட்டினான். நன்கு வாசிக்கும் திறன் பெற்றவனாகக் காணப்பட்டான். மற்ற பையன்களுக்கு ஆங்கில வார்த்தைகளுக்கு அர்த்தம் சொல்லும் தோழனாகச் செயல்பட்டான்.

எட்டாம் வகுப்பு மாணவர்களிடையே பேச்சுப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்து. சுந்தர் அதில் பங்கு பெற ஆயத்தமாக அமர்ந்திருந்தாலும், தலைசூடாகி வலிக்க ஆரம்பித்தது. ஆனால் போட்டியில் பங்குபெறும் ஆர்வம் காரணமாகத் தலைவலியைப் பெரிது படுத்தவில்லை. சுந்தரின் முறை வரும்போது தலைவலி நினைவு வரவில்லை. திக்கல் திணறல் இல்லாமல் நேர்த்தியாகப் பேசிவிட்டு அமர்ந்தான். போட்டி முடிந்ததும் முடிவுகள் அறிவிக்கப்பட்டது. எல்லோரும் எதிர்பார்த்தபடி சுந்தர் முதல் பரிசைத் தட்டிச் சென்றான். ஆனால் சுந்தருக்குத் தலை தெறித்து விழும்படியாக தலைவலி இருந்தது. வீட்டுக்குச் செல்லும்போது உடலும் சூடாக நல்ல காய்ச்சல் அடிக்க ஆரம்பித்தது. நூறு டிகிரிக்கு மேல் இருக்கும். டாக்டரிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டும் காய்ச்சல் குறைந்தபாடில்லை. ஆசிரியர் வீட்டில் அவர் மனைவி மனம் பதைபதைத்தது. இரண்டு மூன்று நாள் காய்ச்சல், விட்டபாடில்லை. ஒரு வாரத்திற்குப்பின் சுந்தர் லேசாக கண்களைத் திறந்து பார்த்தான். அருகில் ஒருவரும் இல்லை. மெதுவாக கைகளை ஊன்றி எழ முயற்சித்தும் இடுப்புக்குக் கீழ் அசைய மறுத்தது.

யாரிடம் கேட்பது? வீட்டில் சத்தமே இல்லை. திரும்பவும் முயற்சித்தபோது, இடது கையை படுக்கையில் ஊன்ற முயற்சித்த போது, அதுவும் செயல்படவில்லை. மூளை கட்டளை இட்டும் கால்கள் செயல்பட மறுத்தன. ஆமாம்! குழந்தைகளைப் பயங்கரமாகத் தாக்கும் 'போலியோ' அரக்கன் சுந்தர் எக்பர்ட்டின் கால்களையும், இடது

கையையும் பழிவாங்கிவிட்டான். போலியோ வியாதியைக் குறித்த விழிப்புணர்வு இல்லாத நேரம். மெதுவாக விசும்பி அழ ஆரம்பித்த அவனை ஆசிரியர் மனைவி தேற்றும்போது, அவன் நிலைமை புரிந்து வெகுவாய் வேதனைப்பட்டார்கள். குடும்பமே அதிர்ச்சிக்குள்ளானது. ரங்கூனிலிருக்கும் எக்பர்ட்டுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. அதுபோய் கிடைக்க தாமதமானாலும், தன் சேமிப்பு முழுவதையும் எடுத்துக் கொண்டு ஓடி வந்தார். பிள்ளையைத் தூக்கிக் கொண்டு, பல மருத்துவர்கள், மற்றும் ஆலோசனைகளைக் கேட்டும் பலனில்லை. இரு கால்களும், இடக்கையும் துவண்டு தொங்கின. 'தன் அருமைத் தந்தை' வந்து விட்டார் எப்படியும் தன்னை குணப்படுத்தி விடுவார் என்ற நம்பிக்கை சுந்தருக்கு அதிகமாக இருந்தது.

சிகிச்சைகள் பலனளிக்கவில்லை என்பது எக்பர்ட்டை அதிகச் சோர்வுக்குள்ளாக்கியது. மனைவியின் பிரிவால் தனிமை, பிள்ளைகள் மற்றும் தான் வேலையற்று இருப்பது என பல நெருக்கடிகளுக்குள்ளாக எக்பர்ட் கடந்து போனார்.

இப்படிப்பட்ட சூழலில் எக்பர்ட்டின் மூத்த சகோதரி பாக்கியம் தவமணி மகள் ஜெபக்கனியின் கணவர் ஏ.ஜி.ஜெபராஜ் என்ற குருவானவர் முதல் இந்தியப் பேராயராகத் திருநெல்வேலி திருமண்டலத்தில் பதவி ஏற்றார். யார் இந்த ஏ.ஜி.ஜெபராஜ், அவரைப் பேராயராகத் தெரிந்தெடுக்க என்ன காரணம் என்ற கேள்வி உங்களுக்குள் வருகின்றதா? உங்களுக்குள் வந்ததோ இல்லையோ! எனக்கு வந்தது. 'இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்' என்ற நூலில் அதற்கு பதில் இருந்தது.

பிஷப் ஜெபராஜ் :

டாக்டர் கிருபாகரனின் அன்பு ஆச்சரியமானதாக இருக்கிறது. அண்ணன், தம்பி உறவில் ஆரம்ப நாட்களில் சுந்தர் சொல்லும் காரியங்களைத் தட்டாமல் நிறைவேற்ற பாடுபடுவார். பின்னான காலங்களில், கிருபாகரன் சொல்வதையெல்லாம் மறுப்பு சொல்லாமல் ஏற்றுக்

பேராயர் ஜெபராஜ் அவர்களின் குடும்பம்

கொள்வது சுந்தர் மட்டும் அல்ல சுகந்தத்தின் இயல்பாகவும் உள்ளது. இந்தக் குணம் இளவயதான கிருபாகரனுக்கு எப்படி வந்திருக்கும்? கிருபாவுக்கு சுந்தரிடம் அப்படி என்ன ஈர்ப்பு, எதனால்? போன்ற கேள்விகள் என்னைக் குடைந்தன. 2008ம் ஆண்டு திருநெல்வேலியில் சுகந்தம் தங்கியிருந்த வீட்டில் அவரை நேரில் பார்க்கும்போது இரண்டாவது கேள்வியைக் கேட்டேன். முதல் கேள்விக்கு பதில் தேடும்போது "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்' என்ற நூல் என் கையில் கிடைத்தது. திருநெல்வேலியில் ஒரு அப்போஸ்தலரைப் போல செயல்பட்ட பேராயர் ஜெபராஜின் நான்காவது குமாரன் தான் டாக்டர். மேஷாக் கிருபாகரன் என தெரிந்தது. பின்னே! புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்ற பழமொழிக்கு ஏற்றாற்போல் கர்த்தர்மேல் பிரியம் வைத்தவரும், இரவும் பகலும் வேதத்தில் தியானமாய் இருப்பவரும், இடைவிடாமல் ஜெபிப்பவரின் பிள்ளைக்கு அவரது சுபாவம் நிச்சயம் இருக்கும்.

இந்தியாவின் தென்பகுதியில் உள்ள சாயர்புரம் அருகில் உள்ள சிறிய கிராமமான சேர்வைகாரமடம் என்ற ஊரில் 28.03.1905ம் ஆண்டு ஜெபராஜ் பிறந்தார். ஏழு பிள்ளைகளில் இரண்டாவது பிள்ளை ஜெபராஜ். தன் 9 வது வயதில் இயேசுவை ஏற்றார். ஆரம்பப்பள்ளி வகுப்புகளை

உள்ளூர் மற்றும் அருகிலும், கல்லூரிப் படிப்பை திருச்சியில் எஸ்.பி.ஜி. கல்லூரியிலும் படித்தவர். சிறுவயதிலிருந்தே தனிமையில் ஜெபிக்க விரும்புவார். பின் 1933ம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள வேதாகமக் கல்லூரியில் பி.டி. முடித்தார்.

1990-ம் ஆண்டு திருநெல்வேலியில் தேவப்பிரியம் என்ற குருவானவரின் (சுந்தர் எக்பர்ட்டின் தாத்தா) மகளான தவமணியைத் தங்கமனுவேல் என்பவர் திருமணம் செய்தார். 15 வருடங்களுக்கு பின் ஜெபக்கனி என்ற மகள் பிறந்தாள். இவர்கள் சென்னையில் வசித்தனர். மறைதிரு. ஜெபராஜின் முதல் செய்தியை செயிண்ட் ஜான்ஸ் ஆலயத்தில் கேட்டு அவருக்கே ஜெபக்கனியைத் திருமணம் செய்து வைத்தனர்.

ஜெபக்கனி அம்மாவும் W.C.Cயில் படித்தவர். பியானோ இசைப்பதில் வல்லவர். ஜெபராஜ் 1947 ம் ஆண்டு இந்தியாவில் சமூகநலத்துறையில் சிறப்பான கல்லூரியாகக் கருதப்படும் (TISS) Tata Institute of Social Science யில் மும்பை நகர் சென்று படித்தார். குருவானவரானபின் கல்லூரியில் சேர்ந்து மதசம்பந்தமற்ற பாடங்களைப் படித்த சிறப்பு இவருக்குண்டு. மேற்படிப்பை அமெரிக்காவில் சிகாகோ நகரிலும் நியுயார்க்கிலும் படித்தார். 1951ம் ஆண்டு இங்கிலாந்து சென்று மேல்படிப்பு படித்தார். பின் திருநெல்வேலி வந்து பேராயர் செல்வினின் ஆலயக் குருவாக இணைந்தார். சிறிய சபையான நாகலாபுரத்திலிருந்து பெரியசபை வரை பணிபுரிந்து வந்தார்.

சபை ஊழியத்தில் வீடுகள் சந்திப்பது, ஆவிக்குரிய நூல்களை வாசிப்பது, தனிமையில் அதிகமாய் ஜெபிப்பது சொல்லப்போனால், இடைவிடாமல் ஜெபிப்பது அவரது பழக்கம். சபை பிரச்சனைகளுக்காகத் தனிமையில் ஜெபித்து நேரில் சந்தித்துப் பேசி பிரச்சனைகளைத் தீர்ப்பார். தன்னைத் தேடி வருபவர்க்கு ஜெபித்து ஆலோசனை தருவார். ஏழைகளுக்கு இரங்குவார். குருமாரை தகுதிபடுத்தத் தூண்டுவார். நியாயத்துக்குப் புறம்பாக எதையும் சொல்லமாட்டார். இத்தகைய சிறப்பியல்புகள் அவருக்கு

உண்டு. ஜெபக்கனி அம்மாளும் கணவருக்கேற்ற ஜெபிக்கும் மனைவியாக இருந்தார்கள். 1970 ஆம் ஆண்டு ஜெபராஜ் ஓய்வு பெறும் வரை 17 ஆண்டுகள் பேராயராகப் பணியிலிருந்தார். 17 ஆண்டுகள் பேராயராக இருந்தது சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டிய செய்தி. மக்கள் உத்தமரை விரும்புவார்கள் என்பதற்கு பேராயர் ஜெபராஜின் வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டு. தங்கள் மூன்று குமாரரையும் ஒரே குமாரத்தியையும் கர்த்தருக்குள் வளர்த்தனர். ஆகவே பெற்றோராகிய ஜெபராஜ்-ஜெபக்கனி தம்பதியரின் சாயல் பிள்ளைகளுக்கு இருப்பதால் அவர்களும் மற்றவரிடம் அன்புடனும், பண்புடனும் பழகுகின்றனர்.

எக்பர்ட் ஒரு வேதசிரோன் மணியான குருவானவர். தேவபிரியத்தின் மகன் அல்லவா? அவர் மகனுக்காக ஏறெடுத்த ஜெபம் கர்த்தரின் சமூகத்தை எட்டியது. பேராயர் மனைவி ஜெபக்கனியின் இருதயத்தைத் திறந்தார். ஜெபக்கனி இளவயதுப் பெண்ணாக இருந்தாலும், தன் மாமா பையனுக்காக மனதுருகினாள். அவளுக்கு அப்போது நான்கு பிள்ளைகள். மூத்தவன் ராஜசேகரன், அடுத்தவன் மங்களகரன், மூன்றாவது மகள் சுகந்தி. கடைசியாக மேஷாக்கிருபாகரன். அதில் கடைசி பையனை அழைத்துக் கொண்டு நாசரேத்தில் உள்ள, எக்பர்ட் தகப்பனாரின் பூர்வீக வீட்டுக்குச் செல்வது உண்டு.

சுந்தர் எக்பர்ட் பள்ளி செல்வதை நிறுத்தி விட்டான் ஆகவே நாசரேத் வீட்டில் தங்கியிருந்தான். எஸ்.தாமஸ் என்ற அன்புள்ள தலைமை ஆசிரியர், சுந்தர் படிக்க உதவுவதாகக் கூறினார். ஆனால் பள்ளிப்பிள்ளைகள் சுந்தரை நடக்க இயலாதவன் என கேலி செய்வார்களோ, என அஞ்சி வீட்டில் இருக்க வைத்தனர். அச்சமயம், சுந்தரின் உறவினர் எம்.டி. தாமஸ் பல புத்தகங்களை எடுத்துக் கொடுத்துப் படிக்க உதவினர்.

கிருபாகரனை அழைத்துக் கொண்டு ஜெபக்கனி நாசரேத் செல்லும்போது அவனுக்குப் பத்து வயதிருக்கலாம். சுந்தருக்கு பதினேழு வயதாகியிருந்தது. ஜெபக்கனியின்

பின்னால் வந்து நின்ற கிருபாகரனை சுந்தருக்குப் பிடித்திருந்தது. தன்னைவிட வயதில் இளையவனாகத் தெரிந்தாலும் கெட்டிக்காரனாகத் தெரிந்தான். சில நேரம் ஜெபக்கனியின் மூத்த மகன் ராஜாவும் வருவதுண்டு. ஜெபக்கனி வீட்டில் உள்ள மற்றவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும்போது கிருபாகரனும் சுந்தரும் பேசிக் கொண்டிருப்பார்கள். தனிமையில் தவித்த சுந்தருக்கு கிருபாகரனின் நட்பு புத்துணர்வைக் கொடுத்தது. சுந்தர் தீவிர புத்தக ரசிகன். ஆகவே தான் படித்த துப்பறியும் நூல்களை, கொஞ்சமும் சுவாரசியம் குறையாமல் கிருபாவுக்குக் கதையாகச் சொல்வான். அதுமட்டுமல்லாமல் கணக்குகளை சுலபமாய் செய்வது எப்படி என்ற நுணுக்கங்களையும் சொல்லித் தருவது உண்டு. மொத்தத்தில் கிருபாவுக்கு சுந்தர் ஒரு கதாநாயகனாகத் தெரிந்தான்.

பதினேழு வயது வாலிபன் பத்து வயது பொடியனான கிருபாவுடன் அன்புடன் பேசிப் பழகுவதால் சுந்தரை எல்லா பொடிசுகளுக்கும் பிடித்தது. சுந்தரைப் பார்க்கப் போவதில் கிருபா முந்திக் கொள்வது இயல்பாகிவிட்டது. சுந்தருக்கு தெரியாதது எதுவுமே இல்லையோ என்ற அளவுக்கு, உலக ஞானத்தை சேகரிப்பதில் சுந்தர் வல்லவன். நடக்க முடியாத நிலையிலும், கிருபாவின் எண்ணங்களில் சுந்தர் ஒரு ஸ்பைடர்மேன் போல பறந்து திரிந்தான். இவர்கள் நட்பு வளர்ந்தது.

1951 ஆம் ஆண்டு சுந்தர் மற்றொரு இடியைத் தாங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. சுந்தரின் தகப்பனார் எக்பர்ட் மனவேதனையில் கஷ்டப்பட்டவர், திடீரென மரணம் அடைந்தார். வேதனையைப் பகிர்ந்து கொள்ள இயலாத நிலையில், தகப்பனை அதிகம் நேசித்த சுந்தர் உடைந்து போவதற்குப் பதில் உறைந்து போனான். உணர்வுகள் உருவாகி உருகி வழிவதை விட்டு, ஏதோ ஒரு மோன நிலையில், வெறித்த பார்வையுடனும், பேச விருப்பமற்ற நிலையில் மனிதர்களைத் தவிர்த்து ஒதுங்கி வாழத் தொடங்கினான். மனதில் தான் ஒரு தாய் தகப்பன் அற்றவன் என்ற சுயபட்சாதாபம் வந்திருக்கலாம்.

மரணமடைந்த தகப்பன் அருகில் அமர முடியவில்லை. அவரது சவப்பெட்டியைத் தோளில் சுமக்க முடியவில்லை. இப்படி பல இயலாமைகள் உளியைப் போல் கூர்மையாகச் செதுக்க ஆரம்பித்து எதற்கும் அசைந்து கொடுக்காத உறுதியுள்ள மனிதனாக உருவாக உதவிற்று.

ஒரு மாலை நேரம் பள்ளியிலிருந்து களைத்துப் போய் வந்த கிருபாகரனுக்கு ஒரு மகிழ்ச்சி காத்திருந்தது. அம்மா ஜெபக்கனி அவனை மௌனமாக அழைத்துச் சென்று வீட்டின் முன்பகுதி அறைக்கு அவனைச் செல்லத் தூண்டினார்கள். மெதுவாக உள்ளே சென்ற கிருபாகரன் அங்கே படுத்தபடி புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த சுந்தரைக் கண்டு ஓடிப்போய் 'சுந்தர் அண்ணா!' என்றபடி அவரது கரங்களைப் பற்றிக் கொண்டான். சுந்தர் புன்முறுவலுடன் அந்த குட்டிப்பையனிடம் 'கிருபா! நான் இங்கேயே, உன் வீட்டுக்கே வந்து விட்டேன் தெரியுமா?' என்றார். 'நெஜமா!ம் ...... ம் ..... அம்மா ஒன்றும் சொல்லவில்லை. நீங்கள் இங்கே இருப்பது எனக்குச் சந்தோஷம்' என்று ஆரவாரம் செய்தவன் பக்கத்திலிருந்த ஸ்டூலை எடுத்துப் போட்டபடி, 'ம் சொல்லுங்க, அப்புறம் என்ன புத்தகம் படிச்சீங்க?' என்றபடி பேச ஆரம்பித்தான்.

தானியேலின் நண்பர்களைப் போல சுகத்திலும், துக்கத்திலும், வாழ்விலும், தாழ்விலும், உடன் ஊழியக்காரனைப் போன்ற அன்புத் தோழனாக உடன் இருந்தார் மேஷாக்கிருபாகரன்.

பேராயர் ஜெபராஜ் அவர்கள்
Dr.மேஷாக் செல்லம்
திருமணத்தில்

2

மேஷாக் கிருபாகரன் சுந்தர் எக்பர்ட்

விடியலைத் தேடி

'பீனிக்ஸ் (Phoenix) பறவையினை எரித்துப் போட்டாலும், அதன் சாம்பல்கள் ஒன்று சேர்ந்து திரும்ப அந்தப் பறவை உயிர்பெற்று பறந்துவிடுமாம்' என அந்த பறவை பலம் பெற்று எழுச்சி பெறும் என்பதற்கு உதாரணமாகக் கூறுவர். அதுபோல சுந்தருக்கு, தந்தையின் மரணம் சற்று சோர்வடையச் செய்தாலும், திரும்ப அவனுக்குள் இருந்த உத்வேகம், வீறுகொண்டு எழ ஆரம்பித்தது. கர்த்தரின் கிருபை அவனைத் தாங்கி அவருக்குப் பயப்படும் பயத்தை மனதில் தந்து அவர் செல்ல வேண்டிய வழியைக் காட்டியது.

எதைக்கண்டாலும் வாசிப்பது, வாசிப்பது என பலவகையான நூல்களை வாசிப்பதில் சுந்தர் தீவிரப்பட்டான். பேராயர் வீடு என்பதால் வார இதழ்கள், தினசரிகள், கிறிஸ்தவ பத்திரிக்கைகள், என பஞ்சமில்லாமல் வந்தன. ஆங்கிலப் பத்திரிக்கைகளை விரும்பிப் படிக்கும் சுந்தர், சிறுவர்களுக்கான 'சங்கர்லால் வீக்லி' என்ற பத்திரிக்கையையும் விட்டு வைக்கவில்லை. அப்பத்திரிக்கையில் வரும் புதிர்களைப் போட்டு அகில இந்திய அளவில் பரிசு பெற்றான்.

தங்கியிருக்கும் அறையைச் சுற்றி கண்களை சுழல விட்டபோது ஒரு பழைய கிராம போன் பெட்டியும், ஒரு அலாரம் டைம்பீஸ் மற்றும் ஒரு சுவர்க் கடிகாரம் தூசு படிந்து ஓடாமல் கிடந்தன. அவை சுந்தருக்குள் இருந்த பொது அறிவைத் தட்டி எழுப்பின. அவைகளைச் சுத்தம் செய்து ஸ்குரூடிரைவரின் உதவியால் கழற்றிப் பார்க்க 'நான் ஏன் ஓட்டத்தை நிறுத்தினேன் என விளக்குவது போல, சில ஸ்குரூக்கள் கழன்று விழுந்திருந்தன. அதை எடுத்து உரிய இடத்தில் மாட்டி சாவி கொடுத்த போது டிக்.. டிக்.. என தெளிவாக இதயம் துடிக்க ஆரம்பித்தது.

அந்த கடிகார ரிப்பேர் புது உற்சாகத்தைக் கொடுத்ததால், கிராமபோன் மற்றும் அலாரம் டைம்பீஸ் ஆகியவைகளையும் ரிப்பேர் செய்து ஓட வைத்தபோது

'என்னால் உயிரற்றவைகளுக்கும் உயிர் கொடுக்க முடியும்' என்ற நம்பிக்கை துளிர்விட ஆரம்பித்தது. 'சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிற' (ஏசா 40:29) தேவனுடைய கரத்தில் அல்லவா, சுந்தர் இருந்தான். இனியும் எப்படிப்பட்ட பாதையில் சுந்தரை கர்த்தரின் கரம் அழைத்துச் சென்றது எனப் பார்க்கலாமா? சுந்தரின் வாசிக்கும் ஆர்வம், மற்றும் எதையாவது செய்து உருப்படியாக நேரத்தை பயன் உள்ளவகையில் செலவழித்ததை பேராயர் ஜெபராஜ் கண்டார்.

ஒருநாள் பேராயர் ஜெபராஜ், 'சுந்தர், பார்வையற்ற குழந்தைகள் பக்கத்தில் உள்ள பார்வையற்றோர் பள்ளியில் இருக்கின்றனர். இவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களை சொல்லித்தர முடியுமா? ' என்றார்.

'கண்டிப்பாக, செய்கின்றேன் அண்ணாச்சி, அவர்களை ஒருமுறை பார்த்து வரலாமா?' என்றான்.

பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வருவது கடினம் என்பதால், பிள்ளைகள் தங்கியிருக்கும் விடுதியில் ஒரு அறை ஒழுங்கு செய்யப்பட்டது. மறுநாளே அங்கு போன போது, பார்வையற்ற சிறார்கள், ரயில் போல செல்வதும், வகுப்பறைக்குச் செல்வதும், தட்டை ஏந்தியபடி செல்வதும் சுந்தருக்கு வியப்பாக இருந்தது. இவை எல்லாவற்றிலும் சிறுவர்களின் முகங்களில் அலாதியான களிப்பு தேங்கியிருந்தது. கலகலப்பிற்கோ, பஞ்சமில்லை அவர்களது குறும்புத்தனம் ரசிக்கக்கூடியதாக இருந்தது. இவர்களைப் பார்த்த சுந்தரின் மனம் உருகிற்று. 'இந்தச் சிறுவர்களுக்கு எதைச் செய்தாலும் அதை எனக்கே செய்தீர்கள்' என்ற வசனமும் நினைவுக்கு வந்தது. ஆகவே அவர்களுக்குக் கல்வி கற்பிக்க சுந்தர் தீர்மானித்தான்.

பேராயர் ஜெபராஜ் வீட்டில், பிள்ளைகள் பள்ளிக்குச் சென்று விட்டால் பேரமைதி ஆட்சி செய்யும். ஆனால் இந்தப்

பள்ளியில் பறவைகள் கீச்சிடுவதைப் போல சிறுவர்களின் சத்தம் எப்போதும் கேட்டது. சுந்தர் ஒரு புதிய உலகிற்கு வந்தது போல புத்துணர்ச்சி பெற்றான். அடுத்தது என்ன நடக்கும்? என்ற கேள்வி அவர் உள்ளத்தில் வராமல் இல்லை. ஆனால் சுந்தரிடம் அவர்கள் அன்பைக் கொட்டியபின் ஒட்டிக்கொள்ள ஆரம்பித்தனர்.

விசுவாசிகளுக்கு மிகவும் பிரியமான வார்த்தை 'கூடாதது ஒன்றுமில்லை' என்பதாகும். இந்தத் தாரக மந்திரத்தைப் பார்வை அற்ற சிறுவர்களிடம் அடிக்கடி கூறுவான். கிடைத்த நேரத்தில் பாடங்களை எடுக்க ஆரம்பித்தான். ஆங்கிலத்தை அழகாகக் கற்றுக் கொடுத்தான். சரித்திரம், பூகோளம் என எதையும் விட்டு வைக்கவில்லை. பிள்ளைகள் சீக்கிரத்தில் கற்றுக் கொள்ள ஆரம்பித்தனர்.

மாணவர்களும் இதற்குப் பிரதி உபகாரமாக சுந்தரிடம் பல்வகை விளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்தனர். ஒருமுறை விடுதி அருகில் ஒரு காலி மரப்பெட்டி கிடந்தது. அது ஒரு பெரிய பெட்டி. சுந்தர் அதற்கு நடுவில் இரு சக்கரங்களை டயர் போன்ற பொருட்களை வைத்து செய்து மாட்டினார், முன்பகுதியில் இழுத்துச் செல்ல கயிறு ஒன்றைக் கட்ட அது ஒரு வண்டியின் அமைப்பைப் பெற்றது.

சில சிற்பிகள் வெறும் கல்லைப் பார்த்ததும் யானை, சிங்கம், குரங்கு என்று கற்பனை செய்து அதை அப்படியே வடித்து விடுவர். இப்படி பாறைகளை கவின்மிகும் சிற்பங்களாக மாற்றிய பெருமை சென்னைக்கு அருகில் உள்ள மாமல்லபுரத்தை உருவாக்கிய மாமல்லரைச் சேரும். அது போல சுந்தருக்கும் அங்கு கிடந்தது வெறும் மரப் பெட்டியாகத் தோன்றவில்லை. வண்டியாகத் தோன்றவே அதை அப்படியே வடிவமைத்து விட்டார்.

பொடியன்களும், அந்த வண்டியில் சுந்தரை அமர்த்தி ஒரு இடத்திலிருந்து மறு இடத்திற்கு இழுத்துக்கொண்டு சென்றுவிடுவர். அப்படி நகர்த்திச் செல்லும் போது ஆரவாரம்

பெரிதாக இருக்கும். சுந்தரின் சிரிப்பும் சரிக்கு சரியாக கேட்கும். இவர்களது சிரிப்பு சத்தத்தைக் கேட்டவர்கள், இவர்கள் ஊனமுற்றவர்களா? என்று ஆச்சரியப்படுவார்கள். இந்தச் சிறுவர்களின் ஐக்கியத்தால் சுந்தர் அதிக தன்னம்பிக்கையைப் பெற்றான்.

இந்த அனுபவத்தின் விளைவாகவே படிக்க முனைந்தான். 1940களில் இந்த விடுதிக்கு வந்த சுந்தரை முழுமனிதனாக மாறவும், தன் வேலைகளைத் தானே செய்யவும் பழக்கிற்று என எட்வர்ட் ஜோனத்தான் என்ற அன்றைய பார்வையற்ற பள்ளி முதல்வராக இருந்தவர் நினைவு கூறுகிறார். பின்னால் பி.யூ.சி மற்றும் பி.ஏ. படிக்கும் பிள்ளைகளுக்கு ஆங்கில டியூஷன் சுந்தர் எடுத்தார். அநேகர் தேர்ச்சி பெற்றனர். சுந்தர் மெட்ரிக்குலேஷன் தேர்வு எழுதி 90% மார்க் எடுத்தார். பின்னாட்களில் பி.பி.ஏ பட்டப்படிப்பும் படித்தார்.

சுந்தர் இயலாமைகளுக்காக ஒருபோதும் வருத்தப்பட்டதில்லை. இருக்கும் ஒரு கை, இரண்டு கண்கள், காதுகள், வாய்பேசும் திறன், தீர்க்கமாகச் சிந்திக்கும் மூளைக்காகக் கர்த்தருக்கு நன்றி செலுத்த தவறுவதில்லை. தன்னிலையினை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இருந்தது.

பள்ளிப் பிள்ளைகளுடன் இருந்தது சந்தோஷமாக இருந்தாலும், உணவு வகைகளா? அல்லது இடமாற்றமா எது எனத் தெரியவில்லை அவருக்கு அடிக்கடி வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. மருத்துவத்திற்காகத் திரும்பவும் பேராயர் பங்களா வந்து சேர்ந்தார் சுந்தர். அப்பொழுது ஒருநாள் பகல் வேளையில், பேராயர் வீட்டுக்கு வெளிநாட்டு விருந்தினர் சிலர் வந்திருந்தனர். ஜெபக்கனி ஜெபராஜ் அம்மா அவர்களை சுந்தருக்கு அறிமுகம் செய்யும் நோக்கில், அவர் அறை நோக்கி அழைத்து வந்தார். அவர்கள் அருட்பணியாளர்கள். 'ஹலோ சுந்தர்? என்ன செய்கின்றாய்? என்று கேட்டபடி ஜெபக்கனி அம்மாளுடன் வந்த விருந்தினர் விசாரித்தார். சுந்தர் அமைதலுடன் நிமிர்ந்து பார்த்தபோது, சிரித்த முகத்துடன் சிநேகப்பாவத்துடன் தன் வலக்கையை நீட்டி, ஹலோ!

சுந்தர்! என் பெயர் கோலே. சுவிட்ஸர்லாந்து நாட்டிலிருந்து வந்திருக்கின்றேன். நான் கடிகார நுட்பம் மற்றும் அதன் தொழில்நுட்பம் பயின்றவன். உனக்குக் கடிகாரத்தொழில் நுட்பத்தில் ஆர்வம் அதிகமாமே! என்றார்.

புதிய ஆர்வத்துடன் அவர் கையினை மெதுவாகப் பற்றி குலுக்கி, 'எனக்கும் கடிகாரத் தொழில்நுட்பத்தில் ஆர்வம் அதிகம்' என்றபடி அவர் முகத்தையே பார்த்தார் சுந்தர். சுவிட்சர்லாந்தில் கடிகாரத் தொழில் குடிசைத் தொழில்போல அனைவரும் ஈடுபட்டு செய்யும் பழக்கம் உண்டு. சுவிஸ் கடிகாரங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. ஆகவே, கடிகாரத் தொழிலில் சுவிஸ் நாட்டவர் நிபுணர்களாகக் கருதப்பட்டனர். கோலே, அங்கிருந்த நாற்காலியினை எடுத்துப் போட்டுக்கொண்டு அதில் அமர்ந்தபடி பேச ஆரம்பித்தார்.

'கடிகாரத் தொழில்' நுட்பம் கற்க சுமார் பதினாறு வருடப் பயிற்சி தேவைப்படும். கடிகாரம் செய்பவர்கள் அதற்குரிய கருவிகளைத் தாங்களே செய்வார்கள். சுமார் எட்டு மாணவர்களுக்குக் கற்றுத்தர நாற்பது படிகளைக் கற்றுக் கடக்க வேண்டும். ஒரு படிக்கும், அடுத்த படிக்கும் இடையில் மிக நுணுக்கமான வேறுபாடே காணப்படும். அந்த வேறுபாடு நூற்றில் ஒரு பங்குதான் மாறுபடும். இந்த நாற்பது படிகளையும் கற்க ஒரு மாதம் அனுமதிக்க முடியும் என்றார். மற்றவர்கள் இதைக்கேட்டு, பல வகையாக விமர்சித்தாலும் சுந்தர் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். இக்கடுமையான பயிற்சியினை டோனாவூர் விடுதியில் உள்ள பெற்றோர்களற்ற பிள்ளைகள் சுமார் 12 பேருக்கு முதலில் கற்றுத்தர திட்டமிட்டிருப்பதாகக் கூறினார். சுந்தர் சம்மதிக்கவே, முதல் 6 பேரில் ஒருவராக இணைந்தார்.

சுந்தர் எக்பர்ட் அவர்கள்
கடிகாரம் சரிசெய்தல்

ஒருமாத கடுமையான பயிற்சிக்குப் பின் அக்கடுமையான 40 படிகளை ஒரே ஒரு பையன் தான் வெற்றிகரமாகக் கடந்திருக்கிறான். அது வேறுயாருமல்ல, நம் சுந்தர் தான். மற்ற இருவர் வேலைகளை முடித்தனர். மற்றவர்கள் பயிற்சியினை முடிக்கவில்லை. கோலே, ஜெபக்கனி, மற்றும் பேராயர் ஜெபராஜ் அதிக மகிழ்ச்சியில் ஆழ்ந்தார்கள். முதல் படியைத் தாண்ட இயலாமல் போனவர்களும் உண்டு.

டோனாவூர் ஐக்கியத்தில் பன்னாட்டு அருட்பணியாளர்கள் வந்து மாணவர்களுக்கு, பல தொழில்களைக் கற்றுத்தந்தனர் (உம்.) இங்கிலாந்து, கனடா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களின் பணியும் அர்ப்பணிப்பும் குறிப்பிடத்தக்கவை.

இரவு உணவு அருந்தியதும் அனைத்து அருட்பணியாளர்களும், ஓய்வாக ஓர் இடத்தில் கூடுவர். அப்படிப்பட்ட நேரத்தில் அன்றைய நிகழ்வுகள், தங்கள் நாடுகளிலிருந்து வரும் செய்திகளை பரிமாறிக் கொள்வர். அப்படி கூடும்பொழுது ஒரு நாள் கோலே ஒரு சவால் விட்டார். அவர் கையில் உள்ள சில கடிகார ரிப்பேர் செய்யும் கருவிகளை மேசையில் போட்டார்.

'இதோ இந்த கடிகாரத் தொழில்நுட்பக் கருவிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவை எனக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் என்பதே, அச்சவால். பலர் வந்து அக்கருவிகளை எடுத்து திருப்பித்திருப்பி பார்த்தனர். நாட்டின் பெயர் போடப்பட வில்லை. ஆனால் அக்கருவிகளைக் குறித்து 'நன்று, மிக நன்று, எக்ஸலண்ட்! சூப்பர்! போன்ற பாராட்டுக்களை வெளிப்படுத்தினர். ஆனால் குறிப்புகள் இல்லாதபடியால் எந்த நாட்டைச் சேர்ந்தது என யூகிக்க இயலாமல் குறிப்பாக 'இவை இங்கிலாந்தை சேர்ந்ததாக இருக்கலாம்' என்றனர். சிலர் இல்லை, இல்லை இவை சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்ததாகத்தான் இருக்க முடியும். அவர்கள்தான் இவ்வளவு நுணுக்கமாகச் செய்வர்'

என தங்கள் சொந்த நாடுகளைக் குறித்துப் பெருமையாகப் பேசிக்கொண்டனர்.

இந்த விமர்சனங்களைக் கேட்ட கோலே, "உங்களுக்கு ஒருவேளை ஆச்சரியமாக இருக்கலாம், இவை இந்தியாவில் ஏன் நம் டோனாவூர் பெல்லோஷிப்பில் கொடுத்த பயிற்சியில் இங்குள்ள சுந்தர் எக்பர்ட் என்ற ஊனமுற்ற மாணவர் உருவாக்கிய கருவிகள்" என்றதும், கூட்டத்தில் பெருத்த சலசலப்பு ஏற்பட்டது. அதுமட்டுமல்ல, கோலேயின் உழைப்பு மற்றும் வெற்றியினைப் பலர் பாராட்டினர்.

கோலே அதிக நாள் இந்தியாவில் இருக்க இயலவில்லை. ஆகவே கடிகாரத் தொழில் குறித்து சொல்லித்தர வேண்டிய பயிற்சிகளை குறுகிய காலத்தில் சொல்லிக் கொடுத்து சுந்தரைத் திருப்திபடுத்தினார். மேலும் சுவிஸ் நாட்டிலிருந்து கொண்டு வந்த விலையுயர்ந்த கடிகாரத் தொழில்நுட்பக் கருவிகளையும் அது குறித்த அலங்காரப் பொருட்களையும் சேர்த்துப் பரிசாகக் கொடுத்துவிட்டுச் சென்றார். கோலே கொடுத்த உற்சாகம் சுந்தரின் தன்னம்பிக்கையை அதிகம் வளர்த்தது. சுந்தரும் கோலே அவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதி அவரது தொடர்பைத் தக்க வைத்துக்கொண்டார்.

கற்றுக் கொண்ட கலையினைக் கிடப்பில் போடாமல், சாயர்புரம் வீட்டின் வெராண்டாவில் சிறிய அளவில் கடிகார ரிப்பேர் கடை ஒன்றை உருவாக்கினார். தொழில் முறையில் சுந்தரைப் போன்ற கடிகார ரிப்பேர் நிபுணர்கள் மதுரை வரை அந்த நாட்களில் யாரும் கிடையாது. கூலியும் மற்றவர்களைக் காட்டிலும் ஒரு ரூபாய் அதிகம் வாங்குவார்.

'அற்பமான அந்த ஆரம்ப நாட்களை அசட்டை பண்ண' இயலாதபடி சுந்தருக்கு உயர்வைக் கொடுக்கும் ஏணிப்படியாக இருக்கும் என சுந்தருக்கே தெரியாது.

பால் மாசிலாமணி என்ற ஆசிரியர் சுந்தர் மீது தனிப்பட்ட முறையில் அன்பைக் காட்டுபவர். நல்ல ஆங்கில நூல்களைக் கொடுத்து உற்சாகப்படுத்துவார். சுந்தரின்

விருப்பமான நூல்கள் பி.ஜி. வேர்டி ஹவுஷ் என்பாரின் நூல்கள் ஆகும். படித்து முடித்த புத்தகங்களின் முன்பக்கத்தில் சிறியதாக ஒரு பூனை வரைபடத்தைப் போட்டுவிடுவார். ஒரு அடையாளத்திற்கு என்றாலும், பின்னாளில் ஒரு வெள்ளைக்கார அம்மாவின் நூலில் அப்படிப் படம் போட்டதற்கு நன்றாக வாங்கிக்கட்டிக் கொண்ட அனுபவமும் உண்டு.

சுந்தர் கடிகார வேலையில் மட்டுமல்லாது, படுக்கை அறையிலும் தொழில்நுட்ப வேலைகளைச் செய்திருந்தார். ஒரு நீளக் கம்பியின் ஒரு முனையை வளைத்து வைத்து அதன் உதவியால் கட்டிலின் அருகில் அமர்ந்தபடி விளக்கைப் போட, அணைக்க அமைத்தார். அடுத்ததாக அவரது கவனம், டைப்ரைட்டிங் கருவியில் விழுந்தது. வழக்கம்போல அதை எடுத்து ரிப்பேர் செய்து இடது கையால் அணைத்துப் பிடித்தபடி, வலக்கையால் கீபோர்டில் அடித்துப் பழகி வெகு விரைவில் மற்ற தொழில் முறையில் டைப் அடிப்பவர்களைக் காட்டிலும் அதிக வேகமாகப் பழகினார். பின்னாளில் அவை சுந்தருக்கு பலவழிகளில் உதவியது.

ஒருநாள் பேராயர் ஜெபராஜின் மூத்த மகன் ராஜா ரேடியோ ரிப்பேர் குறித்து சுந்தரிடம் பேசினார். அவ்வளவுதான், சுந்தர் அதையும் விட்டு வைக்கவில்லை. ரேடியோவை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து மாட்டி அதிலும் வல்லுநர் ஆனார். டேப்ரிக்கார்டுகளைப் பயன்படுத்துதலை பழகியதன் மூலம் பொதுநிகழ்ச்சிகள், குடும்ப விசேஷங்களில் குரல்களை சுந்தர் பதிவு செய்து தருவதை மற்றவர்கள் அதிகமாகப் பயன்படுத்தினர்.

சுந்தரின் அறிவுப்பசி அடங்க மறுத்தது. தனிமையும் அவரை வாட்டாமல் இல்லை. மேற்கூறிய கருவிகளைப் பழுது பார்ப்பதன்மூலம் அநேகரது தொடர்பு கிடைக்க ஆரம்பித்தது. அவர்கள்மூலம் பொது அறிவு, அரசியல், நாட்டு நிலவரம், விலைவாசி போன்ற காரியங்களை அறிய ஆரம்பித்தார். வாடிக்கையாளர்களுக்குத் தகுந்த ஆலோசனை சொல்வதிலும் நகைச்சுவையாகப் பேசவும் ஆரம்பித்தார்.

இப்படி ஒவ்வொரு துறைக்குள் செல்லும்போது அங்கே ஒரு சிறிய கதவு திறப்பது போல் சுந்தர் உணர்ந்தார்.

காத்தரீன் பூத் மருத்துவமனை:

பேராயர் ஜெபராஜ், அவரது மனைவி ஜெபக்கனி ஆகியோரை காத்தரின்பூத் மருத்துவமனை பொறுப்பாளராக இருந்த டாக்டர் ஹாரி வில்லியம்ஸ் ஒருமுறை சந்திக்க வந்தார். டாக்டர். ஹாரி வில்லியம்ஸ் இங்கிலாந்து தேசத்திலிருந்து வந்த மருத்துவ அருட்பணியாளர். உருவிழந்த உறுப்புகளை சீரமைக்கும் ரணசிகிச்சை நிபுணர்.

ஜெபக்கனி அம்மையார், சுந்தரின் இடக்கை, கால்களை ரணசிகிச்சை செய்து நடக்க வைக்க இயலுமா? என்று முயற்சி செய்து பார்க்க வேண்டினார். டாக்டர். ஹாரி வில்லியம்ஸ் சற்று சிந்தித்தபின் சம்மதித்தார்.

1961ஆம் ஆண்டு இந்த அறுவை சிகிச்சை நாகர்கோவிலில் உள்ள காத்தரின்பூத் மருத்துவமனையில் நடந்தது. எதிர்பார்த்தபடி பிரமாதமான விளைவுகள் ஏற்படவில்லை. ஆனால் மருத்துவமனையில் பயங்கரமான வலி, வருத்தங்களுக்கு மத்தியில் அநேகரது அன்பு, கரிசனை, பராமரிப்பு போன்றவை சுந்தரின் மனதுக்கும் உடலுக்கும் இதமாக இருந்தது.

டாக்டர். ஹாரி வில்லியம்ஸ், வீரா வில்லியம்சன் என்ற மருத்துவர், உயர் தாதியர்கள் போன்ற நல்ல அருட்பணியாளர்களின் ஐக்கியம் கிடைத்தது. இவர்களைக் குறித்தும், காத்தரின்பூத் மருத்துவமனை என்ன நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது என்பதையும் பின்னால் அறியலாம். மருத்துவமனையில் மலர்ந்த முகத்துடன் காணப்பட்ட ஒரு சில நோயாளிகளில் சுந்தரும் ஒருவர்

ரணசிகிச்சை முடிந்து, கட்டிலில் வேதனையோடு சுந்தர் படுத்திருந்தபோது, டாக்டர் பென்வாக்கி என்பவர் ஒரு வாலிபனை அழைத்துக்கொண்டு சுந்தரைக் காணவந்தார்.

அந்த வாலிபர் தயங்குவதைப் பார்த்த் சுந்தர் ஒரு வினாடியில் அடையாளம் கண்டு கொண்டவராக 'ஹே! ஜேசன்!.. எப்படி இருக்கிறாய்? வா! உள்ளே! என்று உரிமையுடன் அழைத்ததும் வாலிபனான ஜேசன் தர்மராஜ் (பின்னாளில் திருநெல்வேலி பேராயர்) திகைத்தார். எப்படி நம் பெயர் இந்த நோயாளிக்குத் தெரிந்தது? என குழம்பினார். ஒரு சில வினாடிகளில் சுந்தரைப் புரிந்து கொண்டு, நீ. நீ...சுந்தர் எக்பர்ட் அல்லவா? தூத்துக்குடி கால்டுவெல், பள்ளியில் படித்த என் அருமை நண்பன் அல்லவா? என அகமகிழ்ந்தார்.

"சுந்தர்! உனக்கு ஏன் இந்த நிலை? என்னவாயிற்று?.. என ஆறுதலாகப் பேசி ஜெபித்தபின் சென்றார். சுந்தரின் கணித அறிவு, பேச்சுப்போட்டிகளில் வெல்லும் சாமர்த்தியம், விளையாட்டு வீரன்... இப்படி முடங்கிக் கிடக்கின்றானே! என வேதனைப்பட்டார் ஜேசன். பின்னான நாட்களில் அவர்கள் நட்பு வளர்ந்தது. திருமணக் காரியங்களைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் ஆரல்வாய் மொழியில் வி.டி.சியில் சுந்தர் மானேஜர் பொறுப்பு எடுத்தபோதும் இந்த நட்பு தொடர, காத்தரீன் பூத் மருத்துவமனை உதவியது.

அதே மருத்துவமனையில் சுந்தரை அடிக்கடி பார்த்து, பல நூல்களை வாசிக்க கொடுத்தது பால்மாசில்லாமணி அவர்கள் ஆவர். காத்தரீன் பூத் மருத்துவமனையில் வீரா வில்லியம்சன் அடிக்கடி வந்து சுந்தரைப் பார்த்து செல்லும்போதெல்லாம் அவருக்காக ஜெபிப்பார். கர்த்தராகிய கிறிஸ்துவை சுந்தர் அறிய வேண்டிய அவசியத்தைக் கூறுவார்.

சுந்தர் ஒரு வருட காலம் காத்தரீன் பூத் மருத்துவமனையில் தங்கி வைத்தியம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பலவகையான அனுபவங்களை சுந்தர் கடந்து வந்தார். ஒருமுறை காத்தரீன் பூத் மருத்துவமனையில் ஈஸ்டர் பண்டிகையின் போது கேட்ட உயிர்த்தெழுதல் செய்தி சுந்தரின் இருதயத்தைத் தொட்டது. அதற்குப் பின் அடிக்கடி சுந்தர் ஜெபிக்கத் தொடங்கினார். வேதம் வாசிக்க ஆரம்பித்தார்.

மற்றுமொருமுறை பேராயர் ஜெபராஜ் அவர்களின் மூத்தமகன் ராஜா, சுந்தரை சந்திக்க இரவு பத்து மணி அளவில் வந்தார். பொதுவாக அந்த நேரத்தில் சுந்தர் ஏதாவது ஒரு நூலை வாசித்துக் கொண்டிருப்பது வழக்கம். வார்டில் விளக்கு பளீரென எரிந்துகொண்டிருந்தது. பல இளம் நர்சுகள், தாதிகள் சுந்தரைச் சுற்றி எதுவோ செய்துகொண்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டுப் போனார். ஆனால் அருகில் சென்று பார்த்தபோது, சுந்தர் கையில் புத்தகத்தை வைத்தபடி எதையோ பேசிக்கொண்டிருந்தார். ராஜா உள்ளே நுழைந்ததுதான் தாமதம் தாதிமார் (நர்ஸ்) மடமடவென கலைந்து சென்றனர்.

ராஜா புன்னகையுடன் சுந்தரை நோக்கி, 'சுந்தர்! என்ன உங்களைச் சுற்றி ஒரே கூட்டம்? எப்போது டாக்டர் ஆனீர்கள்? என கேலியாகக் கேட்டார். சுந்தர், பலமாக சிரித்தபடி இல்லை,.. இல்லை நாளைக்கு அவர்களுக்கு ஒரு பாடத்தில் பரீட்சை. புத்தகத்தில் சில பகுதிகள் புரியவில்லை எனக் கேட்டார்கள். நான் சும்மா தானே நாள்முழுவதும் படுத்து இருக்கின்றேன். ஆகவே, படித்துவிட்டு அவர்களுக்குப் புரியும்படி விளக்கினேன். அவ்வளவுதான்! என்றார்.

சுந்தர் மருத்துவம் படிக்காவிட்டாலும் ஆங்கில மொழி வளம் இருந்ததால் படித்து விளக்கினார். அதுமட்டுமல்ல, தன்னால் இயன்ற அளவுக்கு மற்றவருக்கும் உதவி செய்ய வேண்டும் என்பதும் ஒரு நோக்கமாக இருந்தது.

இன்னுமொரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது. அறுவை சிகிச்சைக்குப் பின் சுந்தர் பிசியோதெரப்பி சிகிச்சை எடுக்க வேண்டியதாய் இருந்தது. அதற்கு மருத்துவமனையிலிருந்து வெளியே போய் சிகிச்சை எடுத்தார். அந்த சிகிச்சை மையத்தில் அவர் போன அன்று மருத்துவமைய சிப்பந்திகள் அங்குமிங்கும், குழப்பத்துடன் ஓடிக்கொண்டிருந்தனர். நோயாளிகளும் கவலையுடன் காத்திருந்தனர்.

சுந்தர் அவர்களிடம், ஏன் எல்லோரும் கவலையுடன் காணப்படுகிறீர்கள்? எனக் கேட்டார். அதற்கு ஒரு சிப்பந்தி 'ஒருமுக்கியமான மிஷின் இயங்கவில்லை. அதற்குத் தேவையான கருவி உடைந்துவிட்டது' என்றார். என்ன செய்வது எனப் புரியவில்லை. நோயாளிகள் எல்லாம் காத்திருக்கின்றனர். யாரிடம் போய் சரி செய்வது எனப் புரியாமல் தவிக்கின்றனர் எனக் கவலையுடன் கூறினார். சுந்தர் அந்தச் சிப்பந்தியிடம் என்னை அங்கே கூட்டிச் செல்லுங்கள் என்றார்.

சக்கர நாற்காலியை மிஷின் இருக்கும் இடத்திற்கு சிப்பந்தி தள்ளிச் சென்றார். மிஷினையும் அருகில் உள்ள உடைந்த பகுதியையும் பார்த்த பின் அருகில் உள்ள லேத்து 'பட்டறைக்கு அழைத்துக் கொண்டு போகச்சொன்னார். அவ்வாறே செய்தனர்.

சுந்தரின் கடுமையான முயற்சிக்குப்பின் பழுதுபட்ட கருவி ஒன்று செய்யப்பட்டு மிஷினில் பொருத்தினார். அளவு ஒத்துவரவில்லை. திரும்ப அரம் கொண்டு இங்குமங்கும் சுந்தர்தேய்த்து லேத் பட்டறைக்கு அனுப்பி சரி செய்து மிஷினில் பொருத்திப் பார்த்தார். 'சக்' எனப் பொருந்தியது. மின் பொத்தானை அழுத்த 'ஜம்' மென்று சொன்ன பேச்சு கேட்கும் குழந்தையைப் போல மிஷின் செயல்பட்டது. குழுமியிருந்தவர்கள் மகிழ்ச்சியினால் ஆரவாரம் செய்தனர். ஊனமான நிலையிலும் தன் மனதையும், தனக்குக் கொடுக்கப்பட்ட தாலந்துகளையும் மூடி வைத்து ஊனப்படுத்தாதபடி, சுந்தர் எப்படியெல்லாம் பயன்படுத்தினார் என்பது தான் காரியத்தின் கடைத்தொகை. ஊனமுற்றோர் தனக்கு நேர்ந்த நிலையினைக் குறித்து வருந்தி, செயலற்று முடங்கிப்போவார்கள். இருப்பதை மரக்காலால் மூடிவைக்காமல் அநேகருக்கு பயன்படுத்துவது தாலந்துகளை நமக்குக் கொடுத்த கர்த்தரை மகிமைப்படுத்துவதற்குச் சமமாகும்.

3

வீரா வில்லியம்சன் அம்மையார்

வீரா வில்லியம்சன் காத்தரீன்பூத் மருத்துவமனை

ஆதிகாலத்து இங்கிலாந்து அரசர்கள், விழியிழந்தவர்கள், தொழு நோயாளிகள், மற்றும் மனநிலை பாதிக்கப் பட்டவர்களுக்கு, உதவி செய்ய தூண்டப்பட்டனர். பிரான்ஸ் தேசத்தில் மட்டும் சுமார் 2000 தொழுநோயாளிகளின் இல்லங்கள் ஊருக்கு வெளியே 'லாசர்' என்ற பெயரில் இயங்கின. எட்டாம் ஹென்றி அரசாட்சிக்கு வந்தபோது இத்தகைய மருத்துவமனைகள் ஒழிக்கப்பட்டன. இந்த அழிவில் இரு மருத்துவமனைகள் தப்பின. ஒன்று 1123 ஆம் ஆண்டு ரேஷியரில் ஆரம்பிக்கப்பட்ட பரி. தாமஸின் இல்லம் மற்றது பரிபர்தரோடுவின் இல்லம். இவை அரசரின் உதவியை நேரடியாகப் பெற்றுவந்ததால் தப்பின. 1724 ஆம் ஆண்டு சில தொண்டு நிறுவனங்கள், மருத்துவமனைகள் தொடங்க முன் வந்தன.

18ஆம் நூற்றாண்டில் 145 மருத்துவமனைகளாக வளர்ந்தன. 1735ஆம் ஆண்டு பிரபல நற்செய்தியாளர் ஜான்வெஸ்லி காலத்தில் 'மெதடிஸ்ட்' சர்ச் உதயமாயிற்று. இந்த ஐக்கியத்தார் நற்செய்தியினை அறிவிப்பதோடல்லாமல் உடல்நலம் குறித்த விழிப்புணர்வையும் சேர்த்துக் கொடுத்தனர். அதுமட்டுமில்லாதபடி இலவச மருத்துவ உதவிக்கு ஒரு மருத்துவமனையினைத் தொடங்கினர். இது சமுதாய நலனுக்கென ஏற்படுத்தப்பட்டது. பிரிமெட்டிவ் பிஸிக் 'ஏழைகளுக்கு ஒரு மருத்துவர் தேவை' என்ற ஒரு நூல் எழுதப்பட்டது. கிறிஸ்துவர்கள் நற்செய்தி ஊழியம் மட்டுமல்லாமல் மருத்துவப்பணியும் சேர்த்து செய்தனர். இதன் அடிப்படையில்தான் 1865ஆம் ஆண்டு வில்லியம்பூத் காத்தரின்பூத் தம்பதியினர் நற்செய்தி ஊழியம் செய்து கொண்டிருந்தவர்கள் நோயாளிகளைப் பராமரிக்க முன் வந்தனர். அப்படி தொடங்கப்பட்ட முதல் மருத்துவமனை இந்தியாவில், அதுவும் நாகர்கோவிலில் உள்ள முதல் மருத்துவமனை என்றால் ஆச்சரியமாக உள்ளதல்லவா? வில்லியம்பூத் தம்பதிகள் இரட்சண்யசேனை இயக்கத்தினைத் தொடங்கியவர்கள்.

கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு ஆலயத்திலும் விதவைகள், அயல் தேசத்தைச் சேர்ந்த அகதிகளுக்கு என ஒரு இல்லம்

கட்டிப் பராமரிக்க ஆரம்பித்தனர். ஆகவே நகரங்களில் பெரிய பெரிய ஆலயங்கள் இருக்கும் இடங்களில் அருகிலேயே மருத்துவமனைகள் கட்டினர். ஆகையால் நோயாளிகளுக்கு வைத்தியம் செய்வது எளிதாயிற்று.

1978 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இரட்சண்ய சேனையின் ஒழுங்குகள் இராணுவ பாணியைப் பின்பற்றியது. பதவி மற்றும் சீருடை, கொடி ஆகியவை இதன் அடையாளங்களாகும் இதன் தலைவர் ஜெனரல் என அழைக்கப்படுவார். பகுதி நேரமாகப் பணிபுரிவர்களை இரட்சண்ய வீரர்கள் என்று அழைக்கின்றனர். இதற்கு பண உதவி நண்பர்கள் மற்றும் உதவும் வீரர்கள் மூலம் கிடைக்கிறது.

இவர்கள் சபையைச் சார்ந்து ஊழியம் செய்வார்கள். மருத்துவமனைகள் நிறுவுவது, சமூக சேவை செய்வது, அதில் குறிப்பாக மருத்துவர்கள், தாதிகளாகப் பணியாற்றுவது ஆகியவை. ஊனமுற்றோர் மறுவாழ்வுமையங்கள் நடத்துவது என பல்துறையில் ஊழியம் செய்தனர். தேவையுள்ளவர்களை ஆறுதல் படுத்தினர். இன்று சுமார் 120 நாடுகளில் சாதாரண மக்கள் மத்தியில் பரவிய இவ்வூழியம் பின்நாளில் பேரரசர்கள், அரசர்கள் ...., அரசியலில் முக்கிய பதவி வகிப்போர் இவ்வூழியத்தில் ஈடுபடலாயினார்.

சேனைகளின் தாய் எனக் கூறப்படும் காத்தரின் அம்மையார் அஷ்போனில் 1829 ஆம் ஆண்டு பிறந்தார். 1855 ல் இவர்கள் திருமணம் நடந்தது. காத்தரின் சிறந்த பேச்சாளர். சிறந்த போதனையாளர். வில்லியம்பூத் 'In Darkest England and the way out' என்ற சிறந்த நூலை எழுதியவர். காத்தரின் 'பெண்கள் ஊழியம்' 'Female Ministry', 'Aggressive Christianity' போன்ற நல்ல நூல்களை எழுதியுள்ளார்.

இந்த இயக்கத்தை அதிக அளவில் விருத்தி செய்த பெருமை வில்லியம் பூத் மகன் வில்லியம் பிராம்வெல்பூத்தைச் சேரும். 1882 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் நாள்

இந்தியாவில் மும்பையில் லெப்டினெண்ட் மேரிஆன் தலைமையில் ஒரு சிறு குழு வந்தது. ஹாரி ஆண்ரூஸ் என்பவர் பிராம்வெலின் மகன் வில்லியம் பூத்தின் பேரன். நாகர்கோவிலில் காத்தரீன் பூத் மருத்துவமனை தொடங்கக் காரணமாக இருந்தார். நாகர்கோவிலில் ஒரு வீட்டின் வெராண்டாவில் உள்ள குளியலறை அருகில் இந்த சிறு கிளினிக் தொடங்கப்பட்டது. டாக்டர். என்சைன் டர்னர் போன்ற பல சிறந்த மருத்துவர்கள் நாகர்கோவிலில் பணி புரிந்தனர்.

ஹாரி வில்லியம்ஸ் என்ற மருத்துவர் 1933 ஆம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தில் கர்த்தரின் ஊழிய அழைப்பைப் பெற்றவர். அவர் 1969-70களில் நாகர்கோவில் வந்து சேர்ந்தார். கர்த்தருடைய வார்த்தையைப் போதிக்கும் வாஞ்சையும் இருந்ததால் அதிலும் வாஞ்சையாய் வளர்ந்தார்.

நாகர்கோவிலில் உள்ள காத்தரீன்பூத் ஆஸ்பத்திரியில் ஹாரி வில்லியம்ஸ் பொறுப்பேற்றபின் பிஸியோதெரபியூனிட், ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்கள் தொடங்கினார். புதிய கட்டிடங்கள் புதிய வார்டுகள் எழுப்பப்பட்டன. இந்தியாவில் பணிபுரிந்த இரட்சண்ய சேனை டாக்டர்களில் டாக்டர். ஹாரி வில்லியம்ஸ் போல் சிறப்பாக பணிபுரிந்தவர் இல்லை என மரியம் ரிச்சர்ட் என்பவர் கூறுகின்றார். அதுமட்டுமல்ல ஹாரி ஒரு நல்ல ஓவியர், எழுத்தாளர், பல மருத்துவ ஆய்வு பேப்பர்களை புதிதாக வெளியிட்டவர். Miracle of Medicine Hill போன்ற நல்ல நூல்களை எழுதியவர்.

இந்த நூலில் இந்தியாவில் ஊழியம் செய்வது குறித்து எழுதும்போது, அவர்களுக்கு அரிசி தரவேண்டாம், தொழில் செய்யும் கருவிகளைக் கொடுத்து தொழில் கற்றுத் தருவது நல்லது என்பார். 'எதைச் செய்தாலும் (ஊழியர்) அதை சபையுடன் இணைந்து செய்வது கர்த்தரை மகிமைப்படுத்தும், தனிப்பட்ட முறையில் செய்யும் ஊழியங்களால், சபை

சத்துவமற்று சுருங்கிவிடும்' என எச்சரிக்கின்றனர். நம் வாழ்வில் கிறிஸ்துவின் தியாகம் வெளிப்பட வேண்டும். அத்துடன் அன்பு, விசுவாசம், நம்பிக்கை நம்மில் வளர வேண்டும் என்கின்றார்.

நாம் மனிதரைப் பிடிக்கின்றவராக வேண்டும் என்பது முக்கியம். அதிலும் நமக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை முழு அர்ப்பணிப்புடன், கடவுளுக்குச் செய்வது போல செய்ய வேண்டும் என தனது நூலில் 'It Began with Andrew' கூறுகிறார்.

மேற்கூறிய வார்த்தைகளில் ஹாரியின் மனம் எதில் தோய்ந்திருக்கின்றது எனத் தெரிகிறதல்வா? வார்த்தை! ..... தேவனுடைய வார்த்தையில் அவர் எவ்வளவு வாஞ்சையாய் இருந்தார் எனப் பாருங்கள். இப்படிப்பட்ட அற்புதமான மனிதரை நம் கதாநாயகன் சுந்தர் எக்பர்ட் சந்தித்து, சரித்திர பிரசித்தி பெற்ற இரட்சண்ய சேனை இந்தியாவுக்குக் கொடுத்த நன்கொடையான 'காத்தரீன்பூத் மருத்துவமனையில் சிகிச்சை பெற உதவியது எவ்வளவு விசேஷமான காரியம்' இப்படி மறக்கப்பட்ட அருட்பணியாளர்களை நாம் நம் சந்ததிக்கு நினைப்பூட்டுவது அவசியமானது.

வீரா வில்லியம்ஸ்சன்:

காத்தரின் பூத் மருத்துவமனையில் அர்ப்பணிப்புடன் ஊழியம் செய்த அநேகர் உண்டு. ஆனால் நாம் இங்கு சுந்தர் எக்பர்ட் வாழ்வில் தொடர்புடைய ஒரு சிலரை மட்டும் காணலாம். அடுத்ததாக நாம் அறிய வேண்டிய ஒரு அருட்பணியாளர் மருத்துவதாதியான வீரா வில்லியம்சன் அவரும் இந்த மருத்துவமனையில் சிறப்பாகப் பணிபுரிந்தவர்கள்.

வீரா வில்லியம்சன் தன் 93 ம் வயதில் இன்னும் உயிரோடு இருக்கின்றார். வீரா வில்லியம்ஸ்சன் தன் வாழ்வை குறித்து அவர் சொன்னபடியே எழுதுகிறேன்.

நியூசிலாந்து தேசத்தில் உள்ள பால்குலூதாவில் 1917 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் நாள் என் அம்மா எஸ்ஸிக்கு 7வது குழந்தையாகப் பிறந்தேன். சிறுவயதிலே ஆலயத்துக்குப் பெற்றோர் அழைத்துச் செல்வார்கள். கரெக்டாக இரண்டாவது பெஞ்சில் வரிசையாக அமர வைப்பார்கள். எந்த பொம்மை, படம் வரைய நோட்டு, கலர் பென்சில் மூச்! அத்தனைபேரும் சிறுவரோ பெரியவரோ கண்டிப்பாக செய்தியைக் கவனிக்க வேண்டும். வேறு எந்தக் காரியமும் செய்யக்கூடாது. என் தகப்பனார் ராபர்ட் கண்டிப்பாக இருப்பார். ஏனெனில் அவர் ஒரு ராணுவ வீரர்.

எங்களுக்குத் தண்டனை கொடுக்க அப்பா, ஒரு பெல்ட்டை அடுப்பங்கரை அலமாரியில் தொங்கவிட்டிருப்பார். அதைப் பார்த்தாலே எனக்குப் பயம்.

என் 15 ஆம் வயதில் எனக்குத் தேவையான பொருட்களை வாங்க வேலை செய்ய ஆரம்பித்தேன். ஒரு பாட்டி வீட்டைச் சுத்தம் செய்து வாரம் 5 ஷில்லிங் சம்பாதித்தேன். வாரம் ஒரு முறை ஒரு வக்கீலின் ஆபீசைக் கூட்டி 6 பென்ஸ் சம்பாதித்தேன்.

சிறுவயதிலேயே அருட்பணியில் ஆசையிருந்ததால் நானே ஒரு 'கிளப்' ஆரம்பித்தேன் என்கிறார் வீரா வில்லியம்சன்.

1939 இல் நான் நர்ஸிங் கல்லூரியில் சேர்ந்து படித்தேன். படிப்பு வேலை இரண்டுமே அதிக கஷ்டமானது. ஆனாலும் படித்தேன். படிப்பு முடிந்ததும் 'இரட்சண்ய சேனை' ஐக்கியத்திற்கு வேலைக்கு விண்ணப்பித்தேன். வெலிங்டனில் உள்ள காரிஸ்ஸன் பயிற்சி கல்லூரியில் இடம் கிடைத்தது. 1943 இல் படிப்பு முடிந்து பெத்தானியில் வேலைக்குச் சேர்ந்தேன். கடுமையான பயிற்சிக்கு அனுப்பப்பட்டேன். 1944 இல் ஆக்லாந்தில் உள்ள பெத்தானியில் வேலைக்குச் சேர்ந்தேன். கடுமையான பயிற்சி என்னைப் புடமிட்டிருந்தது.

1946 ஆம் ஆண்டு என் குடும்பத்தை விட்டுப் பிரிய வேண்டிய இந்தியாவுக்குச் செல்லும்படியாக உத்தரவு வந்தது. கப்பலும் ஜூலை 4ஆம் தேதி புறப்பட்டது. என்னருமை நியூசிலாந்தை விட்டு தூரதூர விலகிச் சென்றேன். ஜூலை 5ம் நாள் என் பிறந்த நாள். என் வாழ்வில் கடவுளின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்த அந்தப் பிறந்த நாள் அதிக சந்தோஷத்தைத் தந்தது.

நாங்கள் பயணப்பட்ட நேரம் யுத்த நேரம். இரவில் கப்பலில் அதிக விளக்குகள் போட மாட்டார்கள். ஒரு வழியாக சென்னை வந்து சேர்ந்தோம்.

எங்களை உற்சாகப்படுத்தும்படி அங்கு சில நியூசிலாந்து மக்கள் எங்களை வரவேற்றனர். எங்கள் சொந்த நாட்டினரைப் பார்த்தது ஒரே மகிழ்ச்சி. அங்கிருந்து நாகர்கோவிலில் உள்ள காத்தரீன் பூத் மருத்துவமனை சென்றேன். வீராவுக்கு வரவேற்பு கொடுத்தபோது அவரது பெயரை 'சத்யவதி' என கொடுத்துள்ளனர். நான் வந்தபோது டாக்டர். நோபின் யூ.எஸ்.ஏ. சென்றார். டாக்டர் ஹாரி வில்லியம்ஸ் பொறுப்பேற்றார். நான் நர்ஸிங் பயிற்சி கல்லூரியைப் பொறுப்பாகப் பார்த்தேன்.

இப்படியாக முப்பது வருடங்கள் வேலை செய்தபின் ஓய்வு பெற்றேன். 85 வயதிலும் (இப்போது 93) என் குறைவுகள் பெலவீனங்களில் கர்த்தர் என்னைத் தாங்கினார். தன் முதுமையைப் பற்றி அவர் மொழியில் பார்ப்போம்.

'என் வயதை இனி மறைக்க முடியாது, என் முடியெல்லாம் வெள்ளையாகி, பிரிய மனமின்றி என் தலையை விட்டு ஒவ்வொன்றாக விழுகின்றன. என் கண்ணாடி பிரேம் தடதடவென ஆடுகிறது. கண்பார்வை மங்கிவிட்டது. ஒரு கண்ணில் காட்ராக்ட் ஆப்ரேஷன் செய்து விட்டேன்.' இன்னும் ஒரு கண்ணுக்குச் செய்ய வேண்டும். என் நினைவில் தங்கி இருந்த பல சம்பவங்கள் மெல்ல, மெல்ல அழிகின்றன. அதில் ஆச்சரியம் என்னவென்றால் இந்த

நிலையிலும் உங்களோடு என்னால் பேசமுடியும். இந்த நூலை எழுதக் கர்த்தர் பெலன் தந்தார். உங்களுக்கு ஒன்று சொல்லட்டுமா? என்னால் ஸ்க்ரபிள், குறுக்கெழுத்து விளையாட்டெல்லாம் விளையாட முடியும். என் தம்பிமார் இருவரைத் தவிர மற்றவர்கள் ஒருவரும் (என்னையும் சேர்த்து) திருமணம் புரியவில்லை. நான் தனியாக வாழ்கின்றேன். தனிமையைச் சகிக்க முடியவில்லை. என்னைச் சுற்றியுள்ள மக்கள் என்னைக் கரிசனையுடன் கவனிக்கின்றனர். அவர்களோடு என் மகிழ்ச்சி துக்கங்களைப் பகிர்ந்து கொள்கின்றேன்.

சிறு வயதில் நான் போட்ட அநேகத் திட்டங்கள் நடக்கவில்லை. நான் திருமணம் புரிந்து பிள்ளைகளைப் பெற விரும்பியிருந்தால், என் வாழ்வு முழுவதையும் திருமணமாகாதவளாய், கடவுளுக்கு நான் அர்ப்பணித்திருக்க முடியாது. என் அருட்பணி வாழ்க்கை முழுமை பெறாது.

மேலும் 'பாவங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஜெபியுங்கள் கர்த்தர் உங்களை குணப்படுத்துவார்' என தனது நூலில் முடிக்கிறார்கள். வீரா வில்லியம்சன் நாகர்கோவில் வி.டி.சி. (பெண்கள் தொழிற்பயிற்சி மையத்தில்) நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருந்தார். அப்போது சுகந்தம் அவரது செயலாளராகப் பணியாற்றினார். ஆகவே வரவு செலவு போன்ற பணிகளைச் சுகந்தம் செய்வார். மேலும் பெண்பிள்ளைகளின் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதில் உதவியாக இருந்தார். சுகந்தத்திற்குத் திருமணமான பின்னும் வீரா வில்லியம்சன் சுந்தரையும் சுகந்தத்தையும் அன்பாக விசாரிப்பது உண்டு. வீரா தலைமை செயலாளரான பின்னும் ஏன் ஓய்வு பெற்று நியூசிலாந்து சென்ற பின்னும், அவர்கள் உறவு தொடர்கின்றது. சுந்தர் தம்பதிகள் வீராவை ஆண்ட்டி வீரா என அன்புடன் அழைத்தார்கள். சுந்தரின் மறைவுக்குப் பின்பும் கூட ஆண்ட்டி வீரா, சுகந்தத்திற்கு மின் அஞ்சல் மூலம் அடிக்கடி செய்தியனுப்பியபடி இருக்கிறார்கள்.

4

ஸ்வீடிஷ் ரெட்கிராஸ் மையத்தில்
சுந்தர் எக்பர்ட் அவர்கள்

ஸ்வீடிஷ் ரெட்கிராஸ்
(ஊனமுற்றோர் மறுவாழ்வு மையம்)

1962 ம் ஆண்டு மேஷாக் கிருபாகரன், சி.எம்.சி. கல்லூரியில் இரண்டாம் ஆண்டு மருத்துவம் பயின்று கொண்டு இருந்தார்.

நாம் சுந்தர் எக்பர்ட்டை சாயர்புரம் வெராண்டாவில் கடிகார ரிப்பேர் செய்யச் சொல்லி விட்டு, இங்கிலாந்து தேசத்தின் சரித்திரத்தையே ஒரு அலசு, அலசிவிட்டு வந்து விட்டோம்.

நம் நாட்டில் வந்து மருத்துவப்பணி, கல்விப்பணி செய்ய வந்த ஊழியர்களை அவ்வளவு சீக்கிரம் மறக்கக் கூடாது. எனவே அவர்கள் உழைப்பின் பயனை நாம் பெறும்போதெல்லாம் அவர்களை நினைவு கூறவேண்டும்.

விடுமுறைக்கு அவர் வரும் பொழுதெல்லாம் சுந்தரைச் சந்தித்து மணிக்கணக்காக பேசுவது அவர் வழக்கம். காலம் பல உருண்டு ஓடினாலும், வயதின் இடைவெளி அதிகமாக இருந்தாலும் சுந்தர், கிருபாவின் நட்பு எந்தத் தடையும் இல்லாமல் வளர்ந்தது. கிருபாவின் ஏக்கமெல்லாம் சுந்தர் அண்ணனின் திறமைகள் சரியான முறையில் செலவழிக்கப்படவில்லை என்பதும், அவை சமுதாயத்தை சரியான அளவில் அடையவில்லை என்பதுமாகும்.

சுந்தருக்கு ஒரே ஒரு கனவுதான். அது ஊனமுற்ற மக்களுக்கு தன்னால் இயன்ற அளவு உதவி செய்ய வேண்டும். அதுவும் ஒருவர் இருவருக்கல்ல, ஊனமுள்ள சமுதாயத்திற்கே உதவுவது போல இருக்க வேண்டும் என்பதுதான். அதில் ஒன்று கடிகார ரிப்பேர். ரிப்பேர் செய்ய உதவும் கருவிகளைச் செய்யப் பழகினால் ஒரு இடத்தில் அமர்ந்தபடி, வருமானத்திற்கு வருமானம், வேலைக்கு வேலை கிடைக்கும். அதுமட்டுமல்லாமல், குறிப்பாக ஊனமுற்றோர் யாரையும் எதிர்பார்க்க வேண்டாம். தன்னம்பிக்கை வளரும் என்ற நோக்கில் இந்தத்திட்டம் செயல்பட ஏதாவது வழி கிடைக்குமா? என கிருபாகரனிடம் ஆலோசித்துக் கொண்டிருந்தார்.

தேவன் நம்மைப் படைக்கும்போதே இவன்(ள்) ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்ய என்னால் அனுப்பப்பட்டவன்(ள்) என்பதை உறுதிபடுத்தும்படி அவர்கள் இருதயத்திலும் அந்தக் காரியத்தை செய்ய வேண்டும் என்ற வாஞ்சை வைத்து அனுப்புவார் என உளஇயல் வல்லுனர்கள் கூறுகின்றனர். வேத நூலும் கூறுகின்றது. அந்த ஆசை சூல் கொண்டு வளர வளர தரிசனத்தைப் பெற்ற மக்கள் அக்காரியத்தைச் செய்து முடிக்கும்வரை பிரசவ வேதனைப்பட்டு தரிசனத்தைத் தொட்டுப்பார்க்கும் வரை ஓயமாட்டார்கள். அதே பேச்சு, மூச்சாக இருந்து சந்திப்பவர்களிடம் எல்லாம் பேசிக்கொண்டு இருப்பார்கள். காத்தரீன் பூத் ஆஸ்பத்திரியில் சுந்தருக்கு ஆப்பரேசன் வெற்றியாக முடிந்தாலும், நடக்க இயலவில்லை. ஆகவேதான் பழைய கடிகார ரிப்பேர் செய்ய முனைந்தார்.

அநேக நேரங்களில் நம் வாழ்வில் ஒரு மாற்றத்தோடு ஒவ்வொரு படியாக நாம் முன்னேறிச் செல்ல செல்ல விரும்புகின்றோம். அங்கே தாமதமோ, தடையோ இருக்கக்கூடாது என்பது நம் விருப்பம். ஆனால் நம்முடைய நினைவுகளும் நம்மைக் குறித்து கர்த்தருடைய நினைவுகளும் முற்றிலும் வேறுபடுகின்றது. ஆகவேதான் ஏசயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில், என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கின்றது (ஏசா 55:8,9) என்று எழுதப்பட்டுள்ளது.

மோசே, ராஜ அரண்மனையில் வளர்க்கப்பட்டு எகிப்தின் வாரிசாக வேண்டுமென்று பார்வோன் குமாரத்தின் ஆசை. ஆனால் கர்த்தர் வனாந்தரத்தில் அவனுக்கு தரிசனமாகி அவனுக்குத் தேவசித்தத்தை வெளிப்படுத்துகிறார். பயம், குழப்பம், பலவீனம், திக்குவாய், மந்தநாக்கு எல்லாமே இருந்தது. ஆனால் கர்த்தர் பலப்படுத்தி, நீ போ, நான் உன்

வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார். (யாத் 4:12)

அமைதியாக மோசே கீழ்ப்படிந்தான். தேவனுடைய பாடசாலையில் பயிற்சி பெற வைத்தார். அதன் விளைவு மோசே இஸ்ரவேலருக்கு ரட்சகனாகவும், தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாகவும் இருக்கும் பேறு பெற்றான்.

அதுபோலவே, காத்தரீன்பூத் மருத்துவமனையில் அறுவைசிகிச்சைக்குப்பின் என்.சி.சி. மாணவனைப் போல கையை வீசிவீசி நடந்து விடலாம் என்ற ஆசை சுந்தருக்கு இல்லாமலா இருந்திருக்கும்? ஆனால் கர்த்தர் பர்த்திமேயு குருடனைக் குருடனாக இருக்கும்போது, அவனை மகிமைப்படுத்த சித்தம் வைத்திருந்தால் நாம் என்ன செய்ய முடியும்? சுந்தர் தான் என்ன செய்ய முடியும்? ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். தன் நிலை குறித்துப் பரிதாபப்படவில்லை. இந்தச் சமுதாயத்தைச் சீர்திருத்தும் சிற்பிகளில் நானும் ஒருவன் என்ற கம்பீரம் அவரிடம் காணப்பட்டது.

சுந்தரிடம் கொடுக்கப்பட்ட வேலைகளில் அது கடிகார ரிப்பேரோ, கட்டை வண்டி செய்வதோ, அன்றி கற்றுக் கொடுப்பதிலோ எதுவானாலும் முழு அர்ப்பணிப்பும் ஈடுபாடும் காணப்பட்டதால், சுந்தர் ஒரு கையை வைத்துக் கொண்டு உலகதரம் வாய்ந்த தொழில்நுட்பக் கருவிகளைச் செய்ய முடிந்தது என கோலே பாராட்டியுள்ளார்.

நாமும்கூட நமக்குக் கொடுக்கப்பட்ட வேலை வெங்காயம் உரிப்பதானாலும் அதைச் சுத்தமாக தோலை உரிக்க வேண்டும். அங்கே கொஞ்சம் கிள்ளி இங்கே கொஞ்சம் கிள்ளி நானும் உரித்தேன் என நம்மையும் ஏமாற்றிக் கொண்டு மற்றவரையும் ஏமாற்றக் கூடாது. கர்த்தர் உண்மையுள்ளவர். அவர் இன்றும் உண்மையுள்ள மனிதனைத் தேடுகின்றார்.

கந்தரின் சிந்தனைகள், ஆசைகள், கர்த்தரின் சமூகத்தை எட்டியது. அவர் கிருபாகரனைத் தட்டி எழுப்பினர். சி.எம்.சி. மருத்துவமனை பொறுப்பாளர் டாக்டர். பால்பிரான்ட் என்பவராவார். 1962ம் ஆண்டு கந்தரும், கிருபாவும் இணைந்து ஒரு திட்டம் வகுத்தனர். ஊனமுற்ற மக்களுக்கு கடிகார நுணுக்கங்களைக் கற்றுத் தந்து சொந்தமாகத் தொழில் தொடங்கத் தகுதி படுத்துவது ஆகும். இதற்கு ஆகும் செலவு சுமார் எட்டாயிரம் ரூபாய் எனத் திட்டமிட்டு அதற்கான விண்ணப்பத்தை டாக்டர். பால்பிராண்டிடம் கொடுத்தார். அந்த நாட்களில் எட்டாயிரம் ரூபாய் என்பது ஒரு பெரிய தொகை.

டாக்டர். பால் பிரான்ட ஒரு பிரபலமான எலும்பு முறிவு வைத்தியர். கிருபாகரன் தனிப்பட்ட முறையில் அவரை அறிந்திருந்தார். ஆகவே அவரை அலுவலகத்தில் சந்தித்து விண்ணப்பப்படிவத்தைக் கொடுத்தார், கிருபா. மனதிற்குள் சந்தேகம், இவர் இந்த விண்ணப்பத்தைப் படிப்பாரா என அவரது முகத்தையே கிருபா பார்த்துக் கொண்டு இருந்தார்.

விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட பால் பிராண்ட் அதை மேசை டிராயரைத் திறந்து உள்ளே போடாமல், உருண்டை கண்ணாடி வடிவில் உள்ள டேபிள் வெயிட்டை அதன் மீது வைத்த பின்,

கிருபா படிப்பு எப்படிச் செல்கிறது? என நேரத்தைப் போக்கும் கேள்விகளைக் கேளாமல், விண்ணப்ப படிவத்தைப் பிரித்து, கண்ணாடியை சரி செய்தபடி படிக்க ஆரம்பித்தார். படித்துக் கொண்டிருந்த சில நிமிட இடைவெளியில் கிருபாவை ஒரு முறை பார்த்தபின் திரும்ப வாசித்தார். கிருபாவுக்கு ஒருமுறை வேர்த்துவிட்டது. தன்னையறியாமல் கைக்குட்டையினை எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டார்.

சில நிமிடங்கள் நத்தையைப் போல் ஊர்ந்து நகர்ந்தன. பால் பிராண்டின் முகம் சட்டென பிரகாசித்தது.

அவரது சிறிய நீலமணிக்கண்களில் தோன்றிய மகிழ்ச்சி முகம் முழுவதும் பரவியது. விண்ணப்பத்தின் சாராம்சத்தை உள்வாங்கிக்கொண்ட பால்பிராண்டின் உதடுகள், எக்ஸலண்ட் என முணுமுணுத்தன. "கிருபாகரன்! நம் கல்லூரியில் சுமார் நாலாயிரம் மாணவர்கள் மற்றும் மருத்துவர்கள் இருக்கின்றனர். அனைவரும் கடிகாரம் கட்டுபவர்கள். கடிகாரங்கள் ரிப்பேர் ஆக வாய்ப்பு உள்ளது. எக்பர்ட்டின் இந்தத் திட்டம் அற்புதமானது. நடைமுறைக்கு ஒத்துவரக்கூடியது. இப்படிப்பட்ட தொழில் வல்லுநர்களைத் தான் தேடிக் கொண்டிருக்கின்றோம். கிருபா ஒன்று செய்யுங்கள், எக்பர்ட்டை ஒரு முறை அழைத்து வாருங்கள். எவ்வளவு துரிதமாகச் செய்ய முடியுமோ, அவ்வளவு துரிதமாகச் செய்யுங்கள்' என்றார் பால்பிராண்ட்.

கிருபாகரன் இந்த மறுமொழியினைக் கேட்டதும் திக்குமுக்காடி போய்விட்டார். என்ன பதில் சொல்வது எனத் திணறினார். அடுத்த வினாடி நடக்க முடியாத சுந்தர் அண்ணனை எப்படி அழைத்து வருவது? உதவிக்கு ஆள் வேண்டும் செலவை எப்படி சமாளிப்பது எனக் குழம்பினார்.

கிருபாவின் சிந்தனையில் ஓடிய காரியங்களைக் கண்டுவிட்டவர் போல, பால்பிராண்ட் மெதுவாகப் புன்னகை செய்தபடி, "கிருபா! செலவைப்பற்றி யோசிக்க வேண்டாம். அவர் வருவதில் உள்ள சிரமத்தை நான் அறிவேன். கூட வருபவருக்கும் சேர்த்து நான் செலவுக்குப் பணம் தருகிறேன். கவலை வேண்டாம். அவர் இங்கு வர ஏற்பாடு செய்யுங்கள் என்றார்.

கிருபாகரனுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. நிஜமாகவா? கிருபாகரன் தன்னைத் தான் கேட்டுக் கொண்டான். அதுமட்டுமல்ல பால்பிராண்ட் "பை த பை கிருபாகரன்! அவர் போட்ட பட்ஜெட் போதாது இன்னும் கொஞ்சம் விரிவாக எழுதி இருபத்தி ஐயாயிரத்திற்கு போட்டு எழுதச் சொல்லுங்கள். இத் திட்டத்தை சீக்கிரம் தொடங்கி விடலாம் ம் . . . போய் ஆக வேண்டியதைப்

பாருங்கள்" என கிருபாகரனை முடுக்கி விட்டார் பால்பிராண்ட்.

கிருபாகரனுக்கு முதலில் அல்லேலூயா என கத்தி ஒரு குதிகுதிக்க வேண்டும் போல இருந்தது. அடுத்ததாக அந்த அறையிலிருந்து அப்படியே பறந்து போய், சுந்தரிடம் நடந்த சம்பவத்தைக் கொட்டி விட பரபரத்தார். ஆனாலும் நன்றி கூற நினைத்து எதையோ சொல்லி விட்டு விடுதி வந்து ஒரு கடிதத்தை எழுதி சுந்தருக்குப் போட்டபின் தான் ஓய்ந்தார்.

வேதபுத்தகத்தில் ரூத் என்ற ஒரு பகுதி உண்டு. அதில் 3:18ம் வசனத்தைப் பார்த்தால் "அந்த மனுஷன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிக்குமுன் இளைப்பாற மாட்டான்" என நகோமி கூறுவதாகப் போட்டிருக்கும். போவாஸ், ரூத்தை திருமணம் செய்ய எடுக்கும் முயற்சிகளைக் குறிப்பிட்டு இந்த வசனம் போடப்பட்டுள்ளது. இவர்களெல்லாம் செயல் வீரர்கள் எனக் கூறலாம். கிருபாவும் அந்த ரகத்தைச் சேர்ந்தவர். மறுதபாலில் சுந்தரும் பதில் எழுதிவிட்டார்.

சுந்தரை அழைத்து வருவதில் உள்ள கஷ்டங்களெல்லாம் ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. அவரை வெளிகொண்டுவர வேண்டும் என்பதில் கிருபாவுக்கு அவ்வளவு தீவிரம் இருந்தது. கிருபா அடுத்த கட்டத்தைத் திட்டமிட்டார். டாக்டர். பால்பிராண்டைச் சந்திக்க நாள் குறித்தார். சாயர்புரம் சென்று அழைத்து வர நாள் குறித்து அதில் தன்னை ஈடுபடுத்தினார். திருநெல்வேலி ஜங்ஷனில் சுந்தரையும், கிருபாவையும் வழியனுப்ப ஒரு கூட்டமே திரண்டிருந்தது. திருநெல்வேலியில் ரயில் ஏறுவது கஷ்டமாக இல்லை. நடுநிசியில் விழுப்புரத்தில் சுந்தரை ஏற்றுவது கடினமாக இருந்தது. அதையும் இரண்டு போர்ட்டரை அழைத்து ஒரு வழியாக அடுத்த ரயிலில் ஏற்றி காட்பாடி வந்து சேர்ந்தார்கள்.

மாணவர்கள் விடுதியில் தங்க வைத்து பொது குளியலறை, பொதுக்கழிப்பிடங்களை ஊனமுற்றோர்

உபயோகப்படுத்துவது மிகவும் சிரமமான காரியம். ஆனாலும் சுந்தர் அத்தனை சிரமங்களுக்கு மத்தியில், பரவாயில்லை சமாளித்து விடலாம் என்பது பாவமாக இருந்தது.

கிருபாகரன், பால்பிராண்டைச் சந்திப்பதை ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற சந்திப்பாகக் கருதினார். பால்பிராண்டும் சுந்தரை சந்திப்பதை, அர்த்தமுள்ளதாகக் கருதினார். சி.எம்.சியுடன் நல்லுறவு கொண்ட ஸ்தாபனமான ஸ்வீடிஷ் ரெட் கிராஸ் மறுவாழ்வு மையத்திலிருந்து மூன்று தலைமை அதிகாரிகளைச் சுந்தரை சந்திக்கும்போது உடனிருக்க அழைத்தார். ஏனெனில், அம்மூவரும் ஊனமுற்றோரின் உற்பத்தித் திறனை வெளிக்கொண்டு வருவதில் சமர்த்தர்கள். அம்மூவரையும் பின்னாளில் சுந்தர் மூன்று 'A'கள் என அழைத்தார். எனெனில் ஒருவர் பெயர் ஆம்ஸ்ட்ராங், மற்றவர் அகார்டஸ், மூன்றாவது நபர் பெயர் அந்தோணி சாமி. மூவரும் பொறியியல் பட்டதாரிகள்.

அனைவரும் சந்தித்தபோது சுந்தர் தன்னிடமுள்ள கடிகார ரிப்பேர் கருவிகளைக் காட்டினார். சுமார் 24 நுட்பமான பொடி பொடிக் கருவிகள் அவை. கடிகாரத்தின் உட்பகுதியில் உள்ள சிறுசிறு துவாரங்களை அளவெடுக்கும் கருவிகள் அவை.

டாக்டர். பால்பிராண்ட் மற்றும் மூவரும் அக்கருவிகளையும் சுந்தரையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு நீங்களா இக்கருவிகளைச் செய்தீர்கள்? என ஆச்சரியப்பட்டனர்.

ஆம்ஸ்ட்ராங் என்ற பொறியியல் வல்லுனர், இவரது கரங்கள் மிகவும் அற்புதமான கரங்கள் எனச் சொல்லிச் சொல்லி வியந்தார். பலவிதமான ஆலோசனைகள், கலந்துரையாடல்கள் நடந்தன. இறுதியில் ஸ்வீடிஷ் ரெட்கிராஸ் மறுவாழ்வு மையத்தில் கடிகார ரிப்பேர் பிரிவு ஒன்று தொடங்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. சுந்தர் வேலூரில் தங்கி அதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள்

செய்வது என்றும், சுந்தருக்குப் பொருத்தமான பதவி ஒன்று தரலாம் என்றும் ஏகமனதாய் முடிவெடுத்தனர், பால் பிராண்ட் குழுவினர்.

சுந்தர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவரது கனவு நிறைவேறும் நாள் கைக்கெட்டும் தூரத்தில் இருப்பதைக் கண்டு மனநிறைவு பெற்றார். திரும்ப திருநெல்வேலி சென்று பேராயர் ஜெபராஜ் குடும்பத்தாரிடம் விடை பெறுவது மற்றும் தன் உடைமைகளை சேகரிப்பது நலமாய்பட்டது. வழக்கம் போல கிருபாகரன் சுந்தரை அழைத்துச் சென்றார். விழுப்புரத்தில் ரயில் மாறும்போது நள்ளிரவு நேரம். சுந்தர் பதிவு செய்த இடத்தில் வேறொருவர் படுத்துக்கொண்டு இடம் தர மறுத்து விட்டார். வேறு வழி? சுந்தர் சக்கர நாற்காலியில், டாய்லெட் அருகில் அமர்ந்தபடி திருநெல்வேலி வரை செல்லவேண்டியதாயிற்று.

அண்ணே சமாளித்து விடுவீர்களா? வேறு வழியே இல்லை என கிருபாகரன் புலம்பியபோது பரவாயில்லை சமாளித்து விடலாம் என்று அச்சூழலை எற்றுக்கொள்ளும் பக்குவத்துடன் கூறினார். இந்தக் கஷ்டங்களை விட நடந்து முடிந்த கூட்டத்தில் எடுத்த முடிவுகள் சுந்தருக்குப் புதிய ஆற்றலைத் தந்திருந்தது. இப்போது சுந்தர் 25 வயதை அடைந்திருந்தார்.

சுந்தரின் மகிழ்ச்சி நெடுநாள் நீடிக்கவில்லை. டாக்டர். பால்பிராண்ட் லண்டனில் உள்ள தொழுநோய் ஐக்கியத்தின் தலைவராக உயர்த்தப்பட்டுச் சென்றார். அவருடைய பதவிக்கு டாக்டர். மேரிவர்கீஸ் என்பவர் அமர்த்தப்பட்டார். டாக்டர். பால்பிராண்ட் சுந்தரின் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று பலமாக சிபாரிசு செய்திருந்தபோதும், டாகடர். மேரிவர்கீஸுக்கு அந்தத் திட்டத்தை நிராகரித்து விட்டு அதற்குப் பதில் கோழிப்பண்ணை வைப்பது உசிதமாய்பட்டது.

அதற்கான பயிற்சி தருவது குறித்து முடிவெடுத்து விட்டார். ஆகவே சுந்தரின் கனவு, முயற்சி, கிருபாகரனின்

முயற்சிகள் அத்தனையும் ஒருவினாடிப் பொழுதில் குப்பைக் கூடையில் விழுந்தன. அந்த அதிகாரி சுந்தரின் திட்டங்களை மட்டும் வீசவில்லை. அவரது உள்ளத்தையும், அதில் உறைந்து உயிர் கொடுத்துக் கொண்டு இருந்த உணர்வுகளையும் ஒன்றுக்கும் உதவாது என கணித்து ஒதுக்கியது சுந்தரின் மனதைப் புண்படுத்தாமலா இருந்திருக்கும்?

நமக்கே ஏமாற்றமாய் இருந்தால், சுந்தரின் நிலை பரிதாபமானதுதான். ஒரு வேளை இதை உணர்த்தத்தான் ரயிலில் அவரது இடத்தை மற்றவர் பிடுங்கிக் கொள்ள, துர்நாற்றம் வீசும் கழிவறை அருகில் வர நேர்ந்ததோ? யாருக்கு தெரியும் கர்த்தர் வழிகள்?

கிருபாகரனின் நிலை இன்னும் மோசம். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விட்டதே என நினையாமல் வழக்கம்போல பரவாயில்லை, கிருபா அடுத்து ஏதாவது வாய்ப்பு வராமலா போகும்? கவலைப்படாதே என கிருபாவை சுந்தர்தான் தேற்றினார். கர்த்தர் ஒரு கதவை மூடினால், சிறு ஜன்னலைத் திறப்பார் என்ற நிச்சயத்தை நாம் அறிய வேண்டும்.

கடந்த சம்பவங்களை அறிந்த அந்த மூன்று பொறியாளர்கள், சுந்தரின் மனிதவள ஆற்றலை நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆகவே சுந்தரை ரெட்கிராஸ் தொழிலகம் என்ற மையத்தில் உள்ள மற்றொரு யூனிட்டுக்கு பயன்படுத்த அழைப்பு கொடுத்தனர். அந்த மையத்திற்கு சுருக்கமாக "Worth" (Workshop for Rehabilitation and Training of the Handicapped) என அழைப்பர்.

போலியோ, தொழுநோய் மற்றும் பிறவியிலிருந்து வரக்கூடிய பலவித நோய்களால் பாதிக்கப்பட்டு உருவிழந்த உறுப்புகளால் ஒதுக்கப்பட்ட அநேகருக்கு மறுவாழ்வு தரும் மையமாக இந்த மையம் செயல்பட்டது. இந்த மையத்தில் கடிகாரம் சம்பந்தப்பட்ட தொழில்

நடைபெறவில்லையென்றாலும், டைப்ரைட்டிங் மிஷினுக்குரிய சில உதிரி பாகங்கள் செய்து ஹால்டா டைப்ரைட்டர்ஸ் என்ற நிறுவனத்திற்கு (சென்னை) ஒப்பந்த முறையில் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். நம் சுந்தர் தான் உதிரி பாகங்களைச் செய்வதில் வல்லவராயிற்றே. ஆகவே அவரைப் பொருட்களின் தரத்தை நிருணயிக்கும் தரக்கட்டுப்பாட்டு அதிகாரியாக அமர்த்தினர். சுந்தரும் ஒப்புதலை அளித்தார். ஏனெனில், அவர் கனவுலகத்தை அடைய இந்த வாய்ப்பு ஒரு ஏணிப்படி என்பதை உணர்ந்திருந்தார்.

சாயர்புரத்திலிருந்து காட்பாடி செல்லும்போது உறவினர்களின் உதவி நின்று போகும் வாய்ப்பிருந்தது. சாப்பாட்டு பிரச்சனை வர வழியுண்டு. பெரும்பாலும் தனிமையில் இருக்க வேண்டும். அவரது யூனிட்டில் அவரது அன்பு, கரிசனை, போதிக்கும் முறை அனைவரையும் அசைத்தது. அவர் ஒரு இன்றியமையாத மனுஷனாக மாறினார். பல புதிய நண்பர்கள் அறிமுகமானார்கள். அவர்களில் குறிப்பாக ஒரு கேரள சகோதரர் நாயர் என்று அழைக்கப்பட்டார். போலியோவினால் பாதிக்கப்பட்டவர். சக்கர நாற்காலியில் அமர்ந்து குமாஸ்தாவாகப் பணிபுரிந்து வந்தார். நாயருக்கு இரு குழந்தைகள். பணிபுரியும் இடத்தருகில் வசித்து வந்தார். நல்ல புத்திசாலி, நேர்மையானவர், நட்புக்கு மதிப்பு கொடுக்கும் நல்ல உள்ளம் படைத்தவர். சுந்தருக்கும் நாயருக்கும் உணர்வலைகள் அதிகமாக ஒன்றிச் சென்றன. அவரது மனைவியும் அமைதியான அழகிய பெண்மணி. அன்பானவர், நன்கு சமையல் செய்வார். மொழிப் பிரச்சனை இருந்தபடியால் சுந்தரிடம் சைகையில் பேசி மகிழ்வார்.

மற்றொரு நண்பர் மூவர் குழுவில் இருந்த அந்தோணிசாமி. இவருக்கும் சுந்தருக்கும் உள்ள நட்பில் குரு சிஷ்யன் உறவு வெளிப்பட்டது. அந்தோணிசாமியிடமிருந்து அநேக பொறியியல் நுட்பங்களைச் சுந்தர் சற்றுக்கொண்டார்.

அந்தப் பயிற்சி ஆரல்வாய் மொழியில் வி.டி.சி. மானேஜராகப் பதவி ஏற்றபோது பல வகையில் பயன்பட்டது.

சுந்தர் காட்பாடி வந்தபின் சாப்பாடு, தண்ணீர் போன்ற பிரச்சனைகளால் உடலநலம் அடிக்கடி பாதிக்கப்பட்டது. கிருபாகரன் மட்டுமே உறுதுணையாக இருந்தார். ஆனால் அவர் தங்கியிருக்கும் இடம் சுமார் 7 கி.மீ. தூரம். மருத்துவக் கல்லூரி விடுதியிலிருந்து வாரம் மும்முறை வந்து பார்வையிட்டு உதவி புரிந்தபின் செல்வார். சுந்தர் படும்பாடுகளைப் பார்த்தபின் பூசாமி என்ற வாலிபனை சுந்தரின் உதவியாளராக அமர்த்தினார், கிருபாகரன். இருபது வயது வாலிபனாகக் காணப்பட்டபடியால் சுறுசுறுவென சமையல், சக்கர நாற்காலி தள்ளுதல் போன்ற வேலைகளை சுறுசுறுப்புடன் செய்தான்.

1967ஆம் ஆண்டு ஒரு சோதனையினைச் சந்திக்க வேண்டியதாயிற்று. யோனத்தானைப் போல உதவியாய் இருந்த கிருபாவின் டாக்டர் படிப்பு முடிந்துவிட்டது. திருநெல்வேலி சி.எஸ்.ஐ. மருத்துவமனையில் இரண்டு வருட ஒப்பந்த காலத்தை முடிக்கச் சென்றுவிட்டார். கிருபா சென்றது கஷ்டமாக இருந்தாலும் தன் வாழக்கையை மீதி இருக்கும் ஒற்றைக் கையினால் காலத்தை தள்ள மனதளவில் ஆயத்தப்பட்டார். காத்தரீன் பூத் ஆஸ்பத்திரியில் ஆண்டவராகிய இயேசுவைத் தன் வாழ்வில் ஏற்றுக் கொண்டார். விளைவாக இரவு, காலை ஜெபிக்கவும் வேதம் வாசிக்கவும் சுந்தர் தவறுவதில்லை. அதுபோதும் என்ற நிலைக்கு வந்தார்.

மறுபடியும் கர்த்தர் தன் சொந்த வழியில் இடைப்படலானார். நாகர்கோவிலில் பணிபுரிந்த டாக்டர். ஹாரி வில்லியமஸ் போர்டுமீட்டிங் காரியமாக அடிக்கடி வேலூர் வந்து சென்றார். வரும்போதெல்லாம், சுந்தரைப் பார்க்கத் தவறுவது இல்லை. சுந்தரை நடக்க வைக்க ஏதாவது சிகிச்சை பலனளிக்குமா என சிந்தித்தபடி இருந்தார்.

ஒருநாள் சுந்தருக்கு வந்த தபாலில் இனிய செய்தி ஒன்று காத்திருந்தது. டாக்டர் ஹாரி வில்லியம்ஸ் ஊனமுற்றோர் மறுவாழ்வு மையம் ஒன்று தொடங்கப்போவதாகவும், அதில் தொழில்நுட்ப பிரிவில் மேற்பார்வையாளராக (மானேஜர்) பொறுப்பெடுக்க வரும்படியும் அழைப்பு விடுத்திருந்தார். அந்த மையம் நாகர்கோவிலிலிருந்து சுமார் 10 கி. மீ. தூரத்தில் உள்ள ஆரல்வாய்மொழி என்ற ஊரில் ஆரம்பிக்கப்பட உள்ளதாக எழுதியிருந்தார். காட்பாடியில் வேலை பிடித்திருந்தாலும் அடுத்தகட்டத்திற்குச் செல்ல சுந்தர் ஆயத்தமானார்.

கர்த்தருக்குக் காத்திருக்கின்றவர்களோ புது பெலன் அடைந்து கழுகுகளைப் போலச் செட்டை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள். (ஏசா 40:31)

5

திருமதி. சுகந்தம் அவர்களின் பெற்றோர்

இணையும் துணை

நாகர்கோவில் VTC பெண்கள்
மறுவாழ்வு மையத்தில்
திருமதி சுகந்தம் அவர்கள்

ஆரல்வாய்மொழி VTC ஆண்கள்
மறுவாழ்வு மையத்தில்
சுந்தர் எக்பர்ட் அவர்கள்

பொதிகைமலைச் சாரல் மெல்லத் தூறும் தென்காசி, சாம் டி. மோசஸ் ஒரு ஆசிரியர். அவரது மனைவி ஏஞ்சலினா சி.எஸ்.ஐ. மிஷன் காம்பௌண்டில் உள்ள நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியை. அவர்களுக்கு நான்கு பெண்பிள்ளைகள், ஒரு ஆண்பிள்ளை. மூத்தவள் சரலீனா, இரண்டாவது பெண் சந்திரலீலா, இடையில் கிருபா என்ற பையனும், மூன்றாவது பெண் சுலோச்சனா, கடைக்குட்டியாக சுகந்தம் பிறந்தாள். அத்தனை பிள்ளைகளும் அழகும் புத்திசாலித்தனமும் நிறைந்திருந்தனர். கடைக்குட்டி சுகந்தம் பொன்னிறமாகவும், அழகிய கண்களும் வளைந்த புருவமுமாய் இருந்தாள். சிரிப்பு அவள் சொத்து. ஆசிரியர்களின் மக்களாய் பிறந்ததால் மணிமணியாய் படித்தனர்.

அப்பா சில கிலோமீட்டர் தூரத்தில் இருந்தபடியால், அம்மாவின் பள்ளியில் சுகந்தம் படித்தாள். மாலை வேளைகளில் மற்ற பிள்ளைகளுடன் சுகந்தம் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டபோது ஏஞ்சலினா அம்மாவின் மனம் துணுக்குற்றது. சற்று தள்ளாடி, தள்ளாடி நடப்பது போல உணர்ந்தார்கள். அன்று இரவு தாய் தன் மகளின் கால்களில் கரத்தை வைத்து ஜெபித்தார்கள். மகளுக்கு எந்தப் பிரச்சனையும் வரக்கூடாதே என்ற பயம் உள்ளுக்குள் இருந்தது. அப்போது சுகந்தத்திற்கு வயது 6.

நாளாக நாளாக எதாவது ஒன்றைப் பிடித்தபடி நடக்கத் தொடங்கினாள், சுகந்தம். தாய் ஏஞ்சலினா மோசஸ் பயந்தபடியே ஆயிற்று. ஆனால் சுகந்தம் வழக்கம்போல பளிச்சென்ற சிரிப்புடன் கலகலவென பேசினாளே ஒழிய வேதனையின் எந்த அறிகுறியும் தென்படவில்லை. கால்கள் சூம்பியதாகத் தெரியவில்லை. சாதாரண வடிவத்துடன் காணப்பட்டன.

இந்த பிள்ளைக்குக் காலில் பிரச்சனை ஏற்பட்டால் இவளின் எதிர்காலம் எப்படி இருக்கும்? என்ற அச்சம் ஏற்படும்போதெல்லாம், கலங்காதே, திகையாதே, நான் உன்

தேவன். இஸ்ரவேலை காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை என்ற வசனம் அவர்களைத் தேற்றும்.

சுகந்தம் வளர வளர அவள் சரீர வளர்ச்சியைவிட அவள் விசுவாசம் அதிகமாய் வளர்ந்தது. ஆரம்ப வகுப்புகளை அம்மா பள்ளியிலும் உயர்நிலை வகுப்புகளை அப்பா பள்ளியிலும் தொடர்ந்தாள். போக்குவரத்து வசதிக்கு ஒரு மாட்டுவண்டியைப் பயன்படுத்தினார்கள். மகளின் பலவீனத்தை உணர்ந்த தகப்பனார், கல்வியை எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்தார்கள். 1963ம் ஆண்டு பள்ளி இறுதி வகுப்பைப் படித்த சுகந்தம் நல்ல மதிப்பெண்கள் வாங்கினாள். கல்லூரியில் படிக்க ஆர்வம் கொண்டாள். தூத்துக்குடியில் உள்ள பரி. மேரி கல்லூரியில் இடம் கிடைத்தது. வகுப்புகளுக்கு மற்றவரின் உதவியுடன் தான் செல்ல முடிந்தது. அல்லது சுவரைப் பிடித்தபடி நடக்கலானாள். இடைவேளையில் விடுதிவரை சென்று உணவு உட்கொள்ள நேரமெடுக்கும் என்ற நினைப்பில், வகுப்பறையில் உணவு கொடுக்க சலுகை கேட்டபோது பள்ளி நிர்வாகம் முதலில் மறுத்துவிட்டது. பின்னால் அனுமதித்தனர். ஆரம்பத்தில் தடுமாறிய சுகந்தம் விடுமுறைக்கு வீட்டுக்கு வந்தாள். அக்கல்லூரியின் விடுதியமைப்பு வகுப்பறைக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ள கஷ்டங்களை நினைத்துப் பயந்துபோய், மறுபடியும் கல்லூரி செல்ல மறுத்துவிட்டாள்.

தகப்பனார் மோசஸ் பலவகையிலும் கல்வியின் அவசியத்தை எடுத்துச் சொன்னார். படிப்பை விடக்கூடாது என்பதில் கண்டிப்பாக இருந்தார். பிற்காலத்தில் படிப்பு அவளுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதில் உதவியாக இருக்கும் என எடுத்துச் சொன்னார். கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதத்தை உதாசீனப்படுத்தினால், திரும்பப் படிக்க வைக்க மாட்டேன் என கண்டிப்புடன் கூறினார். பேராசிரியர்களும், சினேகிதிகளும் உதவுவதாகக் கூறி கல்லூரியில் படிக்க உற்சாகமூட்டினர்.

மறுநாள் சுகந்தம் கல்லூரிக்குப் புறப்பட்டாள். கர்த்தர் ஒத்தாசையுடன் படித்துவிடலாம் என நிச்சயம் கூட இருந்தது. ஸ்வீட்லி மற்றும் இயேசு தங்கம் போன்ற தோழிகள் அதிகம் உதவினர். அதேபோல நிர்வாகமும் சுகந்தத்திற்கு தங்களால் இயன்ற அளவு உதவமுன் வந்தது. உறுதியுடன் படிக்க முன்வந்தபோது காலமும் படிப்பும் தடையாய் இருக்கவில்லை. 1967ம் ஆண்டு பி.ஏ. பட்டப்படிப்பை முடிக்க கர்த்தர் உதவினார். கல்லூரி படிப்பு முடிந்ததும் F.M.P.B. இயக்கத்தினர் நடத்திய ஒரு கூட்டத்தில் சுகந்தம் கர்த்தராகிய கிறிஸ்துவுக்குத் தன் வாழ்வை அர்ப்பணித்தாள். தகப்பனாரும் மகளை அதிகமாக உற்சாகப்படுத்தினார். அவர்களது உறவுக்கார பையன் ஒருவர் சாயர்புரத்தில் உள்ளார். இரு கால்களும், ஒரு கையும் செயலிழந்தபோதும் புத்திசாலித்தனமாக வாட்ச் ரிப்பேர் செய்வார் எனக்கூறி சுகந்தத்தின் தன்னம்பிக்கையைப் பெருக்க உற்சாகப்படுத்தினார்.

அந்த பையனின் சூழ்நிலைக்காக சுகந்தம் அதிகமாக இரக்கப்படுவாள். அது சுந்தர் எக்பர்ட் என்பதை அறியாதிருந்தாள். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் வேலைக்குச் சென்றால் ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனத்தில் தான் பணிபுரிய வேண்டும் என்பதிலும் தீர்மானமாக இருந்தாள்.

அம்மா மகளை உடனே வேலைக்கனுப்பவில்லை. மகள் உடல் தேறுவதற்கு வீட்டில் தங்க வைத்து நல்ல ஆகாரம், ஓய்வு கொடுத்து மகளுக்காக அதிகப் பிரயாசப்பட்டார்கள். இதற்கிடையில் மகனும் தசை பலவீனத்தால் பாதிக்கப்பட்டான். அவனும் நடக்க அதிகக் கஷ்டப்பட்டான்.

அம்மா ஏஞ்சலினா இரவு நேரங்களில் மகளே! உனக்கு இயேசப்பாதான் துணை. ஏன்னா, உனக்கு எது வேணுமின்னாலும் அவரிடம் தான் கேட்க வேண்டும். அப்பா, அம்மா கொஞ்ச நாளைக்கு தான் இருப்போம்.

இயேசப்பாதான் எப்போதும் உன்கூட இருப்பார் என்றபடி மகளின் தலையை வருடிக் கொடுப்பார்கள்.

1968 ம் ஆண்டு ஏஞ்சலினா மோசஸும், சுகந்தமும் பஸ் பிரயாணம் செய்தபோது ஒரு வெள்ளைக்காரப் பெண்மணியைச் சந்தித்தனர். அவர்களோடு சேர்ந்து சில கிராமத்து வாலிபப் பெண்களும் பயணம் செய்தனர். ஏஞ்சலினா மோசஸிற்கு அந்த பெண்மணியை ஏற்கனவே தெரிந்திருந்ததால் பேசிக்கொண்டு வந்தபோது அவர் பெயர் பிரமிளா என்ற ஆலிவ்புல்லர் எனவும் அவர் டோனாவூர் ஐக்கியத்தைச் சேர்ந்தவர் எனவும் சுகந்தம் அறிந்தாள். சுகந்தத்தின் நிலையையும் அவள் படிப்பையும், கிறிஸ்தவ ஸ்தாபனத்தில் வேலை செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தையும் கேட்டு பிரமிளா மகிழ்ச்சி அடைந்தார்கள். சுகந்தத்தின் மீது அன்பைக் காட்டினார்கள். பெருங்குளம் வந்தபோது பெண்பிள்ளைகளை அழைத்தபடி இறங்கிச் சென்று விட்டார்கள்.

அடுத்து வெகு சீக்கிரத்தில் புல்லர் திரும்ப சுகந்தம் வீட்டுக்கு வந்தபோது அம்மா வீட்டில் இல்லை. ஆனாலும் சுகந்தம் நேர்த்தியாக சமையல் செய்து அவர்களை உபசரித்தாள். இந்த முறை புல்லர், சுகந்தத்திற்கு நாகர்கோவிலில் உள்ள பெண்கள் மறுவாழ்வு மையத்தில் செக்ரட்டரி வேலை இருப்பதாகவும் அவளால் வந்து பணி புரிய இயலுமா? என கேட்டார்கள்.

நாகர்கோவில் வி.டி.சி.யில் வேலைக்குச் சேருமுன் மிஸ். புல்லர் சுகந்தம் செய்யப்போகும் வேலை குறித்து அவளை ஆயத்தப்படுத்தினார். குஷ்டரோகிகள் மத்தியிலும், போலியோ மற்றும் பலவகை வியாதிகள், விபத்தினால் ஊனமுற்ற பெண்கள் மத்தியில் பணிபுரிய வேண்டியது வரும் என விளக்கினார். தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களும் அங்கு தையல், எம்பிராய்டரி படிக்க வருவார்கள் என சுகந்தத்தின் வேலையின் தன்மையினை

விளக்கினார்கள். சுகந்தம் வீட்டில் இருந்த மூன்று வருடங்களில் சிறு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித் தருவாள். மேலும் சமையல் மற்றும் டைப்ரைட்டிங் படித்தாள். அது இன்று செக்ரட்டரி வேலைக்கு உதவியாக இருந்தது.

சுகந்தம் சீக்கிரத்தில் நாகர்கோவில் வந்து சேர்ந்தாள். இந்த மையம் டாக்டர். ஹாரி வில்லியம்ஸ் அவர்களால் ஊனமுற்ற பெண்களின் மறுவாழ்வு மையமாகச் செயல்பட்டது. சுகந்தம் யாருக்கு செகரட்ரியாக அமர்த்தப்பட்டாள் என்றால் முன் பகுதியில் தன் வாழ்க்கை வரலாறினால் நம்மைக் கொள்ளை கொண்ட வீரா வில்லியம்சனுக்குத்தான். பாருங்கள்! கர்த்தர் எவ்வளவு நேர்த்தியாக ஒவ்வொருவரையும் தன் திட்டத்திற்குள் கொண்டு வருகின்றார். மேலும் அதை அதன் அதன்காலத்தில் நேர்த்தியாய் செய்கிறவர் எனவும் தெரிகிறதா?

6

யார் அது?

சுகந்தத்திற்கு இப்போதெல்லாம் பொழுது புலர்வது அழகாக இருக்கின்றது. பறவைகளின் சத்தம் கேட்க இனிமையாகத்தெரிந்தது. வேத புத்தகத்தைப் படிக்கும்போது கர்த்தர் தன்னோடு பேசுவது புரிந்தது. பெண்கள் மறுவாழ்வு மையத்தில் பணிபுரிவது, கர்த்தருக்கு ஊழியம் செய்வது போன்ற திருப்தி ஏற்பட்டது. அநேகர் சுகந்தத்தின் சம்பளத்தைக் கேட்டு வியப்படைவார்கள். மிகவும் குறைந்த சம்பளம்தான். ஆனால் கர்த்தர் கொடுக்கும் சம்பளம் புதிய வாழ்வு, சமாதானம், சந்தோஷம் இரட்டிப்பாக இருக்கும். பருத்தி செடியில் துணியாய் காய்ப்பதுபோல கர்த்தர் நம் தேவைகளை யாராலும் சந்திக்க முடியாத தேவைகளைக் கூட சந்திப்பார். சுகந்தம் வாழ்வில் கர்த்தர் எப்படி மணம் வீசினார்? எனப் பார்க்கலாம்.

ஒரு காலை நேரம், தினத் தியான நூலைப் படித்துக் கொஞ்ச நேரம் ஜெபித்தாள் சுகந்தம். "இயேசப்பா, இந்த அழகிய காலைப் பொழுதில் உம்மோடு பேசுவதில் எனக்கு அதிக மகிழ்ச்சி. இரண்டு காலும் சரியாக நடக்க இயலாத சூழலில் எவ்வளவு நேர்த்தியான மேசை, பொறுப்பான வேலையை கர்த்தாவே நீங்கதான் எனக்குக் கொடுத்தீங்க" என நன்றி கூறினாள்.

ஒரு மாலை வேளையில் சுந்தர், வேலை விஷயமாக நாகர்கோவில் பெண்களுக்கான ஸ்தாபனத்திற்கு வந்தபோது சுகந்தத்தைச் சந்தித்தார். வேலை நிமித்தமாக இருவருக்கும் கடிதப் போக்குவரத்து இருந்தாலும் நேரில் சந்தித்தது இல்லை. இச்சந்திப்பு தான் முதல் சந்திப்பு. உரையாடல், வேலையை மையமாகக் கொண்டிருந்ததால் உடனே திரும்பி விட்டார்.

சுந்தர் மனதில் இவள்தான் என் வாழ்வில் இணையப் போகின்றவள் என்ற உணர்வு தீர்க்கமாக வந்து சென்றது. 1968ம் ஆண்டு ஹாரி வில்லியம்ஸ், வி.டி.சி.யில் சுந்தரைப் போடுமுன் 1967ம் ஆண்டிலேயே ஆப்பிரிக்காவுக்கு அனுப்பவிருந்த ஜார்ஜ்ஸ்காட் என்னும் பொறியியல் வல்லுநரை இந்தியாவுக்கு அழைத்து வந்துவிட்டார்.

மறுவாழ்வு மையக் கட்டிடம், மற்ற வசதிகளை ஆய்வு செய்ய ஜார்ஜ் ஸ்காட்டும், சுந்தரும் இணைந்து செயல்பட்டனர்.

வேதாகமத்தில் சவுல் ராஜா, ஒரு பராக்கிரம சாலியையாகிலும், ஒரு பலசாலியையாகிலும் காணும்போது அவர்கள் எல்லோரையும் தன்னிடமாகச் சேர்த்துக் கொள்வான். (1சாமு 14:52) என்று போடப்பட்டபடி டாக்டர். ஹாரி வில்லியம்ஸ் புத்திசாலிகள், திறமையுள்ளவர், பலவான்களை எங்கு பார்த்தாலும் தன்னோடு சேர்த்துக் கொள்வதை அவர் காரியங்கள் மூலம் அறிய முடிகின்றது.

1968-ஆம் ஆண்டு டாக்டர், ஹாரி வில்லியம்ஸ் அவர்களால், வொக்கேஷனல், ஊனமுற்றோர் மறுவாழ்வு மையம் தொடங்கப்பட்டது. ஒரு சில கட்டிடங்கள் சீரமைக்கப்பட்டன. ஜார்ஜ் ஸ்காட், சுந்தர் குழு செயல்திட்டங்கள், பாடத்திட்டங்களை வகுத்தனர். தொழுநோயிலிருந்து குணமான சங்கரன் என்பவரும் இவர்களுடன் இணைந்தார். 1968ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ம் தேதி இரட்சண்ய சேனை ஐக்கியத்தைச் சேர்ந்த பிரட்ரிக் கௌட்ஸ் என்ற அதிகாரியால் வி.டி.சி. மையம் திறந்து வைக்கப்பட்டது.

ஆரல்வாய்மொழியில் வேலைக்கும், பயிற்சிக்கும் இணைந்த அதிகாரிகள், மேற்பார்வையாளர்கள் மற்றும் மாணவர்களும் கூட அர்ப்பணிப்புள்ளவர்களாகக் காணப்பட்டனர். அதற்கு உதாரணமாக ஜார்ஜ் ஸ்காட் ஒரு சம்பவத்தை நினைவுபடுத்துகின்றார்.

1977ம் ஆண்டு வடக்கு வங்காளத்தில் புயல் அடித்தது. தண்ணீரினால் ஏற்பட்ட சேதமும் புயல் சேதமும் அதிகமாக இருந்தது. ஆனாலும் அந்தச் சீரழிவிலும் ஒரு அழகு தெரிந்தது. புயல் அடித்தாலும், வெள்ளம் சீறிப் பாய்ந்தாலும் மக்கள் கூட்டம் கூட்டமாக இக்காட்சிகளை வியப்புடனும், பயத்துடனும் பார்ப்பதை கவனித்திருக்கின்றீர்களா? அவை மனிதனுக்குள் மறைந்து கிடக்கும் பல நல்லுணர்வுகளையும்,

மனித நேயத்தையும் கிளர்ந்தெழச் செய்கின்றது என்பது ஜார்ஜ்ஸ்காட்டின் அசைக்க முடியாத நம்பிக்கை.

இதேப் போல ஒரு கருத்தை ஏ.பி.ஜே. அப்துல் கலாம் தன் வாழ்க்கை சரிதை நூலில்,

ஒரு நாள்... மணிக்கு 100 மைல் வேகத்தில் அடித்த புயல் காற்றில் எங்கள் படகும் சேதுக்கரையின் நிலப்பரப்பும் கடலில் அடித்துச் செல்லப்பட்டது. பாம்பன் பாலம் தகர்ந்தது. பயணிகளோடு வந்து கொண்டிருந்த ரயில் கடலில் கவிழ்ந்தது. அதுவரை கடலின் அழகை மட்டும் ரசித்து வந்த எனக்கு அன்றுதான் அதன் கட்டுக்கடங்காத சக்தியின் ரகசியம் புலப்பட்டது, என அக்னி சிறகுகள் நூலில் கூறியுள்ளார். இயற்கைச் சீற்றம் பலருக்குப் பல பாடங்களைக் கற்றுக் கொடுக்கின்றது.

ஒருமுறை ஆரல்வாய்மொழியில் பொறுப்பாளரான மானேஜர் வேலைகளை முடித்து வரும்பொழுது, ஒரு ஊனமுற்ற சிறுவன் அவரிடம் வந்தான். "ஐயா! நான் ஒரு மணி நேரம் கூடுதலாகப் பணிபுரிய விரும்புகிறேன். ஆனால் அதற்கான கூலி எனக்கு வேண்டாம்" என்றான். "ஏன் அப்படிச் சொல்கின்றாய்? அப்படி வேலை செய்ய இயலாது. உனக்காக ஸ்டோரைத் திறந்து வைக்க வேண்டும். உன்னை மேற்பார்வை செய்ய ஒரு மேற்பார்வையாளர் வேண்டும், உன்னால் பலர் வேலை செய்யவேண்டுமே!" என்றார்.

பையன் பலத்த யோசனையுடன் நகர்ந்தான். சில நாட்கள் நகர்ந்தன. சிறுவனின் யூனிட் உள்ள மேற்பார்வையாளர், பயிற்சியாளர் என அனைவரும் ஒரு நாள் வேலை செய்ய விருப்பம் எனவும் அந்தக் கூலியை வங்காளப் புயல் நிவாரண நிதியாக அனுப்பி வைக்க வேண்டினராம் இது எப்படி நடந்தது என்றால் ஆரல்வாய்மொழி வி.டி.சி. மையத்திற்கு வரும் மாணவர்கள் தங்கள் ஊனத்தை மட்டும் மேற்கொள்ளாமல், அவர்களுக்குள் இருந்த பொறாமை, எரிச்சல், இனம், மதம்

என்ற தடைகளையும் தாண்டி மனித நேயத்தைக் காண கற்றுக் கொள்கின்றனர் என்று ஜார்ஜ் ஸ்காட் கூறி மகிழ்கின்றார். எப்படிப்பட்ட அர்ப்பணிப்பென்று பாருங்கள் அவர்களைப் போன்ற அர்ப்பணிப்புள்ளவர்களில் ஜார்ஜ் ஸ்காட்டும் ஒருவர்.

ஸ்காட் மற்றும் சுந்தர் இணைந்து செயல்பட்ட போது 800 சதுர அடியுள்ள உள்ள ஒரு பெரிய அறை புதுப்பிக்கப்பட்டது. தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த நோயாளிகளுக்குப் பல தொழில் நுட்பங்கள் கற்றுத்தர ஒழுங்கு செய்யப்பட்டன. அவற்றில் குறிப்பாக வெட்டுதல், பொருத்துதல், துளையெடுத்து குழாய்களை வளைத்தல், வெல்டிங் செய்தல், ஸ்ப்ரே பெயிண்டிங் ஆகிய தொழில்களைக் கற்றுத்தர ஒழுங்கு செய்யப்பட்டது.

சங்கரன் கொல்லனாக இருந்தபடியால் அவர் இம்மையப் பயிற்சியாளனாக மட்டும் செயல்படாமல், அவர்மூலம் ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான நாற்காலிகள், மேசைகள், சக்கர நாற்காலிகள் செய்ய திட்டமிடப்பட்டன.

இதற்கிடையில் ஜார்ஜ்ஸ்காட் டாக்டர். ஹேசல் என்ற மருத்துவ அதிகாரியைத் திருமணம் செய்து கொண்டு வந்தார். மேலும் சுந்தர், ஸ்காட் போட்ட திட்டங்கள் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு ஒப்புதல் பெற்று, வி.டி.சி. என்ற ஊனமுற்றோர் மறுவாழ்வு மையம் தொடங்கப்பட்டது.

7



இரட்சண்ய சேனை ஸ்தாபகர்
திரு.வில்லியம்பூத் அவர்கள்

கனவும் நனவும்

Dr.ஹாரி வில்லியம்ஸ்

'ஆரல்வாய்மொழி' ஆகா! பெயரைச் சொல்லும்போது அந்தத் தமிழ் வார்த்தையின் இனிமை நாவில் எச்சிலை சுரக்க வைக்கும் அளவு இனிமை பொருந்தியதாக இருக்கின்றது.

டாக்டர். ஹாரி வில்லியம்ஸ் திட்டமிட்டிருந்த வி.டி.சி. மறுவாழ்வு மையம் தொடங்க, காத்தரீன்பூத் ஆஸ்பத்திரிக்குச் சொந்தமான இடம் ஆரல்வாய்மொழியில் இருந்ததால் அந்த இடத்தைத் தெரிந்துகொண்டார். ஆரல்வாய்மொழி போக்குவரத்துக்கு வசதியான இடமாகக் காணப்பட்டது. மும்பை மற்றும் திருவனந்தபுரம் வான்வழியும், கொச்சின் துறைமுகப்பட்டினமும் நாகர்கோவிலுக்கு 10 கி.மீ. தூரமுமாக இருந்தது.

1969 வருட இறுதிக்குள் 21 பேர் மறுவாழ்வு மையத்தில் வந்து தொழில்நுட்ப பயிற்சி எடுக்கச் சேர்ந்தனர். அதில் 15 பேர் தொழுநோயிலிருந்து குணமடைந்தவர்கள். ஆறு பேர் எலும்பு சம்பந்தப்பட்ட ஊனமுற்றவர்கள். திட்டங்கள் தொடங்கப்பட்ட போது சிற்சில பிரச்சனைகள் வராமல் இல்லை. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

1. தொழுநோய் குணமடைந்தாலும் அவர்களோடு ஒரே அறையில் தங்க சிலருக்கு விருப்பம் இல்லை.

2. ஒரு வாலிபன் படிக்காதவர்களுடன் பாத்ரூமில் குளிக்கவே மறுத்துவிட்டான்.

3. உணவு, தங்க இடம் இலவசமாகக் கிடைப்பதாலும், அன்புடன் கற்றுத் கொடுப்பதாலும் சாகும்வரை இங்கேயே நிம்மதியாகத் தங்கிவிடலாம் என்ற தீர்மானத்துடன் சிலர் வந்தனர்.

4. பயிற்சி பெற்றவர்கள் வெளியே போய் வேலை செய்ய வேண்டும் என்ற உணர்வற்றிருந்தனர்.

மேற்கூறிய குறைவுகள் சீக்கிரத்தில் மறைய வாய்ப்புண்டு என ஹாரி வில்லியம்ஸ் நம்பினார்.

இந்தக்குழுவினை மேற்பார்வை செய்யும் சங்கரன், ஸ்காட், சுந்தரின் மனப்பான்மை முற்றிலும் வேறுபட்டு இருந்தது. இக்குழுவின் பிரதிபலனை எதிர்பாராமல் கடுமையாக உழைத்தனர், மற்றவர்களை உழைக்க வைக்க முடியும் என உறுதி பூண்டிருந்தனர். சில காரியங்கள் இரக்கமில்லாமல் தோல்வியைத் தழுவின. ஆனாலும் ஸ்காட், சுந்தர் ஜோடி எத்தனை முறை விழுந்தாலும், எழுந்தார்கள். உற்பத்திப் பொருட்களின் தரம் நினைத்த அளவு உயர்ந்ததாக இல்லை. ஆனால் விலைவாசி மட்டும் அதிமாகிக் கொண்டே இருந்தது.

நெய்த துணிகள், தையல், மற்றும் கடிகார ரிப்பேர் ஆகிய வேலைகளைக் காத்தரீன்பூத் மருத்துவமனை மக்கள் மட்டும் பயன்படுத்தினர். இவர்கள் தவிர மதுரை மில் பொறுப்பாளர்கள், மில்லில் ஓடும் மிஷின்களுக்குத் தேவையான உபரிப் பொருட்களுக்கு வி.டி.சியின் உற்பத்திப் பொருட்களை பயன்படுத்தினர். மில்லிருந்து அடிக்கடி ஆர்டர்கள் வருவது, ஜார்ஜ் ஸ்காட் மற்றும் சுந்தரைச் சற்று உற்சாகப்படுத்தியது.

முதல்முறையாக ஊனமுற்றோர் பயன்படுத்தும் சக்கரநாற்காலி செய்து நியாயமான விலைக்கு, திருநெல்வேலியிலிருந்த ஒரு பிரபலமான பிரமுகருக்கு விற்கப்பட்டது. அதன் ஸ்திரத்தன்மை சுமார் 10 ஆண்டுகள் எவ்வித இடையூறும் இன்றிப் பயன்படுத்தப்பட்டது. இதைக் கேள்விப்பட்ட மருத்துவமனைகள் நாற்காலிகள், மேசைகள், பெஞ்சுகள், ஸ்கிரீன்களுக்கு ஆர்டர் கொடுக்க ஆரம்பித்தனர்.

தொழிலாளர் பற்றாக்குறை, மூலப்பொருட்களைச் சேகரித்தால், எரிபொருள் பற்றாக்குறை, வேலை செய்பவர்கள் மற்றும் நுகர்வோரின் அதிகமான எதிர்பார்ப்புகள் என பல நிலையற்ற தன்மைகள் இருந்தன. அதன் விளைவாக ஏற்படும் அச்சம் பொறுப்பாளர்களை அச்சுறுத்தியது. இதன் விளைவாக பெறப்பட்ட ஒரு சிறிய கண்டுபிடிப்பு என்னவென்றால், விவசாய அடிப்படையில்

சிறுதொழில் செய்ய ஊனமுற்றவரைத் தூண்டுவதால் புதிய தொழில்முனைவோர் எண்ணிக்கை அதிகமாக வாய்ப்பு இருந்தது. வி.டி.சியில் உற்பத்தி ஆகும் பொருட்கள், நர்கர்கோவிலில் உள்ள ஆரல்வாய்மொழி பகுதியில் வசிக்கும் மக்களின் தேவைகளைச் சந்திக்கும்படி இருக்க வேண்டும் என திட்டமிடப்பட்டது. ஸ்ப்ரே பெயிண்டிங் அறை ஒன்றும், அங்கு பெயிண்ட் அடிக்கும் தொழிலைக் கற்கப்போகும் 9 வாலிபர்கள் தங்கும் அறை ஒன்றும் கட்டப்பட்டது.

இக்காலக்கட்டத்தில் டாக்டர்.ஹாரி வில்லியம்ஸ் வேறு துறைக்கு மாற்றப்பட்டார். டாக்டர் லைல் ஆலவே, தலைமை மருத்துவராக இணைந்தார். ஹாரியும் இடை இடையே வந்து ஆரம்பித்த தொழிற்கூடத்தைப் பார்வையிட்டார்.

இப்படியாக ஆரல்வாய் மொழி தொழிற்கூடம் சற்று பலவீனப்படுவது போலத் தெரிந்தாலும் ஆணிவேரான பொறுப்பாளர்களின் அர்ப்பணிப்பு, தெய்வ பயம் இருந்ததால் வேரற்று போகவில்லை. முதல் பத்து வருடங்கள் வரை எப்படி ஜீவனோடு இருந்தது என்பதைப் பார்க்கலாமா? வி.டி.சி.யின் வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாக இருந்தது கூட்டு முயற்சியே!. சுந்தர், ஸ்காட் இருவரும் ஒருமனப்பட்ட ஆவியுடன் இணைந்து செயல்பட்டனர். தொழுநோயால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்த நோயாளிகளில் தொழில்நுட்பவல்லுநர்கள் பலர் இருந்தனர். ஆனால் அவர்களின் திறமைகளைச் சரியாக அளவிட முடியாமலும் அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்காததாலும் பலவகையான பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. அதில் முக்கியமானது . சில திறமையான தொழில்நுட்ப வல்லுநர்கள், வேறு வேலை வாய்ப்புகளைத் தேடி வெளியேறினர்.

1970 இல் இப்படி வந்த பிரச்சனையால் கர்த்தர் ஒரு பெரிய விடுதலையினைக் கட்டளையிட்டார். மறுவாழ்வு மையம், காத்தரீன் பூத் மருத்துவமனை நிர்வாகத்திலிருந்து

விடுவிக்கப்பட்டு, நேரடியாக, இரட்சண்ய சேனையின் நேரடி அதிகாரத்தின் கீழ் வந்தது. இதன் விளைவாக சுதந்திரமான ஈடுபாட்டோடு வேலை செய்தனர்.

ஆஸ்பத்திரியின் தளவாடச் சாமான்கள் முப்பத் தெட்டாயிரத்தைத் தொட்டது. இது வளர்வதற்கான நல்லதொரு அடையாளம். பொருட்கள் தரம் உயர ஆரம்பித்தது. பொருளாதாரச் செழிப்பு ஏற்பட்டது. பொறியியல் தொடர்பான தொழில் நுட்பங்களில் வளர்ச்சி காணப்பட்டது. குழாய்களில் மறைபோடுதல், விவசாய மோட்டார் பம்ப்செட் உற்பத்தி, ஸ்பிரேயர், வெல்டிங், சைக்கிள் என பல பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. போக்குவரத்திற்கு வசதியாக, முக்கிய ரஸ்தாவிலிருந்து மையத்திற்கு வந்து போக சுமார் ஏழு மீட்டர் தூரத்திற்கு வாகன வசதி செய்யப்பட்டது.

கோழி வளர்ப்பிலும், ஊனமுற்ற மக்கள் புதிய தடம் பதித்தனர். ஒரு கோழிப்பண்ணை சுமார் நூறு கோழிக்குஞ்சுகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. காப்டன். ஏபல் 10 வாரப் பயிற்சிக்கென ஏ,எப்.பி.ஆர்.ஓ. ஸ்தாபனத்திடம் பயிற்சி பெற்று வந்தார். இப்பகுதிக்குப் பொறுப்பாளராகவும் மாறினார். இதுமட்டுமல்லாது கணக்கு வழக்கு, நிர்வாகப் பகுதிகளையும் திறம்படச் செய்தார்.

ஆசீர்வாதம் என்பவரும், தங்கபாண்டியன் என்பவரும், சென்னையில் உள்ள இந்திய ஆக்ஸிஜன் கம்பெனியில் வெல்டிங் பயிற்சி எடுத்தனர். அவர்கள் திரும்ப வந்து வி.டி.சி.யில் இணைந்தனர்.

'கல்வி அறிவில்லாத சகோதரர்களுக்கு அடிப்படைக் கணிதம், ஆங்கிலம், தொழில்நுட்பக்கூறுகள், வரைபட விளக்கங்கள் கற்பிக்கப்பட்டன. 1970ஆம் ஆண்டு, டாக்டர். ஹாரி வில்லியம்ஸ் இங்கிலாந்து சென்றார். இதற்குமுன் பெண்கள் மறுவாழ்வு மையம் இரண்டு தொடங்க எண்ணி முதலில் நாகர்கோவிலில் ஒன்று தொடங்கப்பட்டதும் அதற்கு

சுகந்தம் செயலராக ஆலிவ் புல்லர் உதவியால் நியமிக்கப்பட்டதும் நாம் அறிவோம். மற்றொன்று திருவனந்தபுரத்தில் நிறுவப்பட்டது. 1971-ல் இம்மையத்தில் பயிற்சி பெற்ற முருகையா, ஸ்டோர் பொறுப்பாளராகப் பணி ஏற்றார். கமலியாஸ் என்பவர் டர்னிங் வேலையில் சேர்ந்தார். புத்தென்கடா மோசஸ் என்ற சகோதரர், ராமசாமி என்பவர்கள் நாகர்கோவில் உள்ள மூன்று சக்கர சைக்கிள் செய்யும் தொழிற்சாலையில் வேலைக்கமர்த்தப்பட்டனர். இப்படிச் சிலர் பயிற்சியின் நிமித்தம் வேலைக்கமர்த்தப்பட்டாலும், சிலர் பயிற்சி பெற்றும் வெளியே சென்று பணி செய்ய இயலாத சூழல் ஏற்பட்டது.'

தொழில்நுட்பத்துறை வெற்றி நடை போட்டது. நெசவு, தையல் பகுதிகள் பயிற்சியாளர் இல்லாமல் மூடும் நிலைக்கு தள்ளப்பட்டது. சுந்தர் அதிகப் பிரயாசப்பட்டதும், முழு ஆயத்தமாய் இருந்த கடிகாரத்தொழில், தானியங்கி கடிகாரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதால், தொழில்நுட்பங்கள் தெரிந்திருந்தும் பயன்படுத்தும் வாய்ப்பு இல்லாமல் போனது வருந்தத்தக்கது. வரி பிரச்சனை இடையில் வந்து ஒட்டிக்கொண்டது. சக்கர நாற்காலிகளை விற்பனைக்கென ரயில், மற்றும் ஆகாய மார்க்கமாக எடுத்துச் செல்ல இலவச அனுமதிக்கான விண்ணப்பம் தமிழக அரசு பார்வைக்கு அனுப்பப்பட்டது.

1972 ஆம் ஆண்டு சில சகோதரர்கள் பி.எச்.ஈ.எல். நிறுவனத்தில் பணியில் சேர்ந்தனர். ஒட்டஞ்சத்திரத்தில் உள்ள கோழிப் பண்ணையில் பணிபுரியவும், சிலர் சென்னையில் உள்ள அரசு பணிமனையில் பணிபுரியவும் சென்றனர். சுந்தர் எக்பர்ட், ஹாரி வில்லிம்ஸ் மற்றும் ஜார்ஜ் ஸ்காட் ஆகியோர் கண்ட கனவின்படி வி.டி.சி.யில் பயிற்சி பெற்ற ஊனமுற்ற சகோதரர்களின் செயல்திறன் மெச்சும்படியாக இருந்தது. கோழிப்பண்ணையில் கோழிக்குஞ்சுகள் பெரும்பாலானவை, முட்டையிடும் பொரித்த பருவம் வந்து முட்டைகளை விற்கக்கூடிய அளவு கோழிப்பண்ணைத் தொழில் முன்னேற்றம் கண்டது.

1974 ஆம் ஆண்டில் ஆரல்வாய்மொழி ஊனமுற்றோர் மறுவாழ்வு மையத்தில் பயிற்சி பெற்ற ஆசீர்வாதம் என்ற சகோதரரை 'ஊனமுற்றவர் மத்தியில் சிறந்த பணி செய்தவர்' என மாநில அரசு தெரிந்தெடுத்து ரொக்கப் பரிசு கொடுத்து கௌரவித்தது. இதே வருடம் இங்கிலாந்து தேசத்திலிருந்து ஸ்டீபன் ஸ்மித் என்ற சமூகக் கல்வியாளர் வந்து வி.டி.சி.யில் சுந்தர் குழுவில் இணைந்தார்.

1975 ஆம் ஆண்டு 40% உற்பத்தி உயர்ந்தது. நிதிநிலையில் நல்ல உயர்வு ஏற்பட்டது. ஒலிபெருக்கி, டிக்கெட்டுகள், அச்சடிக்கும் எந்திரம், வோல்டேஜ் ஸ்டெபிலைசர் பெட்டிகள் (25 கே.வி.ஏ. பவர் ஜெனரேட்டர்) என தயாரிக்க ஆரம்பித்தனர். கோழிகள் தொடர்ந்து முட்டையிடும்படி கர்த்தர் முட்டை உற்பத்தியினைப் பெருக்கினார். மேலும் 7 பேர் பயிற்சி முடித்து சென்றனர். மதுரை கோட்ஸ் டெக்ஸ்டைல்ஸ் மில் தொடர்ந்து தங்கள் இயந்திரங்களுக்கு தேவையான உபரிப் பொருட்களுக்கு ஆர்டர் கொடுத்தனர்.

விக்ரமசிங்கபுரத்தில் உள்ள மதுரை கோட்ஸ் மில்லில் சுந்தரின் தம்பி செல்வராஜ் பணி புரிந்தார். அவர்களைப் பார்க்க சுந்தர் சக்கர நாற்காலியில் சென்றார். அப்போது அங்குள்ள மானேஜரிடம் வி.டி.சி.யில் உற்பத்தி ஆகும் பொருட்களுக்கு ஆர்டர் பிடிக்கவும் சென்றார். மானேஜரிடம் அறிமுகம் செய்தபின் மில்லைச் சுற்றிப் பார்க்கச் சென்றனர். அப்போது, ஒரு பெரிய இயந்திரம் பழுதடைந்து ஓடாமல் வைக்கப்பட்டிருந்தது. சுந்தர் அதைக் கண்டு 'இவ்வளவு பெரிய இயந்திரம் எவ்வளவு நாட்களாக ஓடவில்லை?' என்றார்.

'பல ஆண்டுகளாக ஓடவில்லை. இஞ்சினை ஓடவைக்கும் முக்கியமான ஒரு பகுதி கிடைக்கவில்லை. இங்கிலாந்து தேசத்தில் தான் அது கிடைக்கும்' என கூறிய மானேஜர் மற்ற இடங்களை பார்வையிட சுந்தரை அழைத்தார். 'இருங்கள் இதன் பழுதான பகுதி இருக்கிறதா?'

என்று கேட்டார். 'அதிலேயே உள்ளது' எனச் சுட்டிக்காட்டினார் மானேஜர். அத்துடன் மீதி இருந்த நைலான் பகுதியினையும் கொடுத்தார். சுந்தர் பழுதான கருவி மற்றும் நைலான் துண்டுகளை எடுத்துக்கொண்டு ஆரல்வாய்மொழி வந்து, அதேப்போல பட்டறையில் செய்தார்.

பல வருடங்கள் ஓடாத நிலையில் இருந்த அந்த மெஷின் சுத்தம் செய்யப்பட்டு எண்ணெய் போடப்பட்டு இருந்தது. சுந்தர் திரும்ப விக்ரமசிங்கபுரம் சென்று தான் செய்த கருவியைப் பொருத்த வேண்டிய இடத்தில் பொருத்தி மின்பொத்தானை அழுத்த அது அழகாக ஓடியது. மேனேஜரின் வியப்புக்கு அளவே இல்லை. சுந்தர் கையினை குலுக்கித் தன் பாராட்டைத் தெரிவித்தார். அதற்குப் பின் போர்மேனை அழைத்து இன்னும் பழுதுபட்ட இயந்திரங்களைக் கணக்கெடுத்து பழுதுபட்ட நிலையில் உள்ள இயந்திரங்களை பழுதுபார்க்கும் பொறுப்பைச் சுந்தரிடம் கொடுத்ததுமின்றி, தொடர்ந்து இயந்திரங்களுக்குத் தேவையான உபரிப் பொருட்கள் வி.டி,சி.யில் மட்டும்தான் ஆர்டர் கொடுக்க வேண்டுமென உத்தரவு போட்டார்.

சுந்தரின் இந்த அதீதபுத்திசாலித்தனம் அன்று மேஷாக் கிருபாகரனுக்கு ஆச்சரியத்தை தந்ததுபோல அநேகருக்கு அவரது நுட்பமான ஆராயும் தன்மை மேலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் தன்மையும் பலரை ஆச்சரியத்துக்குட்படுத்தியது. மற்றொருமுறை கேரள மாநிலத்தில் உள்ள கெல்ட்ரான் எலக்கட்ரானிக் உற்பத்தியாளர்களுக்கு உபரி பாகங்கள் செய்து கொடுத்து வந்தார். அவர்கள் இந்தியாவின் முதல்தரமான கம்பெனி. 16 எம்.எம். சினிமா புரஜெக்டர்கள், டிரான்ஸ்பார்மர்கள் மற்றும் கம்ப்யூட்டர்கள் செய்வதில் திறமைசாலிகள். அரைகுறையாக இருப்பவர்களிடம் தொழில்முறையில் தொடர்பு வைக்க மாட்டார்கள். அவர்கள் வி.டி.சி. யை அணுகித் தொழில் முறையில் ஒப்பந்தம் செய்தது தொழில் வட்டாரத்தில்

வி.டி,சி.க்கு நல்ல பெயரைத் தந்தது. வியாபார ரீதியில் சுந்தர் சற்று அழுத்தமான குணமுடையவராக இருந்துள்ளார் என்பதை அறியமுடிகிறது.

வி.டி..சி.யில் புரஜெக்டர் செய்யக் காரணமான ஒரு நிகழ்ச்சி நடந்தது. பேராயர் ஜெபராஜ் வீட்டில் 16 எம்.எம். புரஜெக்டர் ஒன்று இருந்தது. அதைக் கிறிஸ்துவுக்கு வாலிபர் புரஜெக்டர் என்ற இயக்கத்தினர் பயன்படுத்தி வந்தனர். ஆனால் திடீரென அது வேலை செய்யவில்லை. பேராயர் ஜெபராஜ் அவர்களின் மூத்த மகன் ராஜா அதைச் சரி செய்ய சுந்தரிடம் கொடுத்தார். சுந்தர் அந்த புரஜெக்டரை கெல்ரான் கம்பெனியிடம் கொடுத்து சரி செய்ய வேண்டினார். ஏற்கனவே அறிந்தபடி கெல்ட்ரான் கம்பெனி புரஜெக்டர்கள் செய்பவர்கள். ஆனால் சுந்தர் கொடுத்த புரஜெக்டரை ரிப்பேர் செய்யாமல் கிடப்பில் போட்டுவிட்டார்கள். திருப்பியும் தரவில்லை. அதே கம்பெனி உபரி பாகங்களுக்காக சுந்தரிடம் ஆர்டர் கொடுத்தார்கள். சுந்தர் மௌனம் சாதித்து விட்டார். கம்பெனிகாரர்கள் நேரடியாக ஆள் அனுப்பி உபரி பாகங்கள் வேண்டியபோது, சுந்தர் அவர்களது தவறைச் சுட்டிக்காட்டி புரஜெக்டர் சீர்செய்யப்பட்டு வந்ததும் உபரிபாகங்கள் அனுப்புவதாகக் கூறிவிட்டார்.

பின்புதான், கம்பெனி தங்கள் தவறுக்கு மன்னிப்பு கேட்டனர். புரஜெக்டர் ஒரே வாரத்தில் சீர் செய்யப்பட்டு வந்துவிட்டது. பிறகென்ன மறுதபாலில் கெல்ட்ரான் கம்பெனி ஆர்டர் செய்த உபரிபாகங்கள் போய் சேர்ந்து விட்டன. இது சுந்தரின் நிர்வாகத் திறனுக்கு ஒரு உதாரணம்.

ஆரல்வாய்மொழி டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட் தெற்குப் பகுதியில் ஓகோ, ஓகோ என ஓடியது. 1976 ஆம் வருடம் வி.டி.சி.யில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. அதே வருடம் உலக அளவில், ஊனமுற்றோர் விழிப்புணர்வு தினம் கொண்டாட இந்திய அரசு தேசிய அளவில் திட்டமிட்டது. அதுசமயம் ஆரல்வாய்மொழி வி.டி..சி.

ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென சிறந்த சேவை செய்ததற்கான தேசிய விருது பெற்றது. இந்த மகிழ்ச்சியினை காத்தரீன் பூத் மருத்துவமனை மட்டுமல்லாது, பலர் மகிழ்ச்சி அடைந்தனர். டில்லி மாநகரில் விருது கொடுக்கும் விழா நடந்தது. வி.டி.சி.யின் பிரதிநிதியாக சுந்தர் எக்பர்ட் விருதினைப் பெற்றார்.

இந்த விருதின்மூலம், தமிழக அரசால் பட்டித்தொட்டியில் உள்ள மறுவாழ்வு மையங்கள் அங்கீரிக்கப்பட்டன. அதன் வேலைகள் பத்திரிகைள், மற்றும் தகவல் ஊடகங்கள் (டி.வி. ரேடியோ, தினசரி இதழ்கள்) மூலம் வெளிவந்து மக்கள் மத்தியில் பல பாராட்டுகளைப் பெற்றன.

இந்த வாய்ப்பை சுந்தர் சரியாகப் பயன்படுத்த நினைத்தார். 'ஊனமுற்ற மக்களால் செய்யப்படும் மேசை, நாற்காலி, பீரோ, மற்றும் இயந்திர உபரிப் பொருட்களை, அரசு அலுவலகங்கள் வாங்கி உற்சாகப்படுத்த வேண்டும் எனவும் வி.டி.சி.யில் செய்யப்படும் பொருட்கள் தரத்திற்கு உத்திரவாதம் தரப்படும் எனவும் அரசுக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்தார்.

இதன் விளைவாக மற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆர்டர் கொடுக்க முன் வந்தனர். அரசு சார்பில் தகவல் தொடர்பு துறையிலும் மற்றும் தூத்துக்குடி துறைமுக அலுவலகங்களிலிருந்தும் ஆர்டர் வந்தன. சில மத்திய அரசு நிறுவனங்கள் ஏற்கனவே உள்ள தொடர்பைத் தொடர்ந்தன.

அதுமட்டுமல்லாமல் தமிழ்நாடு மின்சார வாரியம், வி.டி.சி.யில் உற்பத்தித்திறனைக் கூட்டும்படி கூடுதல் மின்சாரம் வழங்கும் பொருட்டு ஒரு டிரான்ஸ்பார்மரை வி.டி.சி. வளாகத்திற்குள் அமைத்துக் கொடுத்து உற்சாகப்படுத்தினர். டீஸலில் ஓடும் வேன் ஒன்று புதிதாக வாங்கப்பட்டது. மானேஜர் உபயோகத்திற்கான ஒரு பழைய கார் வாங்கப்பட்டது.

இரட்சண்யசேனையின் அகில உலகத் தலைவர்களில் ஒருவரான ஒய்ஸ்மேன் இங்கிலாந்திலிருந்தும் நியூசிலாந்திலிருந்து ராபர்ட் ஆல்கார்ன் மற்றும் கிளமெண்ட் என்பவர் வி.டி.சி. வந்து ஆய்வுப்பணி மேற்கொண்டபின் சென்றனர்.

1977 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் மறுவாழ்வு தினம் கொண்டாடப்பட்டபோது, தங்கப்பாண்டியன் என்பவர் வெல்டிங் துறையில் சிறந்த போதனையாளர் என்ற தரச்சான்றிதழ் மற்றும் ரொக்கப்பரிசு பெற்று வி.டி.சி.யின் சிறப்பைக் கூட்ட கர்த்தர் கிருபை செய்தார்.

மேற்கூறிய வெற்றிச் சிறகுகளுக்கு மத்தியில் சில பிரச்சனைகளும் வந்தன. அவற்றில் சில:

1. கல்வி அறிவு அற்ற தொழிலாளர்களுக்கு உற்சாகம் ஊட்டப்படவில்லை.

2. தொழுநோயாளிகள் குணம் பெற்றிருந்தாலும், மற்றவர்கள் பழகத் தயக்கம் காட்டினர்.

இவை சற்று மந்தத்தன்மையை வளர்ச்சியில் காட்டின.

திரும்பவும் இங்கு பயிற்சி பெற்ற தொழிலாளர் ஜே. ஜெபஞானம் என்பவர் திருச்சியில் உள்ள ORBIT (Organisation for Rehabilitation of the Blind) என்று அழைக்கப்படும் நிறுவனத்தில் இணைந்தார். அவருக்கு கண்காணிப்பாளர் பதவி கிடைத்தது.

என்.வேல்சாமி என்பவர் ஒட்டஞ்சத்திரத்தில் உள்ள அம்பிளிக்கையில் வேலையில் சேர்ந்தார். அங்கு தொழுநோய் மறுவாழ்வு மையம் இருந்தது. பீரோ செய்யும் தொழில் தொடங்கப்பட்டது. வேல்சாமி மேற்பார்வை செய்தல் ஆலோசனை வழங்குதல் போன்ற பணிகள் செய்தார்.

சுந்தர் எக்பர்ட் மற்றும் ஹாரி வில்லியம்ஸ், ஜார்ஜ் ஸ்காட் ஆகிய மூவரின் கடினமான கூட்டுமுயற்சி

தொடர்ந்தது. ஒரு நாள் தேநீர் அருந்தும் வேளையில் கர்த்தர் ஒரு காரியத்தை நினைப்பூட்டினார். வி.டி.சி.யில் பணி தொடங்கி பத்து ஆண்டுகள் நிறைவு பெறும் நாட்கள் வந்து விட்டது என்பதை நினைவுகூர்ந்தனர். பழைய இயந்திரங்களை அப்புறப்படுத்திப் புதிய நவீன இயந்திரங்கள் வாங்கத் திட்டமிட்டனர்.

உதகமண்டலத்தில் "ஊனமுற்றோர் அகில இந்திய மாநாடு" நடந்தது. சுந்தர் அதில் 'ஊனமுற்றோருக்கான பணிமனைகள்' என்ற ஆராய்ச்சி கட்டுரையினைச் சமர்ப்பித்தார். அதன் சாராம்சத்தை உங்களுக்குத் தர விரும்புகின்றேன்.

"ஊனமுற்றோரை மூன்று வகைப்படுத்தலாம்."

1. லேசான ஊனம்

2. வேலை செய்ய முடியாத அளவுக்கு ஊனமடைந்திருத்தல் (ஆனாலும் சுயதேவையைப் பூர்த்தி செய்தல்)

3. முற்றிலும் மற்றவரைச் சார்ந்திருந்தல்.

மேற்கூறிய மக்கள் பணி செய்யும் இடம் அவர்களுக்கு வெளி இடங்களில் வேலை வாய்ப்பு தருவதாகவும் வேலை செய்யுமிடமாகவும், மூலப் பொருட்கள் உற்பத்தி பொருளாக மாறுமிடமாகவும் இருத்தல் வேண்டும். இவ்வகை பணிமனைகள் ஒரு வீட்டைப் போல அவர்கள் சரீரம் மற்றும் வேலைத் தேவைகளைச் சந்திக்கும் இடமாக இருப்பது அவசியம்.

உலக அளவில் இதற்கென அமைக்கப்பட்ட கட்டுக்கோப்பான இரண்டு கொள்கைகள்:

1. பணிக்குத் தேவையான மூலப்பொருட்கள் வ்ழங்குதல் அல்லது எளிதாகக் கிடைக்கும்படி செய்தல்.

2. ஊனமுற்றோரின் திறமைகளை வலுப்படுத்தி வெளியிலும் சுதந்திரமாகச் செயல்பட தகுதிப்படுத்துதல் பணிக்குத்

தேவையான உபகரணங்கள் மூலப்பொருட்கள் உள்அடக்கிய பணிமனை என்பது sheltered என்ற பதத்திற்கு பொருத்தமானதாக இருக்கும்.

நான்கு காரணங்களுக்காக இந்த "sheltered' பணிமனை நிறுவுவது நல்லது.

1. **எல்லாவகை ஊனமுற்றோருக்காக :** யாருக்காக இவை நிறுவப்படுகின்றன என்பதில் நமக்கு ஒரு தெளிவு இருக்க வேண்டும். இதுவரை ஒரு குறிப்பிட்டரக ஊனமுற்றோருக்காக அமைத்துள்ளோம். ஆனால் இங்கே அமைக்க நினைப்பது அனைத்துரக ஊனமுற்றோரையும் அழைத்து அவர்களுக்குப் பொருத்தமான வேலைகளைக் கொடுப்பது (உ.ம்) மற்ற தொழிலாளர்களை மேற்பார்வை செய்வது, தலைவராக உருவாக்குவது, குமாஸ்தாவாக்குவது, குழுக்களாகப் பிரித்து வேலையைப் பழக்குவதன்மூலம் குழுப்பண்புகளை வளர்ப்பது இதன்மூலம் ஒரே குடும்பமாக அமைத்து பரஸ்பர உதவி செய்வது, பரஸ்பர அன்பைப் பரிமாறுவது போன்ற அமைப்பில் ஊனமுற்றோரை அமைப்பது ஆகும்.

2. **பணிமனை அமைத்தல்:** வேலை செய்ய சரியான பணிமனைகளைத் தெரிந்து கொள்வது அத்துடன் என்ன பொருளை உற்பத்தி செய்யப் போகின்றோம் என்பதற்கான மூலப்பொருளைத் தெரிந்து கொள்வது: சுற்றுச்சூழலில் அவை எளிதாக கிடைக்கும் இடங்களைத் தேர்ந்தெடுப்பது. அதில் பணிமனை அமைப்பது. (உம்). மீன் பதப்படுத்தும் பணி செய்ய கடற்கரை பகுதிகளில் பணிமனைகளை அமைப்பது. மூலப் பொருள் அருகில் கிடைப்பது போல் அமைக்க வேண்டும். தரமுள்ள பொருட்களை அடையாளம் கண்டுகொள்ள பழகுதல். தரமான பொருட்களை தயாரிப்பதில் தடையாய் இருக்கும் கருத்துகளுடன் ஒத்துப் போகக் கூடாது. (உ.ம்) சப் காண்ட்ராக்ட் கொடுப்பது பொருட்களின் தரம் குறைய வாய்ப்புண்டு.

3. **மேற்பார்வையாளர்கள்:** பணிமனைகளில் மேற்பார்வை செய்யும்படி அமர்த்தப்படுபவர்கள், ஊனமுற்றோரின் மனநிலையினை புரிந்து கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். அவர்களால் எந்த அளவு வேலை செய்ய முடியும் என்பதை உணர்ந்து வேலை வாங்க வேண்டும். உற்பத்தியினை மனதில் கொண்டு லாபநோக்கோடு கடுமையாக வேலை வாங்கக் கூடாது. அப்படி செயல்பட்டால் இந்த முழு திட்டப்பணியும் தோல்வியடைய வாய்ப்புண்டு. கடவுளுக்கு வேலை செய்வது போல முழு அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

4. **சிறப்புத் தகுதிகள்:** 'மேற்பார்வையாளர்கள்' எனப்படுபவர்கள், வேலைகளை மேற்பார்வை செய்வது மட்டுமல்லாமல் அவர்களிடம் கீழ்க்காணும் தகுதிகள் இருத்தல் அவசியம். அன்புள்ளம் கொண்டவர்களாக, மனதுருக்கம் நிறைந்தவராக இருக்க வேண்டும். மேலும் பணிமனை குறித்த அறிவு நிரம்பப் பெற்றவராக இருத்தல் நலம். அடுத்ததாக வேலை செய்பவர்களின் தனிப்பட்ட தகவல்களை அறிந்திருத்தல் நல்லது. பொருட்களின் உற்பத்தித்திறனை புரிந்து வைத்திருத்தல் வேண்டும். நிதிநிலை, பொதுஜனத் தொடர்பு, பணியாளருக்குப் பயிற்சி அளிப்பது போன்ற வளர்ச்சியின் நிலைகளை அறிந்து வைத்திருப்பதும் நல்லது. மேற்கூறிய அத்தனையும் புரிந்து வைத்திருத்தல் நல்லது.

5. **நிதி:** இது ஒரு முக்கியமான பகுதி. இந்தத் திட்டத்தின் நோக்கம் லாபம் சம்பாதிப்பது அல்ல. ஊனமுற்றோரைத் தகுதிப் படுத்துவதுதான். இத்திட்டத்தின் நோக்கம். சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவு திட்டம் பலனளித்தால் போதுமானது. இப்படிப்பட்ட திட்டங்கள் கைகூடி வர மாநில மற்றும் மத்திய அரசு மானியம் கொடுத்து உதவினால் அநேக ஊனமுற்றோர் பயன் பெறுவர். அதுமட்டுமல்லாமல் முழுமானியம் கொடுக்க

இயலாதபட்சம், பகுதி மானியம் அல்லது சுலபமான முறையில் தவணைமூலம் திருப்பித் தரும் மானியம் கொடுத்து உதவலாம். அதிக லாபம் இத்திட்டத்தின்மூலம் கிடைக்காவிட்டாலும் நஷ்டம் நிச்சயம் வராது. இத்திட்டத்தின் மூலம் வேறு புதிய திட்டத்தில் அடி எடுத்து வைக்க முடியும். அடுத்ததாக ஆக்கப்பூர்வமான சக்தி பெருக வாய்ப்புண்டு. பழமை விரும்பிகளால், லாபக் கண்ணோட்டத்தில் பார்ப்பவருக்கு இது கவர்ச்சியாகத் தெரியாது. ஆனால் ஊனமுற்றோர் மறுவாழ்வு திட்டத்தில் இது ஒரு புதிய மைல்கல்.

சுமார் 32 வருடங்களுக்கு முன்னால் ஏதோ ஒரு மாநாட்டில் வாசித்த ஆய்வு அறிக்கையினை ஏன் கொடுத்திருக்கின்றேன் தெரியுமா? ஒரு தூரப்பார்வை கொண்ட தரிசனக்காரருக்குக் கிடைத்த காட்சியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளத்தான். சுந்தரின் ஆய்வு அறிக்கையில் ஒரு மேலாளர் அரசுக்கு கொடுக்கும் அறிக்கையாக அது தென்படவில்லை. "தன்னைப் போல் ஊனமுற்றவர்களையும் ஆக்கப்பூர்வமான காரியங்களுக்குப் பயன்படுத்த முடியும் தயவு செய்து ஒரு வாய்ப்பு தாருங்கள்" எனக் கூறுவது போல் தெரியவில்லை?

எவ்வளவு அழகான ஆங்கிலத்தில் இந்த அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். இவரா பள்ளி மேல்படிப்பு படிக்காதவர்!

1978 ஆம் ஆண்டு ஆரல்வாய்மொழி வி.டி.சி. மையத்திற்கு இன்னும் ஒரு தங்கச் சிறகு பறந்து வந்தது. இந்திய தொழுநோய் மையத்திடமிருந்து சங்கரன் என்ற பணியாளருக்கு சாதனை விருது மற்றும் ரொக்கப் பரிசு கிடைத்தது. சுந்தர் எக்பர்ட் தமிழகச் சமூகநல அமைச்சரிடம் சென்று விருதினைப் பெற்றார். மும்மையில் நடந்த ஊனமுற்றோர் மறுவாழ்வு மாநாட்டில் சுந்தர் எக்பர்ட் பங்கேற்றார். பணிமனை தொழிலாளர்கள் ஒரு நாள் பணித்

தொகையினை ஆந்திரப்பிரதேச புயல் நிவாரணநிதியாக அனுப்பி வைத்தனர்.

கோழிப்பண்ணைக்கு ஒரு குளிர் சாதனப் பெட்டி, மற்றும் ஒரு புது ஷெட் என வளர்ச்சி பெற்றது. 2.24 ஏக்கர் நிலம் வாங்கி அதன் மூன்று பகுதியிலும் சாலைகள் போடப்பட்டன. திருவனந்தபுரத்தில் நடந்த மாநாட்டுக்கு வந்த வெளிநாட்டு விருந்தினர்கள் வி.டி..சி. மையத்தைப் பார்த்து மகிழ்ந்தனர்.

இங்கிலாந்து தேச இரட்சண்ய சேனையின் அர்ப்பணிப்பு உள்ள அருட்பணியாளர்களின் சேவை, இந்தியாவை ஒரு எடுத்துக்காட்டான நாடாக மாற்றியது மட்டுமின்றி ஆரல்வாய்மொழி என்ற கிராமம் ஊனமுற்றோர் மறுவாழ்வு மையம் மூலம் சரித்திரத்தில் நீங்காத இடம் பெற்றது. அதில் ஒரு சரித்திர நாயகனாக சுந்தரும் இடம் பெற்றது வியப்பிற்குரிய நிகழ்வுதானே!

கர்த்தர் கரவலாடுகளின் பின்னாகத் திரிந்த தாவீதை இஸ்ரவேலருக்கு ராஜாவாக ஆக்கினதுபோல அடிமைக் கூட்டத்தில் விற்கப்பட்ட வாலிபன் யோசேப்பை எகிப்தின் அதிபதியாக உயர்த்தியது போல கர்த்தர் சுந்தரையும் உயர்த்த சித்தம் கொண்டார்போலும்.

8

அறியாத எல்லைகளில் அன்புள்ளங்கள்

'மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என கர்த்தர் நினைக்கிறார். ஒருவருக்கு ஏற்ற துணையை ஏற்படுத்தித்தர, அவர்(ள்) எங்கிருந்தாலும் கொண்டுவந்து முன்னாக நிறுத்தி விடுவார்.

கர்த்தர் இந்த உலகத்தை உருவாக்கியவர். இரவு, பகல், வானம், கடல், ஊர்வன, பறப்பன என பல காரியங்களை படைத்து முடித்தபின் அவைகளை அழகு பார்த்து 'ம்..ம்... இவை நல்லவை தான்!' என்றவர் ஆதாம் தனியாக தோட்டத்தில் அலைவது கண்டு, அவன் தனிமையில் இருப்பது நல்லதல்ல என உணர்ந்தார். அதைச் சரி செய்யவே அவனிடமிருந்தே, விலா எலும்பினை எடுத்து அழகிய பெண்ணாக உருவாக்கி, அவனுக்குத் துணையாக கொடுத்தார். அதுபோல சுந்தர் எக்பர்ட்டுக்கு முப்பத்தி நான்கு வயது ஆனது. அவர் தினமும் கண்ணாடியில் தன் உருவத்தைக் காணும்போதெல்லாம், 'ஆகா தலையின் முன்பகுதியில் முடியெல்லாம் உதிர்ந்து விட்டதே! ஆங்காங்கே வெள்ளி முடி கண்சிமிட்டுகிறதே எனக்கு... யார் பெண் தரக்கூடும்?' என்று நினைத்திருக்கலாம். யார்... யார் சுந்தரின் திருமணத்திற்குக் கவலைப்பட்டார்களோ தெரியாது. ஆனால் கர்த்தர் நினைவுகூர்ந்தார். சுந்தரால் ஓடியாடி பெண் தேட முடியாது என்று கருதியோ என்னவோ, அவர் வேலை செய்த ஸ்தாபனத்தில் அவரை முற்றிலும் புரிந்து கொண்ட ஒரு பெண்ணை ஆயத்தப்படுத்தினார். சுந்தரைக் கண்டு ஒதுக்க இயலாதபடி அவரைப் போல ஒருத்தியை ஏற்கனவே உருவாக்கி இருந்தார்.

சில ஆண்டுகளுக்கு முன் மோஸஸ் என்பவர் வந்து, சுந்தரிடம் கடிகாரத்தைக் கொடுத்து அதை சரி செய்ய இயலுமா? என்று கேட்டார்கள். சுந்தருக்குப் பல வேலைகள் இருப்பினும் சரி செய்து கொடுப்பதாக வாக்கு கொடுத்தார். அப்போது, அவரது மனைவியின் உறவினர் சுந்தர் என்பதையும் அறிமுகமாகக் கூறினார். அதுமட்டுமல்ல அவரது பெண் ஒரு பட்டதாரி எனவும், அவள்

நாகர்கோவிலில் பெண்கள் மறுவாழ்வு மையத்தில் வேலைக்குச் சேர்ந்திருப்பதாகவும் கூறினார்.

நாகர்கோவில் பெண்கள் மறுவாழ்வு மையத்தில், அலுவலக பணியில் ஆழ்ந்திருந்த சுகந்தம் கண்ணாடி வழியாக வெளியே பார்த்தாள். தூரத்தில் ஊனமுள்ள பெண்களும் தொழுநோயிலிருந்து நிவாரணம் பெற்ற பெண்களும் பேசி சிரித்தபடி முகமலர்ச்சியுடன் காணப்பட்டனர்.

ஊனமுற்ற பெண்கள் மறுவாழ்வு மையத்திற்கு அந்தப் பெண்கள் வந்தபோது கறுத்து களையிழந்து, இனி எங்களுக்கு விடிவே இல்லை என்ற நிலையில் தவழ்ந்தும், நகர்ந்தும் வந்தனர். இந்தப் பள்ளி எப்படி இருக்குமோ? என்ற குழப்பத்தில் வந்தார்கள். இன்று அவர்கள் வாய்கொள்ளாச் சிரிப்புடன் அடித்துப் பிடித்து விளையாடிக் கொண்டிருப்பது மகிழ்ச்சியாக இருக்கின்றது.

சுகந்தத்திற்கும் இந்த புதுவேலை மகிழ்ச்சியைத் தந்தது. சுகந்தத்தால் சுவரைப் பிடித்தபடி நடக்க முடிந்தது. படித்த படிப்பு அடித்த டைப்ரைட்டிங் பயிற்சி வீணாகாமல் கர்த்தருக்கு ஊழியம் செய்யமுடிந்தது எனத் திருப்திபட்டாள். பெண்கள் மறுவாழ்வு மையத்திற்குச் சேர வரும் பெண்களுக்கு ஊனமுற்றவர்கள் என்பதைத் தவிர விசேஷமான எந்தத் தகுதியும் எதிர்பார்க்கவில்லை. படித்திருக்க வேண்டும் என்ற, ஒரு வரம்பு இல்லை. ஆனால் வயது 16லிருந்து 25 வயதிற்குள் இருக்கும் வாலிபப் பெண்களையே தேர்வு செய்தனர்.

அவர்களுக்கு தையல், அத்தோடு எம்ராய்டரி போன்றவை இரண்டு வருடக் காலகெடுவிற்குள் கற்றுத்தர திட்டமிட்டனர்.

தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமான பெண்களே வந்து சேரத் தொடங்கினர். கொஞ்சம் கொஞ்சமாக சிறுவர் உடுப்புகளும், தோட்டக்கலையும்.

வீட்டளவுக்கு கோழி வளர்த்தலும், பால் கறப்பது போன்ற வேலைகளையும் அறிமுகப்படுத்தினர். இப்படி வரும் பெண்களுக்கு உணவு தங்குமிடம் அத்தனையும் இலவசமாக வழங்கப்பட்டன. இந்த பயிற்சி எடுத்த பெண்கள் மறுவாழ்வு மையங்களில் வேலைக்கு எடுத்துக் கொள்ளபட்டனர்.

சுந்தர் எக்பர்ட் பெண்கள் மறுவாழ்வு மையத்தின் போர்டு மெம்பராக இருந்தபடியால் ஆரல்வாய்மொழியிலிருந்து நாகர்கோயில் 10 கி.மீ தூரமாக இருந்ததாலும் மேற்பார்வை, நிர்வாகம் மற்ற செயற்திட்டக் கூடுகை என அடிக்கடி வருவார். தனது மூன்று சக்கர நாற்காலியில் மோட்டார் பொருத்தியிருந்ததால், தனது உதவியாளர் காதர் என்பரை அழைத்துக்கொண்டு, சர்... சர்.. என வந்து விடுவார். சுகந்தத்தை அதிகாரி என்று மட்டுமல்லாமல் தோழமையுடனும் அதற்கு மேல் தன் வாழ்க்கைத்துணையாக .வர இவர் பொருத்தமானவரா என்பதை ஆராயும்படியும் கூட வந்திருக்கலாம்.

சுகந்தத்திடம் அவர் பெண்கள் மறுவாழ்வு மையம் குறித்தான விசாரிப்புளை முதலில் விசாரிப்பார்.

சுகந்தத்திற்கும் அவர் இயலாமைக்கு மேல் அவரது நிர்வாகத்திறன், மேலோங்கி நிற்பதைக்கண்டு, தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வாள். அதுமட்டுமல்லாது அவரைப்பார்த்தாலே மனதில் ஒரு இரக்கம், அன்பு சுரக்கும். சுந்தர் மகா புத்திசா்லி, மனஉறுதி உடையவர் என்பதால் ஒரு அன்பு கலந்த இரக்கம் எழத்தான் செய்தது. ஏனெனில் தாய், தகப்பனற்றவரின் மீது இரக்கம் எழூவது இயற்கைதானே.

ஒருநாள் காலை அலுவலக அறையில் அமர்ந்திருந்த சுகந்தத்திற்கு சுந்தர் வருவது அலுவலகத்திற்கு வரும் தபால் மூலம் தெரிந்தது.

போர்டு மீட்டிங்காக சுந்தர் வரும்பொழுது செகரட்டரி என்ற ஸ்தானத்தில் சுகந்தமும் அந்தச் சந்திப்பில்

கலந்து கொள்வது உண்டு. பரஸ்பர விசாரிப்புகள் தவிர வேறு தனிப்பட்ட முறையில் எந்தத்தகவல்களும் பரிமாற அவசியம் வரவில்லை.

இந்த மனிதர் வெறும் சம்பளத்திற்காக இங்கே வேலைக்கு வரவில்லை. அதற்கு மேல் ஊனமுற்றோர் ஒதுக்கப்பட்டவர் அல்லர், இவ்வுலகை உயர்த்துவதில் அவர்களுக்கும் பங்கு உண்டு என்ற உன்னத நோக்கத்தைப் புரிந்தே வந்திருந்தார். அதுமட்டுமல்ல ஊனமுற்றோருக்கு தன்னம்பிக்கையை ஊட்டி, தன் காலில் நிற்க வழி வகுத்துக் கொடுப்பதில் ஆர்வம் காட்டினார். சுகந்தம் சற்று கலகலப்பான பெண். சீக்கிரமாக சுந்தரைப் புரிந்து கொண்டாள். இவர் நம்பத்தக்கவர் என்றும், எல்லா சூழலிலும் உணர்ச்சிவசப்படாமல் நிதானமாய் செயல் ஆற்றுபவர் எனவும் விளங்கிக்கொணடாள். சுந்தர் தன் மேற்ப்பார்வையினை முடித்து விட்டு ஆரல்வாய் மொழிக்குப் போய்விட்டார். வரும்போது ஒரு வாலிபராக வந்தவர் போகும்போது. 'கர்த்தர் தனக்கும் ஒரு குடும்பத்தைத்தர வல்லவராக இருக்கின்றார் என்ற விசுவாசத்துடன் சென்றார்'.

சுகந்தம் கஷ்டப்பட்டு நடக்கும்போது இந்தப் பெண் ஊன்றுகோல் (crutch) வைத்து நடந்தால் நல்லது. சொல்லிப் பார்க்கலாம் என்றபடி சென்றார். செல்லும் வழியில் உயர்ந்த மலைகள், அங்கிருந்து வீசும் காற்று அதில் கலந்திருந்த உல்லாசம், பச்சைப்பசேல் என்ற வயல்கள், கரும்பும், காய்த்துக்குலுங்கும் தென்னை மரங்களும் கண்களுக்கு மட்டுமல்ல மனதுக்கும் இதத்தை தந்தன. சுந்தரின் மனதில் இனி தலை சீவும்போது கண்ணாடியில் வயது குறித்து கவலைப்பட வேண்டாம். நமக்கென ஒரு துணை கிடைத்துவிட்டதே! என்ற பரவசம் இல்லாமல் இல்லை. 'டேய் சுந்தர்! பரவசத்தில் மிதந்தது போதும்! அந்தப்பெண் வாய் திறந்து சொன்னாளா? அதற்குள் கற்பனை குதிரையை தட்டாதே!' என்று உள்ளுணர்வு கேலி செய்தாலும், இதுவரை ஏற்படாத ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. அதுமட்டுமல்ல

கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஒரு தெய்வீக சமாதானம் உள்ளத்தை நிரப்பியது.

தொலைபேசி இருந்தால், ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி போனை அடிக்கலாம். சரி! தபால் துறைக்கும் வேலை வேண்டுமல்லவா?

சுகந்தம் அன்று வி.டி.சி.யிலிருந்து வந்த தபால்களை பிரித்துப் படித்தபின் டைப் அடிக்க சில கடிதங்களை பிரித்து வைத்தாள். பொடி எழுத்தில் 'சுகந்தம்' என்று பெயரிட்டு வந்த நீளமான நீல நிறக்கவரைப் பார்த்ததும் வியப்பு அவள் விழிகளில் தொக்கி நின்றது. அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தால் 'சுந்தர் எக்பர்ட்' என்ற பெயரிடப்பட்ட அனுப்புநர் பகுதியைக் கண்டு சுகந்தம் கண்களில் மத்தாப்பு தெரித்தது. இருந்தாலும் அலுவலகத் தபாலாக இருக்க வாய்ப்புண்டு என்ற பொய்க்காரணம் கண்சிமிட்டியது. இவைகளை மீறி பரபரவெனப் பிரித்த கடிதத்தை மடமடவென வாசிக்க ஆரம்பித்தாள் சுகந்தம்.

அசல் நகல்!

அன்புள்ள சுகந்தம்!

இக்கடிதம் எழுதுமுன் உனக்குக் கடிதம் எழுதலாமா? கூடாதா? இதுதான் என் குழப்பம். தயவு செய்து கோபப்படாதே! உன்மீது எனக்கு அன்பிருப்பதால் இதை எழுதுகிறேன், தொடர்ந்து படி.

கிறிஸ்தவர்கள் என்பதால் நாம் அநேக காரியங்களில் ஜாக்கிரதை உள்ளவர்களாக இருப்பது அவசியம். சந்தோஷம், துக்கம், இப்படி பல காரியங்களை மற்றவரோடு பகிர்ந்து கொள்கின்றோம். நாம் நமது இயலாமை, ஊனங்கள் குறித்து ஜாக்கிரதையாக இருப்பதை விட்டுக் கவலையற்றவராக இருக்கின்றோம். நம் இயலாமை குறித்து எனக்குத் தெரியாது என நினைக்காதே! எனக்குத் தெரியும். ஒருகாலத்தில் இவைகளைக் குறித்துப் பேச மாட்டேன். இப்போது பேசுகிறேன்.

உன்னைச் சந்தித்தப்பின் நீ நடக்கக் கஷ்டப்படுவதைப் பார்த்து மனம் வருந்தினேன். நீ கிரச்சஸ் வைத்து நடந்து பார் உன்னால் சுலபமாக இயங்க முடியும். உன்னை பார்த்தபோது கர்த்தர் உனக்கு செய்த நன்மைகளை நான் நினைக்கிறேன். உன்னால் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல முடியும். என்னால் இயலாது. இடது கையில் தோள்பட்டையிலிருந்து பெலன் இல்லை. நான் போலியோவினால் பாதிக்கப்பட்டவன். நீ கிரச்சஸ் உபயோகித்தால் அனேகருக்கு உதவ முடியும். யாருக்குத் தெரியும். எனக்கே ஒருநாள் உதவக்கூடும்.

அன்பான;

சுந்தர்.

சுகந்தத்திற்கு அந்த கடிதம் சற்று குழப்பத்தைத் தந்தாலும் தனது இயலாமை மீது சுந்தருக்கு உள்ள கரிசனை, முடிந்த அளவு சுகந்தத்தை இயக்க முயற்சிக்கும் ஆர்வம் எல்லாம் பிடித்திருந்தது. இந்தக் கடிதத்திற்குப் பின் பல கடிதங்கள் வந்தன. சில கடிதங்களுக்கு சுகந்தம் பதிலும் போட்டாள். கொடிகள் வளர்ந்ததும் பற்றிப் படர கொழுகொம்பைத் தேடுவது இயற்கைதானே 'நாம் ஜெபிக்கலாம். ஒன்று நினைவிருக்கிறதா? தாலந்துகளைக் குறித்து நமது கர்த்தர் கூறிய கதை. தாலந்துகளைப் பெற்ற நாம் ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கக் கூடாது' எனவும்,

மற்றொரு கடிதத்தில்,

'இந்த கிரச்சஸ் உபயோகிப்பதால் உன் கால்கள் பலமடையும், சக்கர நாற்காலியில் அமருவதால் உன் கால்கள் பலமிழக்கும், நன்றாகச் சிந்தித்துப் பார்' என்று எழுதியிருந்தது.

பிரிதொரு கடிதத்தில்,

'உன் வாழ்த்துகள் சற்று தாமதமானாலும் வந்து கிடைத்ததற்கு நன்றி. உன் ஜெபத்திற்காக அன்பிற்காக நன்றி. எனக்கு 34 வயது நடக்கின்றது. சற்று வழுக்கை விழுந்த தலை

முடியும், ஆங்காங்கே முடி நரைக்கின்றது. என் வாழ்க்கையைச் சற்று திரும்பிப் பார்க்கும்போது, எதைக் குறித்தும் நான் வருத்தப்படவில்லை. ஒன்று மட்டும் நிச்சயம் கர்த்தரின் சித்தத்தை என் போன்றவர் மத்தியில் செய்யும்படியாக படைக்கப்பட்டிருக்கிறேன். என்னை சுற்றியுள்ள மனிதர்களையும், கடவுளையும் நான் நம்புகின்றேன். அதுமட்டுமல்ல, சுமார் ஒரு வருடத்திற்கு முன் உன்னைப்பற்றி கேள்விப்பட்ட போதே, கர்த்தர் நம்மீது கரிசனை காட்டி அதை உறுதிபடுத்தி, அவருடைய நாளில் அதைச் செய்வார் என்ற நிச்சயம் எனக்கிருக்கிறது.. எனக்காக ஜெபி.

உனக்கு ஒன்றை நினைப்பூட்டுகிறேன். உனக்காக நான் ஜெபித்துக் கொண்டே இருக்கிறேன்.

உன் அன்பான,
சுந்தர்.

சுகந்தத்தை மருத்துவப் பரிசோதனை செய்யும்படி, நாகர்கோவிலுள்ள காத்தரின்பூத் மருத்துவமனை சென்றபோது மோசஸ் தம்பதியருக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. சுகந்தம் போலியோவால் பாதிக்கப்படவில்லை என்றும் Muscular dystrophy எனப்படும் தசை சம்பந்தப்பட்ட நோய் எனவும், அது கொஞ்சம் கொஞ்சமாய் உடலில் உள்ள தசைப் பகுதிகளை பலவீனப்படுத்திவிடும் அபாயம் உண்டு என அறிந்தனர்.

சுந்தரை குறித்ததான சகலத்தையும், கடிதங்கள், பேசியது உள்பட எல்லாவற்றையும் பெற்றோரிடம் சொல்லும் பழக்கம் சுகந்தத்திற்கு இருந்ததால் மோசஸ் சுந்தரிடம் மருத்துவர்கள் கூறியதைத் தயக்கத்துடன் கூறினார். சுந்தர் மருத்துவப் பரிசோதனையின் முடிவால் அசைக்கப்படவில்லை.

அதுபோல சுகந்தத்திற்கும் சிகிச்சை அளித்த டாக்டர் சுந்தரிடம், எல்லா தகவல்களையும் கூறினார். சுந்தர், நோய்

குறித்த முடிவுகளை உடனே சுகந்தத்திடம் தெரிவிக்கவில்லை. அத்துடன் சுகந்தத்திற்குக் கடிதவாயிலாக,

அன்புள்ள சுகந்தம்,

உன் பெற்றோரிடம் நான் வரதட்சணை என எதுவும் எப்போதும் எதிர்பார்க்கவில்லை. மற்றபடி உனக்கு அன்புடன் எந்தப்பொருள் கொடுத்தாலும் சரி, ஆனால் இவை எதுவும் நம் திருமணத்திற்குத் தடையாக இராது சுந்தர்

என கடிதம் எழுதிப் போட்டுவிட்டார்.

சுந்தருக்கு சவால் நிறைந்த ஒரு வாய்ப்பு கிடைத்தது. டாக்டர்.ஹாரி வில்லியம்ஸ், நியூசிலாந்து தேசத்தின் சால்வேஷன் ஆர்மி.லெப்.கமிஷனராகப் பதவி ஏற்றார். சுந்தரை நியூசிலாந்திலுள்ள ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்களைப் பார்க்க அழைத்தார்.

மூன்று மாத காலம் இந்தச் சுற்றுப்பயணம் ஒழுங்கு செய்யப்பட்டது. சுந்தருக்கு இந்தப் பயணம் சவால் நிறைந்ததாக இருந்தது. முதலாவது சக்கர நாற்காலியில், தனியாக பிரயாணம் செய்ய வேண்டும். இரண்டாவது, காதர் போன்ற உதவியாளர் இருக்க மாட்டார்கள். மூன்றாவது, இது ஒரு உல்லாசப் பிரயாணம் அல்ல, மையங்களைக் கவனித்து இந்தியருக்குப் பொருந்தும் வேலைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். பல இடங்களில் இந்திய ஊனமுற்றோரைக் குறித்துப் பேச வேண்டும். இப்படி பல சவால்கள் இருந்தன. இதற்கிடையில், சுகந்தத்தைப் பிரிவது சற்று கடினமாக இருந்தது. பின் ‘அட! இங்கிருந்தாலும் கடிதம் எழுதப்போகிறோம், அங்கே சென்றாலும் கடிதம் எழுதப்போகின்றோம். ஆழமாக நேசிப்பவர்களுக்குப் பிரிவு அன்பை கூட்டுமே ஒழிய குறைக்காது எனத்தீர்மானித்துப் புறப்பட ஆயத்தமானார்.

9

ஆஸ்திரேலியாவில் சுந்தர் எக்பர்ட் அவர்கள் கங்காருடன்

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து பயணம்

1973-ம் ஆண்டு! மென்மையான, இனிய குரல் கேட்டு மெதுவாகக் கண்விழித்தார் சுந்தர் எக்பர்ட். ஆரல்வாய்மொழியில், 'காதரா இவ்வளவு அழகான ஆங்கிலம் பேசுகிறான்?' என்று வியந்த சுந்தர் திரும்பிப் பார்த்தால் வெண்மேகக்கூட்டங்கள் பஞ்சுப் பொதி போல் நிறைந்து கிடந்தது. என்ன? பரலோகம் வந்து சேர்ந்து விட்டோமா? என்ற திகைப்பு ஏற்பட்டது. ஆனால் அழகிய தேவதை போன்ற ஒரு பெண், 'உங்களுக்கு என்ன வேண்டும்? காபி, ஜூஸ், டீ அல்லது வேறு ஏதாவது வேண்டுமா?' என்று கேட்டபின்தான் சுந்தர் இந்த உலகிற்கு வந்தார்.

'ஓஹோ! நேற்று இரவு தான் சென்னையில் விமானம் ஏறினேன். கோலாலம்பூர் சென்று கொண்டு இருக்கிறேன் என்ற உணர்வு வந்ததும் 'காபி, வேண்டும்' என்று கேட்டு சூடான காபி அருந்தினார்.

கர்த்தரின் வழிநடத்துதலைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கின்றது. யாரும் அறியாமல் நாட்டின் ஒரு கோடியில் மூலையில் முடங்கிக் கிடந்த சுந்தருக்கு ஆஸ்திரேலியா, நியூசிலாந்தைச் சுற்றிப் பார்த்து மறுவாழ்வு மையங்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. ஒன்பது வாரப் பயணத்திட்டத்தில் இப்போ பறந்து கொண்டிருக்கின்றார். கழுகு தன் குஞ்சைச் சுமப்பது போலக் கர்த்தர் சுந்தரை சுமந்து கொண்டு பல நாடுகளுக்குப் பறக்கத் திட்டமிட்டார்.

சென்னை நேரத்திற்கும், சிங்கப்பூர் நேரத்திற்கும் 2.30 மணி நேரம் வித்தியாசம். திடீரென விளக்குகள் விழாக்கோலம் பூண்டிருந்தன. அருகில் இருப்பவரைக் கேட்டபோது அது சிங்கப்பூர் என்றார். குட்டிக் குட்டித் தீவுகள் பச்சையாகக் தெரிந்தன. சுந்தர் சென்ற ஏர் இந்தியா போயிங் 707 6.15க்கு சிங்கப்பூர் விமான நிலையத்தில் இறங்கியது.

1973-ம் ஆண்டு பிப்ரவரி 26-ம் நாள் சுந்தரின் பயணம் மேற்கூறியபடி தொடங்கியது. 9 வாரத்திற்கு திட்டங்கள்

கொடுத்து விட்டனர். இரட்சண்ய சேனை நிர்வாகக்குழுவினர் தெளிவாகத் திட்டமிட்டிருந்தனர். 45 நிமிட இடைவெளியில் விமானம் திரும்பப் பறந்தது. பெர்த் விமான நிலையத்தை நடுநிசியில் அடைந்தது. அதைத்தொடர்ந்து ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி விமான நிலையத்தை அடையும் போது மணி 10.30 அங்கிருந்து 2½ மணி நேரப் பிரயாணத்திற்கு பின் வெலிங்டன் விமான நிலையம் வந்தது.

வெலிங்டனில் பிரிகேடியர் சாம்சன் இரட்சண்ய சேனை மக்கள் தொடர்பு அதிகாரியுடன் வந்திருந்தார். சுந்தரை பீப்பிள் பேலஸ் ஹோட்டலில் தங்க வைத்தபின் சென்றனர். இந்தப் பயணம் ஆக்லாந்து, ரோட்டா ரூவா, பால்மாஸ்டன், கிரைஸ்ட் சர்ச் ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி எனத் திட்டமிட்டிருந்தனர். இப்பயணத்தில் நியூசிலாந்து தேசத்தில் உள்ள சுகாதாரத்துறையுடன் இணைந்து CORSD, கிரிப்பிள்ட் சில்ரன் சொஸைட்டி, Intellectual Handicapped Children Society மற்றும் தினசரிகள், வானொலி, தொலைக்காட்சி பேட்டிகள், கலந்துரையாடல் என பல நிகழ்ச்சிகளும் இப்பயணத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்தன.

மருத்துவமனைகள்

மருத்துவமனைகளுடன் இணைந்து சில பணிமனைகள் (Workshop) இருந்தன. அவர்கள் விபத்துக்குள்ளாகி ஊனமுற்றவராகக் காணப்பட்டனர். ஆக்லாந்தில் உள்ள ஓட்டரா ஆஸ்பத்திரியிலும், ரோட்டாரூவாவில் உள்ள குயின் எலிசபெத் ஆஸ்பத்திரியிலும் மறுபயிற்சியும் வேலைகளுக்குத் தேவையான பயிற்சி கொடுக்க எல்லா வசதிகளும் காணப்பட்டன. ஒரே ஒரு தனியார் மருத்துவமனையான Christ Church மருத்துவமனையில் முதுகுத்தண்டில் பாதிப்பு உள்ளவர்களுக்குத் தங்கும் வசதியோடு வேலைகொடுத்துப் பயன்படுத்தினர்.

ஆக்லாந்து மருத்துவமனை முழுக்க முழுக்க அரசு உதவித்தொகையால் பராமரிக்கப்படுகின்றது. பேச்சுத்திறன் பயிற்சி, மனவளப்பயிற்சி, பிஸியோதெரபி கால் கைகளுக்கான ஜிம்னாஸ்டிக் ஆகிய மருத்துவப் பயிற்சிகள் நோயாளிக்குக் கொடுத்து வருகின்றனர். இவைகள் தவிர ஊனமுற்ற மக்கள் கைகளால் செய்யக்கூடிய மரம் அறுக்கும் வேலை, தடித்த போர்வைகள் நெய்தல், செடி நடுதல் போன்ற வேலைகள் செய்யப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

உணவருந்தும் மேசை, தேனீர் எடுத்துச் செல்லும் சிறுவண்டிகள், புத்தக அலமாரிகள் செய்யப் பழகுகின்றனர். இத்திட்டத்தின் மூலம் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி, மருந்து, அவசர உதவிகளுக்கு ஆக்ஸிஜன் போன்றவை கொடுக்கப்படுகின்றன. சுந்தர் பார்வையிட்ட இடங்களைக் குறித்த விபரங்கள் அக்குவேறு ஆணிவேராகக் குறிப்பெடுத்து வந்திருக்கும் தெளிவைப் பார்த்து வியக்காமல் இருக்க முடியாது.

இதே ஆக்லாந்தில் ஒரு தொழிலதிபர் சக்கர நாற்காலிகள் செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவினார். ஆனால் சக்கர நாற்காலி செல்லும்படியாக வாசலில் சரிவாக நாற்காலியினை உருட்டியபடி ஏறமுடியாமல், படிக்கட்டு வைத்து விட்டார். அரசாங்கமும் அதைக் கண்டு கொள்ளவில்லை. ஊனமுற்றோருக்கான பணிமனைகள் கட்டும்போது இப்படிப்பட்ட காரியங்களைக் கவனிப்பது அவசியமாய் இருக்கின்றது.

ஊனமுற்றோருக்கான பணிமனைகள்:

இந்தப் பணிமனைகள் குறித்து ஏற்கனவே சுந்தர் ஒரு ஆராய்ச்சி கட்டுரை வெளியிட்டதை, முந்தைய பக்கங்களில் பார்த்தோம். சிறியரகத் தொழிற்சாலைகள் நடக்க இயலாதவர்களால் நடத்தப்படுகின்றன. அவர்கள் புத்திசாலிகளாக இருக்கின்றனர். இவர்கள் காயங்களுக்குக் கட்டுப்போடும் காஸ்துணிகளை நெய்கின்றனர். அத்தோடு

இணைந்திருக்கும் சிறிய தொழிற்சாலைகளில், பெரிய தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் உதிரிபாகங்களையும் எடுத்துச் செய்வார்கள். சுந்தர் அவ்விடங்களைப் பார்வையிட்டபோது ஹூவர் ஸ்டீம் மின்சார அயர்ன் என்று சொல்லப்படும் கருவியும். புல்வெளிகளை வெட்டி சீர்படுத்தும் லான்மூவர் என்ற சிறியரகக் கருவிகளையும் செய்து கொண்டு இருந்தனர்.

இவர்களுக்குத் தேவையான மற்ற கருவிகளை ஹூவர் நிறுவனம் கொடுத்து உதவுகின்றது. சாதாரண மக்கள் பணிபுரியும் பணிமனைகளுக்கு இங்குள்ள ஊனமுற்றோர் திறமை பயன்பட்டது. புத்திசாலித்தனம், ஊனத்தை மறக்கச் செய்கின்றது. மனுஷ்யபுத்திரன் என்று அழைக்கப்படும் ஒரு தமிழ்க் கவிஞர் இன்றைய காலகட்டத்தில் வாழ்ந்து வருகின்றார். ஆழமான கருத்துகள் கவிதை நடை, நம்மனக்குதிரையைச் சுண்டி இழுக்க வைக்கும், அவரது கருத்துகள் வானத்தில் வட்டமிடும் கழுகுபோல நம்மை உயரத்தில் இருத்தி ரசிக்க வைக்கும். அவர் எப்படிப்பட்டவர் என்றால் இரு கால்களாலும் நடக்க இயலாத சக்கர நாற்காலியில் நகரும் ஒரு சகோதரன். அவரது கற்பனை வளம் ஊனத்தை மறக்கடிக்க வைக்கிறது. அதுபோலவே, ஆக்லாந்து ஊனமுற்ற பிள்ளைகளின் செயல்திறன் இருப்பது கண்டு சுந்தர் ஆச்சரியப்பட்டார். வாய்ப்பும், திறமைகளும் ஒன்றை ஒன்று விரட்டிப் பிடிக்கும் சகோதரிகள் போல இருக்கும் இவை இணைந்து விட்டால் வெற்றி அவர்களின் பக்கம்தான் 'Christ Chruch' என்ற இடத்தில் சக்கர நாற்காலிகளை ஊனமுற்றவர்கள்தான் செய்கின்றனர்.

தங்குமிடங்கள்:

புக்கோரா என்ற இடத்தில் உள்ள ஊனமுற்றோருக்கான வீடுகள் வித்தியாசமாகக் கட்டப்பட்டுள்ளன. மனதளவில் பாதிக்கப்பட்டவர்கள்

அநேகம் பேரை இங்கு காணமுடிந்தது. அரசு பொறுப்பில் இயங்கும் இந்த விடுதிகளில் கல்வியைக் கற்றுக்கொடுக்கவும், இசைப் பயிற்சிகள் கொடுக்கவும், பேச்சு பயிற்சி கொடுக்கவும் சில உதவியாளர்கள் விடுதிகளுக்கு வந்து செல்கின்றனர்.

கண்பார்வையற்றவர்களுக்கான வேலைகள்:

விபத்தில் பார்வை இழந்தவர்களுக்கு ராயல் நியுசிலாந்து சங்கம் தொழிற்சாலைகள், கல்லூரிகள் வைத்து நடத்துகின்றனர். நவீனத் தொழில்நுட்பங்களை அவ்வப்போது கற்றுக் கொடுத்து நடைமுறைக்கு ஏற்ற அளவில் தகுதிபடுத்துகின்றனர்.

இரட்சண்ய சேனை:

மேலே குறிப்பிட்ட சமூக சேவைப் பிரிவு ஆக்லாந்து ஆராவட்டா, கிறைஸ்ட் கல்லூரி, டியூனிடினில் (Dunidin) உள்ளன. இருபாலருக்கும் மருத்துவமனைகள் உண்டு. போதை மருந்துகளால் ஊனமுற்ற மக்களை சுந்தர் சந்தித்தார். வாலிப மக்கள் அதிக அளவில் இருந்தது வருத்தத்தைத் தந்தது. இரட்சண்ய சேனை இயக்கம் சிறப்பான சேவையினை இம்மக்கள் மத்தியில் செய்து வருகின்றனர்.

ஆஸ்திரேலியா:

ஆஸ்திரேலியா கண்டத்தில் 27 நாட்கள் தங்கி இருக்க வாய்ப்பு கிடைத்தது. ஆஸ்திரேலியாவில் ஊனமுற்ற மக்களுக்குத் தரமான வசதி, வாய்ப்புகள் கிடைப்பதை சிட்னி நகரில் காணமுடிந்தது.

சுந்தர் நேரில் பார்வையிட்டபோது உணரமுடிந்தது. நியூசிலாந்திலும் ஊனமுற்றோர்களுக்கான உதவிகள் உடனுக்குடன் கிடைத்தன. ஆனால் ஆஸ்திரேலியாவில் ஒவ்வொரு மருத்துவமனையிலும் ஊனமுற்றோருக்கான பிரிவு தனிப்பட்ட முறையில் செயல்பட்டன. அரசு சார்பில் சில திட்டங்கள் வில்காமலைப் பகுதியில் நவீன வசதியுடன் செயல்பட்டன. அங்கெல்லாம் தன்னார்வத் தொண்டு

நிறுவனங்கள் ஊனமுற்றோருக்கான உதவிகளைச் செய்ய முன்வருகின்றன. ஷெல்டர்ட் தொழிற்சாலைகளில் ஊனமுற்றோர் போதுமான அளவு வேலை செய்ய முன்வருவதில்லை. ஏனெனில். ஊனமுற்றோரை மேற்பார்வை செய்யும் அதிகாரிகள் அவர்களை சரியான முறையில் நடத்துவதில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் பலவீனங்களை அசட்டை செய்து அவர்களிடமிருந்து அதிக அளவு உற்பத்திப் பொருட்களை எதிர்பார்க்கின்றனர். வேறு வகுப்பு மக்கள் இடைப்பட்டு அவர்களுக்கு முன்வருகின்றனர்.

மேலும் சக்கர நாற்காலிகள் பணிமனைகளில் வழங்கப்படாததினால் வேலை செய்யும் இடங்களுக்கு தங்கள் நாற்காலிகளைக் கொண்டு செல்வதில் சிரமம் ஏற்படுகின்றது.

மொபிலிட்டி பணிமனைகள்: (Mobility workshop)

இப்பிரிவில் பல பணிமனைகள் செயல்பட்டாலும், வெளியிலிருந்து, சிலர் முன்வந்து உதவி செய்கின்றனர். நிர்வாகத்தை தலைமை அலுவலகம் பார்த்துக் கொள்கிறது. இவர்களின் முக்கிய வேலை பாட்டரி டெர்மினல்களை அமைப்பது.

சென்ட்ரல் இண்டஸ்ட்ரி பணிமனைகள்:

இவைகள் ஸ்பாஸ்டிக் சொசைட்டியால் இயங்கப்படுகிறது. இங்கு பணிபுரியும் ஊனமுற்றவர்களையும், தகவல் தொடர்பு சாதனங்களையும் மனவளர்ச்சி குன்றியவரை வைத்து செய்வது வியக்க வைக்கின்றது. இவர்கள் நல்ல வருமானம் ஈட்டுகின்றனர். சுமார் 6 மில்லியன் டாலர் வருட வருமானம் என கணக்கிடப்படுகின்றன. இவ்வகை பணிமனைகளில் நவீனக் கருவிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. மேலும் இங்கு உற்பத்தியாகும் பொருட்களை விற்கப் பல கடைகள் இப்பணிமனையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

சுந்தரின் பயணதிட்டத்தை ஒட்டுமொத்தமாகப் பார்த்த போது இந்தியாவில் உள்ளது போல தொழு நோயாளிகளுக்கென தனிப்பிரிவுகள் செயல்படவில்லை. இவை தவிர நியூசிலாந்து. ஆஸ்திரேலிய மக்களுக்கும் இந்திய மக்களின் தேவைகளுக்கும் இடையில் சில வேறுபாடுகளைக் காணமுடிந்தது. பொதுவான பிரச்சனை பணப்பிரச்சனை. தேவைகளுக்கு ஏற்றாற்போல பிரச்சனைகள் வேறுபடுகின்றன. அரசு பொறுப்பெடுத்து உதவினால் மாற்றம் ஏற்பட வழியுண்டு.

சுந்தர் மேற்கொண்ட பயணத்தில் நியூசிலாந்தில் 19 கூட்டங்களிலும், சிட்னியில் 9 கூட்டங்களிலும் ஊனமுற்றோர் நிலை குறித்துப் பேசினார். இத்தனை சுற்றுப்பயணத்திலும் அவர் சுகந்தத்தை மறக்கவில்லை. ஒவ்வொரு இடம் செல்லும் போதும் தன் உணர்வுகள், கணிப்புகள், மதிப்பீடுகளை சுகந்தத்திடம் அவ்வப்போது பகிர்ந்து கொண்டுள்ளார். இவை தவிர அவரது தனிப்பட்ட டயரியைக் காணும்போது ஒவ்வொரு நாளும் சந்தித்த மனிதர்கள், சென்ற இடங்கள், பேசிய காரியங்களை எழுதி வைத்துள்ளார்.

சுந்தரின் சுற்றுப்பயணத்திட்டத்தைக் கவனித்துப் பார்த்தால், ஓய்வின்றி மக்களைச் சந்திப்பில், கூட்டங்களில் பேசுவதில், டயரி எழுதுவது என உழைத்ததைப் பார்க்கும்போது அவரது பலவீனத்தை மேற்கொண்டு, தன் பயண நோக்கத்தை முற்றிலும் புரிந்து ஒரு அர்ப்பணிப்புடன் செயல்பட்டதைக் காணமுடிகிறது.

10

காத்தரின்பூத் மருத்துவமனை
சிற்றாலயத்தில் திருமணம்

கல்யாணமாம் கல்யாணம்!

நாகர்கோவிலில் பெண்கள் மறுவாழ்வு மையத்தில் உண்மையும், உத்தமமுமாய் வேலை செய்த சுகந்தத்திற்கு கர்த்தர் ஒரு வசந்தத்தை அனுமதித்தார். சுகந்தம் இயற்கையாகவே, ஒற்வொரு சிறு காரியத்திற்கும் கடவுள் சித்தம் அறியத் தீவிரப்படுவாள். இப்போது சுகந்தத்திற்கு இருபத்தி ஆறு வயது. ஒல்லியாக, மென்மையாக, அழகான பெண்மணியாகக் காணப்பட்டாள்.

ஒருநாள் சுந்தரிடமிருந்து வந்த கடிதத்தில், நேரடியாக நான் உன்னை மணக்க விரும்புகிறேன். உன்னைப் பராமரிக்கவும் நினைக்கிறேன். உன் விருப்பத்தைத் தெரிவி என எழுதியிருந்தார் இப்படிப்பட்ட சூழலில் பரஸ்பர சம்மதம் ஓரளவு புரிந்த நிலையிலும் சுகந்தம் இன்னும் எதையோ எதிர்பார்த்து காத்திருந்தாள். கர்த்தர் அதை உறுதிபடுத்தும் வண்ணம் உலக அளவில் வெற்றியுடன் வாழ்ந்த ஊனமுற்ற மனிதர்கள் (Successful Disabled Persons International) என்ற ஒரு சிறு நூல் கையில் கிடைக்கும்படி செய்தார் அதில் பல மனிதர்களின் வாழ்க்கைக் குறிப்பு சவாலாக அமைந்திருந்தன. அதிலும் குறிப்பாக தியாபலஸ் மோனிஸ் என்ற பத்திரிக்கை நிருபரின் வாழ்க்கை சுகந்தத்தின் கண்களைத் திறந்தது. அவர் ஒரு இந்தியர், மும்பையில் வசிப்பவர். அவர் 2½ வயது குழந்தையாக இருந்தபோது போலியோ வியாதியால் பாதிக்கப்பட்டவர்.

இரண்டு சூம்பிய கால்களை ஊஞ்சல்போல ஆட்டியபடி ஊன்றுகோலின் உதவியால் செல்வார். மும்பையில் மின்சார இரயிலில் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். மனிதர்கள் அவரைப் பாரத்து பரிதாபப்படுவதை அறவே வெறுத்தார். எந்தக்காரியத்தையும், மற்றவரைக்காட்டிலும், சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை உடையவராக இருந்தார். அவரது ஆரம்பகாலப்பணி ஒரு பத்திரிக்கை அலுவலகத்தில் செய்தி சேகரிக்கும் குமாஸ்தாவாகப் பணியாற்றினார். அந்தப் பத்திரிக்கையின் பெயர் இந்தியச் சுரங்கங்களும், தொழில்நுட்பங்களும் என்பதாகும்.

அதே பத்திரிக்கையில் வெகு சீக்கிரத்தில் மானேஜர் பதவி அவரைத் தேடி வந்தது. அவர் எழுத்து வல்லமையாகச் செயல்பட்டதுமின்றி, ஒரு அர்ப்பணிப்பு அவரது வேலையில் காணப்பட்டது. பின் சரியாக மூன்றே மாதங்கள், அதே அலுவலகத்தில் அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றார். பின் அந்தப் பத்திரிக்கையின் தலைமைப் பத்திரிக்கையாளராகப் பதவி உயர்வு பெற்றார். இத்தனைக்கும் இதழியலில் பட்டம் பெறாதவர். மேலே வருவதற்கு முழுமையான அர்ப்பணிப்பு அவசியம் என அந்த நூலில் குறிப்பிட்டார்.

இது தவிர அறிவுக்களஞ்சியம் போன்ற நூல்களை மறுபரிசீலனை செய்யும் பொறுப்பு கிடைத்தபோது அதையும் நேர்த்தியாகச் செய்தார். பல நூல்களை எழுதினார். அதற்கான ஊக்கத் தொகையினைக் கேட்டுப் பெறவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகள் சென்று ஊனமுற்றோர் சிறப்பான வாழ்க்கை வாழ்வது எப்படி? என்று பல சொற்பொழிவுகளை ஆற்ற விரும்பினார்.

விஞ்ஞானம் படிக்கச் சென்ற தியோ, மத நம்பிக்கை உடையவனாகப் பல வருடம் பணிபுரிந்தார். அரசியலிலும் பங்கேற்றார். இவையெல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல, ஒரு ஊனமுற்ற பெண்ணை விரும்பித் திருமணம் செய்தார். அவள் பெயர் ஷெல். ஒரு பணிமனையில் சந்தித்தார். அவர்கள் வீட்டில் எந்த வேலையாளும் இல்லை. வீட்டைக் கண்ணாடி போல் பளிச்சென்று வைத்துக்கொள்கின்றாள் ஷெல். இவர்களுக்கு ஒரு பெண்ணும் ஒரு பையனும் உண்டு. அவர்கள் எந்த ஊனமுமில்லாமல் பிறந்து, வளர்ந்து வருகின்றனர்.

இந்த தியோ ஷெல் தம்பதியினரின் வாழ்க்கை சுகந்தத்தை உற்சாகப்படுத்தியது. ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து மக்கள் மத்தியில் இந்த ஊனமுற்ற மக்களைப்பற்றிக்கூறிய செய்திகளின் விளைவால் இந்திய மக்களின் வி.டி.சிக்கு கணிசமான தொகை நன்கொடையாகக் கிடைத்தது. நியூஸிலாந்து தொழுநோயாளர் ஐக்கியம் சில

நவீன எந்திரங்கள் வாங்கவும் ஒரு தொழில்கூடம் கட்டவும் பண உதவி செய்தனர். சுந்தர் எக்பர்ட் சுற்றுப் பயணம் முடிந்து இந்தியா திரும்பினார்.

இந்தியா மணம் மிகுந்த மலர்களால் நிரம்பியிருப்பது போல சுந்தர் உணர்ந்தார். புதிய வாழ்க்கைக்குத் தன்னை ஆயத்தப்படுத்தலானார்.

1973ம் வருடம் மே மாதம் இருபத்திமூன்றாம் நாள் மாலை நான்கு மணி அளவில் நாகர்கோவில் காத்தரின்பூத் மருத்துவமனையின் சிற்றாலயம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. வெள்ளையர்களும், இந்தியர்களும் விழாக்காலத்தில் அணியும் விசேஷ உடையில், மகிழ்ச்சி பொங்க அலைந்து திரிந்தனர். மெதுவாகப் பேசி சிரித்தனர். யாரையோ எதிர்பார்த்துக் காத்துக்கிடந்தனர்.

ஆலயமணி கம்பீரமாக அடித்தது. ஆலய வாசலினுள் அலங்கரிக்கப்பட்ட ஒரு கார் வந்தது. சக்கர நாற்காலி அருகில் வந்ததும் நீலநிற சூட்டில் வந்த சுந்தரின் முகம் மலர்ந்திருந்தது. தலைமுடியைப் படிப்படியாகச் சீவி, நேர்கொண்ட பார்வையுடன் சக்கர நாற்காலியில் அமர்ந்து, ஆலயத்தின் பக்கவாசல் வழியாக உள்ளே செல்லும் போது சுற்றியிருப்பவர்களைப் பார்த்து புன்னகை செய்தார். உள்ளே நுழைந்து பீடத்தருகில் சென்று தன்னை இப்படியாக மணக்கோலத்தில் நிறுத்திய கர்த்தரை தலைவணங்கி தொழுது கொண்டார்.

கூட்டம் கோவிலை நிரப்பியது. ஆலயமுழுவதும் மலரின் மணம் பரவியது. மாப்பிள்ளைத் தோழன் மேஷாக்கிருபாகரன் வண்டிக்கருகில் நின்றார். போதகரின் குரல் கம்பீரமாக ஒலித்தது. சபையார் எழுந்து ஏதெனில் ஆதி மணம் முதல் பாடலைப் பாடலாம் என்றதும் திரும்பவும் கோவில்மணி விட்டு விட்டு அடித்தது.

வெண்மேகங்களுக்குப்பின் மறைந்திருந்த பூரணச் சந்திரன் போல சுகந்தமும் ஒரு சக்கர நாற்காலியில் அதே பக்கவாசல் வழியாக அமர்ந்தபடி வந்தார். பிரமிளா அம்மா (ஃபுல்லர்) வண்டியைத் தள்ளியபடி வந்தார். பெண் தோழி சுகந்தி ஜெயக்குமார் (கிருபாகரனின் அக்கா) சுகந்தம் வெண்பட்டு உடுத்தியிருந்தாள். அருகில் வண்டி வந்து நின்றதும் அவளது குவளை விழிகள் நிலம் நோக்கித் தாழ்ந்திருந்தது. இதழ்களோ, கர்த்தாவே! என் எதிர்காலத்தை உமது கரத்தில் ஒப்புவிக்கின்றேன். உமக்குப் பயந்த ஒருவரை எனக்குத் தந்ததற்கு நன்றி என்றபடி முணுமுணுத்தது.

சாதாரணமானவர்களே, திருமண வாழ்வில் திக்கு முக்காடும் போது, சுகந்தம் எம்மாத்திரம். கர்த்தர் தன்னோடு இருக்கின்றார் என்ற நிச்சயத்தோடு சுகந்தம் தன்னை சுந்தருக்கு அர்ப்பணித்தாள்.

ஜார்ஜ் ஸ்காட், Dr.ஹெர்பர்ட் ரேடர், வீரா வில்லியம்சன் ஆகியோருடன் திருமண தம்பதியர்

11

ஆரல்வாய்மொழி பயிற்சி மையத்திற்கு
முன்பாக திரு சுந்தர் எக்பர்ட்
மற்றும் திருமதி சுகந்தம் எக்பர்ட்.

காலச்சக்கரத்தில்
இரண்டு சக்கர நாற்காலிகள்

பொழுது மெல்லப் புலர்ந்தது. பெரிய படுக்கை அறை. ஆரல்வாய்மொழியில் பெரிய வீட்டை சுந்தர் எக்பர்ட் மற்றும் சுகந்தத்திற்கு ஒதுக்கியிருந்தனர். வீட்டின் முன்புறம் அழகிய சிறுதோட்டம் இருந்தது. காய்கறிகள் ஒருபுறம், மணம் வீசும் மலர்கள் மறுபுறமாக மலர்ந்து சிரித்தன. புதுமணத் தம்பதிகளின் புதுக்குடித்தனம் ஆரம்பமாயிற்று. சுகந்தத்திற்கு சுந்தர் இன்றும் ஐயா தான்.

சுந்தருக்கு சுகந்தம் இன்னும் 'அம்மா'தான் மரியாதை கலந்த அன்பிலும் யாரிடமும் பகிர்ந்து கொள்ள இயலாத தனிமை, இயலாமை, புறக்கணிப்புகள் போன்றவற்றைப் பகிர்ந்து கொண்டனர். அதிலும் குறிப்பாக சுந்தரின் பெற்றோர் அருகில் இல்லாத வேதனையை, வீட்டில் செல்லமாய் வளர்ந்த சுகந்தம் நன்றாகப் புரிந்து கொண்டு, சுந்தரிடம் கடந்த காலங்களைக் குறித்து எந்தக் கேள்வியும் கேளாமல், அருமையாகச் சமைத்து, அன்புடன் அருகில் அமர்ந்து தாங்கித்தாங்கிக் கவனித்தாள். சுந்தரும் சமையல் கூடத்திலும், படுக்கை அறையிலும், சமையல் மேடையினைத் தாழ்வாக அமைத்தார். மின்சார சுவிட்சுகளை இறக்கி வைத்தார். படுத்தபடி விளக்குகளை அணைக்கும் வசதிகளைச் செய்தார். மனைவியின் வசதிகளுக்கேற்ற பல மாற்றங்களைச் செய்தார்.

இருவரும் பாடல்களை விரும்பிக் கேட்டனர். அதிலும் 'ஜிம் ரீவ்ஸ்' அவர்களது அபிமானப் பாடகர். புதுப்புதுப் புத்தகங்களைச் சேகரிப்பதிலும், படிப்பதிலும் சுந்தர் எக்பர்ட் எக்ஸ்பர்ட்டாக இருந்தார். நல்ல நூல்களைப் படித்த பின் சுகந்தத்திற்குப் படிக்கும்படி சிபாரிசு செய்வார்.

அதிகாலையில் இருவரும் எழுந்து வேதம் வாசித்து ஜெபிப்பார்கள். இருவரும் தாழ்மையுடன் ஜெபிப்பது வழக்கம். அந்த நேரத்தை யாருக்கும் தரமாட்டார்கள். தங்களது விருப்பத்திற்கு ஏற்றார் போல நேரத்தை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். பின் இருவரும் தனித்தனியாக

வேதம் வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் நேரம் செலவிடுவர். அதன் பின் காலை உணவை சுகந்தம் ஆயத்தம் செய்ய இருவரும் அருந்துவர். எட்டுமணி அளவில் சுந்தர் தன் சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி அலுவலகம் செல்வார். சுந்தருக்கு பொருட்கள் அதன் அதன் இடத்தில் இருக்க வேண்டும். அவரது மேசையைப் பார்த்தபோது டிராயர்கள் வெவ்வேறு அளவுகளில் இருந்தது. முதல் டிராயரில் பழைய வாட்ச் ரிப்பேர் செய்யும் சாதனங்கள், வரிசைப்படி வைக்கப்பட்டிருந்தன (இன்னும் அப்படியே உள்ளது) சுந்தர் இறந்து 7 வருடங்கள் கடந்து விட்டன). அடுத்ததில் மற்ற உபகரணங்கள் அதற்கடுத்ததில் அலுவலகக் கோப்புகள், தனிப்பட்ட கோப்புகள், என ஒழுங்காக வைக்கப்பட்டிருப்பதை இப்போதும் பார்க்கமுடிகிறது.

குளியலறையில் கூட மேடைகள் நாற்காலி உயரத்திற்கு ஏற்ப மாற்றப்பட்டன. எந்த ஊர், அல்லது விடுதிக்குச் சென்றாலும், சுகந்தத்திற்கு அவை வசதியாக இருக்கின்றதா? என்று முதலில் மேற்பார்வை செய்தபின் தான் அதை சுகந்தம் பயன்படுத்த அனுமதிப்பார். அதே சமயம் மனித பலவீனங்கள் இல்லாமல் இல்லை. சுந்தர் அதிகம் பேச மாட்டார். சுகந்தம் பேசிக்கொண்டே இருக்கும் சுபாவம். சுந்தரிடம் ஒருமுறை சொன்னாலே அக்காரியம் நடந்து விடும். ஆகவே சுந்தர் அலுவலக வேலை செய்யும்போது யாரும் பேசுவதை அனுமதிக்க மாட்டார். சுகந்தம் அதைப் புரிந்து கொண்டு அமைதியாக இருந்து விடுவாள். சில நேரம் தனிமையில் பொழுதுபோகாமல், சொந்தபந்தம் எனக் கதை பேசிவிட்டால் சுந்தர் சிறிது நேரம் அமைதியோடு கேட்பார். சிலநேரம் பட்டென கோபப்பட்டு விடுவார். சுகந்தம் சோர்ந்து சிறிது நேரம் தனிமையில் இருந்த பின் திரும்ப சுந்தரிடம் வந்து ஐயா! நான் உங்களை மன்னித்து விட்டேன். இனி நாம் பேசலாம் என்றதும் சுந்தர் பலமாகச் சிரித்து விடுவார். பொதுவாகச் சுந்தருக்கு அடைமழை போல நச்சு நச்செென பேசுவது பிடிக்காது. சுகந்தம் நீ ஒருபோதும் நச்சரிக்கும் மனைவியாக (Nagging Wife) இராதே' கலகலப்பாக மலர்ந்த முகத்துடன் இரு! என்பார்.

காத்தரீன் பூத் மருத்துவமனையில் வெள்ளையர்கள் நேரந்தவறாமைக்குப் பேர் போனவர்கள். அங்கே நடக்கும் ஐக்கிய விருந்துகளுக்கு சுகந்தம் சரியான நேரத்திற்குப் புறப்பட்டு விடுவார். சுகந்தம் சுந்தரை எவ்வகையிலும் வருத்தப்பட நினைக்கமாட்டார்கள். வருத்தமான நேரங்களைத் திரும்ப நினைவுபடுத்தி பேசவும் நினைக்க மாட்டார்கள். சீக்கிரம் அதை மறந்து விடும் குணம் இருந்தது. இருவரும் சேர்ந்து காரில் திருச்சி, வேலூர் போன்ற இடங்களுக்குச் சென்று வருவார்கள். சுந்தரின் தம்பி செல்வராஜ் விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள நூல்தரக்கட்டுப்பாட்டு அதிகாரியாகப் பணிபுரிந்ததால், அவர்கள் வீட்டுக்கும் அடிக்கடி செல்வர். செல்வரும் அவரது மனைவி லலிதாவும் சுந்தர் மற்றும் சுகந்தத்தை அன்புடன் உபசரிப்பர். சுந்தரின் குடும்பத்தாரில் மிஞ்சியிருப்பது செல்வர் என்ற செல்வராஜ் மட்டுமே! இப்போது அவர் திருநெல்வேலியில் குடும்பமாக வசிக்கின்றார். நேரம் கிடைக்கும் போது சுகந்தத்தை (அண்ணியை) குடும்பமாக வந்து சந்திக்கின்றனர்.

சுகந்தத்தின் உடன்பிறப்புகளில் சந்திரலீலா தன் கணவர் தேவதாஸ் அவர்களோடு சேலத்தில் வசிக்கின்றார். சுகந்தத்திடம் தினந்தோறும் பேசி மகிழ்வார்கள். சுந்தர் இருக்கும்போது இவர்களது ஐக்கிய கூடுகை அடிக்கடி இருக்கும். இப்போதும் தங்கையைக் காண சந்திரா வயது சென்றாலும் ஓடோடி வருவார்கள். சுந்தரின் நல்ல பண்புகளை சகோ. தேவதாஸ் மற்றும் சந்திரா பெரிதும் பாராட்டுவார்கள். சந்திராவும் அவரது நல்ல பண்புகளைப் பாராட்டி ஒரு நல்ல கவிதை எழுதி வைத்தார்கள்.

சுந்தர் தன் மனைவிியை அடிக்கடி நண்பர்கள் வீட்டுக்கும், அழைத்துச் செல்வதுண்டு. இப்படியாக தம்பதிகள் சரீரத்தில் ஊனமுற்றாலும் மனஊனமின்றி மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். ஒருவருக்காக ஒருவர் படைக்கப்பட்டதை எண்ணி அன்புகூர்ந்து வாழ்ந்தனர்.

திருமணம் முடிந்த பதினான்காம் நாள் அலுவலகம் புறப்பட்டார் சுந்தர். அப்போது மதிய நேரம் மழை

சிலுசிலுவென தூறிக்கொண்டு இருந்தது. சாதாரணமாக சுந்தரை அழைத்துச் செல்ல ஒருவர் உதவிக்கு வருவது உண்டு. அதை அறிந்த சுகந்தம் கணவரிடம் யாராவது வந்தபின் செல்லுங்கள் என்று மெதுவாகக் கூறினார்கள். அவரது நேரந்தவராமையை அறிந்திருந்ததால் அப்படி கூறினார்கள். வாசலில் படிக்கட்டு இல்லாமல் ராம்ப் என்று கூறப்படும் சரிவு மட்டும் இருக்கும். அதில் வண்டியை எடுத்துப் புறப்பட்டதுதான் தாமதம், வண்டி சரிவில் வேகமாகச் சென்று அப்படியே குப்புற சாய்ந்தது.

கால்களில் பலமற்ற காரணத்தால், கால்களை ஊன்ற இயலாமல் சுந்தர் குப்புற விழுந்து விட்டார். சுகந்தமும் நடக்க இயலாதபடியால் துடித்து விட்டாரீர். வேகமாக நகர வழியில்லை, பிடித்துக்கொள்ள சுவரும் இல்லை. தன் அன்புக்குரியவர் சேற்றில் கிடந்ததைப் பார்த்து, அருகில் செல்ல நினைத்தபோது, சுந்தர் கண்டிப்பான குரலில் சுகந்தம்! அருகில் வராதே என்னை உன்னால் தூக்க முடியாது. நீ விழுந்து விட்டால் இன்னும் கஷ்டம் என்று கூறியதும் டக்கென கீழ்படிந்து நின்றுவிட்டார். ஆனால் உரத்த குரலில் சத்தமிட்டதும் சிலர் அதுகேட்டு ஓடி வந்து சுந்தரை தூக்கிவிட்டபோது ஒரு கால் எலும்பு மளுக்கென உடைந்து விட்டது தெரிந்தது. அப்பா... அந்த வலியை எப்படித்தான் சுந்தர் தாங்கிக்கொண்டாரோ தெரியவில்லை. சுகந்தம்! அழாதே! பரவாயில்லை சமாளித்து விடுவேன்.. என்றதும் அதே சுபாவம் அதே சகிப்புத்தன்மை மாறாமல் இருப்பது தெரிந்தது.

சுந்தரை அலாக்காகத் தூக்கி ஆம்புலன்ஸில் வைத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்று மாவு கட்டு போட்டு அழைத்து வந்தனர். ஆனால் சுந்தர் மூன்றாம் நாள் அலுவலகம் சென்று விட்டார். மனஉறுதியில் அசையாதவராகக் காணப்பட்டார்.

சுந்தருக்கு வீடு கனகச்சிதமாக சுத்தமாக இருக்க வேண்டும். ஆகவே சுகந்தம் உதவியாளரை வைத்து தினமும் சுத்தம் செய்து விடுவார். மாலை நேரங்களில் கட்டில் அருகே

உள்ள டப்பாக்களில் உள்ள சுகந்தம் செய்த பலகாரங்களை, ரசித்து உண்பது சுந்தர் விரும்பி மேற்கொள்ளும் வேலைகளில் ஒன்று. மனைவி செய்யும் சமையல் சுந்தருக்குப் பிடிக்கும்.

ஒரு நாள் மாலை ஆறுமணி அளவில் படுக்கையறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள் சுகந்தம். பக்கத்தில் இருக்கும் மரப்பெட்டியை நகர்த்திக் கூட்டச் சொன்னார். உதவியாளர் காதர் நகர்த்தியவுடன் நீளமான ஒரு பாம்பு சரசரவென படுக்கையறையில் அந்தப் பெட்டியின் அடியில் இருந்து வந்தது. நல்லவேளை! காதர் அதை அடித்துக் கொன்றார். சுந்தரும் சுகந்தமும் அதிக நேரம் தங்கியிருக்கும் இடம் படுக்கையறை. வாதை உன் கூடாரத்தை அணுகாது மகனே! பொல்லாப்பு நேரிடாது மகளே! என்ற அருட்தந்தை பெர்க்மான்ஸ் பாடல் நினைவுக்கு வந்தது. அது உண்மைதான். கர்த்தரின் வார்த்தை சொல்கிறபடி "உன்னைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லை" என்பது எவ்வளவு உண்மை.

சுந்தரால் ஒழுங்கற்ற காரியங்களைச் சகித்துக் கொள்ள முடியாது என்பதற்கு ஒரு சம்பவத்தைக் கூறலாம். தூத்துக்குடியில், இரு வாடிக்கையாளரைச் சந்திக்கும் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. அன்றைய பிரதான செய்தியாளர், சுந்தர். குறிப்பிட்ட நேரத்தில் ஒரு முக்கிய வாடிக்கையாளரின் தலைவர் வந்து விட்டார். மற்றவர் வரவில்லை. அவர் தலைமை தாங்க வேண்டிய பொறுப்பில் இருந்தார். நேரம் சென்று கொண்டே இருந்தது. சுந்தர் என்ன செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தார். வந்திருந்த அனைவரும் காத்துக்கொண்டிருந்தனர். டக்கெனக் கூட்டத்தைத் தொடங்கி, பிரதான செய்தியினைப் பேச ஆரம்பித்து விட்டார். ஒரு மணி நேரம் தாமதமாக வந்த தலைவர் கூட்டம் தொடங்கி நடந்து கொண்டிருப்பதைக் கண்டு திகைத்து விட்டார். சுந்தர் பேசி முடித்தபின், தலைவரை இறுதியாகப்பேச வைத்துக் கூட்டத்தைச் சரியான நேரத்தில் முடித்து விட்டார்.

பேய்க்குளம் என்ற ஊரில் பரிசுத்த லூக்கா தொழுநோயாளிகள் இல்லம் ஒன்று உண்டு. அதற்குப் பொறுப்புதாரியான டாக்டர் ஜி.எம்.ஜெயபாலன் ஒரு சம்பவத்தை நினைவு கூறுகிறார்.

'முழுமையான அர்ப்பணிப்புடன் காரியங்களைச் செய்வதில் சுந்தர் வல்லவர். அதுமட்டுமல்ல அதே தரத்துடன் மற்றவரிடமும் எதிர்பார்ப்பவர். அதுவும் ஊனமுற்றவர் களிடம் இன்னும் அதிகமாக எதிர்பார்ப்பார்.

ஒருமுறை தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த ஒருவரிடம் கொடுக்கப்பட்ட பணியை அவர் அரை குறையாகச் செய்து விட்டார். சுந்தரால் அவரை மன்னிக்கவே முடியவில்லை. 'அவரை மன்னிக்கக்கூடாதா? ஊனமுற்ற சகோதரன் தானே! கர்த்தர் நம்மை ஏழு எழுவது முறை மன்னிக்கச்சொல்லி கற்றுக் கொடுத்திருக்கின்றாரே! என தவறு செய்தவருக்கு சிபாரிசு செய்ய ஆரம்பித்தார் ஜெயபாலன்.

"ஊனமுற்றவர்கள் முதலில் எதில் ஊனப்பட்டு இருக்கின்றனர் என உணர வேண்டும். அரைகுறையாகக் காரியங்களைச் செய்த அந்தப் பணியாளருக்கு உடலில்தான் ஊனம், மனதில் இல்லையே!. அவரால் செய்ய முடிந்த காரியத்தைதானே கொடுத்தோம். ஊனம் உள்ளவர்களின் திறமைக்கு எதுவும் தடையாக இருக்க முடியாது என்பதை நிரூபிப்பதை விட்டு இவ்வளவு மோசமாக செய்வது எந்த வழியில் பார்த்தாலும் சரியில்லை! என்றார், அழுத்தமாக.

சுந்தர் மற்றவர்கள் எதிர்பார்ப்பதை விட அதிக சிறப்பாக வேலைகளைத் தன்னால் முடிந்த அளவுக்குச் செய்ததால் உலக அளவில் அவருக்குப் பட்டங்கள் தேடி வந்தன என்பதை ஏற்கெனவே அறிந்துள்ளோம். கர்த்தரின் வல்லமை ஒரு ஊனமுள்ள சகோதரரிடம் எப்படி வெளிப்பட்டது என்பதற்கு இன்னும் சில நிகழ்வுகள்.

1982ம் ஆண்டு இங்கிலாந்து தேசத்திலிருந்து வந்த தபால் சுந்தரை வியப்பில் ஆழ்த்தியது. ஒருவரின் வாழ்வு எந்த அளவுக்கு மற்றவருக்கு உதவுகின்றது. என்ற அடிப்படையில் உலக அளவில் வழங்கப்படும் 'ரேனே சாண்ட் விருது' காத்தரீன் பூத் மருத்துவமனையைச் சார்ந்த ஊனமுற்ற மறுவாழ்வு மைய மானேஜர் திரு. சுந்தர் எக்பர்ட்க்கு வழங்கப்படுவதாக தபாலில் வந்த செய்தி கூறிற்று. இந்த விருது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்படுகின்றது. உலகச் சுமூகநலத்துறை மூலம் வழங்கப்படும். சுந்தரை இங்கிலாந்து தேசம் அன்புடன் அழைத்தது. இச்செய்தி காத்தரீன் பூத் மருத்துவமனையில் மட்டுமில்லாது, நாகர்கோவிலில் அறிவிக்கப்பட்டு, பொது மக்களும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

ஜார்ஜ் ஸ்காட் துணையுடன் சுந்தர் மும்பை விமான நிலையத்தில், ஆகாய விமானம் ஏற ஒழுங்கு செய்யப்பட்டது. முதலில் அங்குள்ள பிரிட்டிஷ் ஹை கமிஷனரைச் சந்தித்து உத்தரவு பெற வேண்டும். காரிலிருந்து இறங்கி, சக்கர நாற்காலியை எடுத்தால், கை வைக்கும் பகுதி எங்கு கழன்று விழுந்தது என்று தெரியவில்லை. இருவருக்கும் 'பகீர்' என்றது. ஏனெனில் கைப்பகுதி முதுகுப்பகுதியுடன் நாற்காலியில் இணைந்திருப்பதால் நாற்காலியில் உட்கார முடியாது. ஒரு வினாடி பொழுதுக்குள் கர்த்தர் சில காரியங்களைச் சுந்தருக்கு நினைவூட்டினார். அதன்படி மடமடவென காரியங்களைச் செய்யத் தொடங்கினார்.

சில மாதங்களுக்கு முன் சுந்தர் மும்பையில் உள்ள நிறுவனத்துக்குப் பத்து சக்கர நாற்காலிகள் அனுப்பியது நினைவுக்கு வந்தது. அங்கே சென்று அவர்களின் சக்கர நாற்காலியில் உள்ள கைப்பகுதியை எடுக்கச் சொல்லி, பழுதுபட்ட அவரது நாற்காலியில் பொருத்தச் சொன்னார். அப்படிப் பொருத்தியதும் சரியாக பொருந்தியது.

பின்பு ஆரல்வாய்மொழி பணிமனைக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். நாற்காலி கைப்பிடியின் அளவுகளைக்கூறி, புதிய கைப்பிடிகள் இரண்டு

செய்யச்சொல்லி மும்பை நிறுவனத்துக்கு அனுப்ப உத்தரவிட்டார். அதே போல் பத்து நாட்களுக்குள் அவை போய்ச் சேர்ந்தன.

சில நேரம் பூனைகண்களை மூடி விட்டால், பூலோகமே இருண்டு விடும் என்ற பழமொழி நினைவுக்கு வருகின்றது. பிசாசானவன், சக்கர நாற்காலி கை தொலைந்து போனால், இங்கிலாந்து சென்று விருது வாங்காமல் நின்று விடும் என நினைத்திருப்பான். ஆனால் அவன் ஒன்றை மறந்து விட்டான். சாலமோனிலும், பெரியவர் சுந்தரைப் போன்றவரிடம் இருக்கின்றார். அவர் ஞானத்தின் ஊற்று. ஏற்ற காலத்தில் எதை எப்போது எப்படிச் செய்ய வேண்டும் என்று அவருக்குத் தெரியும். அவர் செய்வார்.

அதுமட்டுமல்லாது, ஒரு வினாடிப் பொழுதில், இடிந்து போய்விடாமல் யாரைத் தேட வேண்டும், எப்படிப் பிரச்சனைகளைக் கையாள வேண்டும் எனச் சுந்தருக்குத் தெரிந்திருப்பது அவரது நிர்வாகத் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

ரெய்னே சாண்ட் விருது

1982ம் ஆண்டு செப்டம்பர் 2 ம் தேதி பிரிட்டன் போய்ச் சேர்ந்தார். சுமார் 1300 பேர் பங்கு பெறும் அந்த விழாவில் 84 நாடுகளைச் சேர்ந்தவர்கள் வந்திருந்தனர். விருதுக்கென கொடுக்கப்பட்ட மெடலில் ஒரு இருதயத்தைக் கை சந்திப்பது போல இருந்தது. மனவிருப்பப்படி கைகள் வேலை செய்கின்றது என்ற பொருள்பட அதன் அடையாளம் பொறிக்கப்பட்டு இருந்தது.

அன்பு சுகந்தம்!

நேற்று ஜார்ஜின் சகோதரர் பீட்டர் வந்தார். இங்கிருந்து சில மைல்கள் தூரத்தில் இருக்கிறார். கிரேஸ், டாட், தொலைபேசியில் பேசினார்கள். எலிசபெத் வருவதாகக் கூறியிருக்கின்றார். நேற்று மாலை தேம்ஸ் நதியை பார்த்தேன்.

வெளியே அதிக குளிர் 70 டிகிரி பாரன்ஹீட். ஜார்ஜின் பெற்றோர் என் சரீரசுகம் குறித்துக் கவலைப்பட்டனர். அறையில் ஹீட்டர் உள்ளது. நான் இரண்டு ஸ்வெட்டர் அணிந்து சமாளிக்கின்றேன். எனக்காகக் கவலைப்படாதே ஜெபி.

அன்புடன் சுந்தர்.

இப்படி அங்குள்ள சீதோஷ்ண நிலை, நண்பர்கள், பார்த்த இடங்கள் என் அவ்வப்பொழுது தெளிவாக எழுதுவார். இப்படியாக சுந்தர் இங்கிலாந்து தேசம் சென்று உலகச்சிறப்பு வாய்ந்த ரேனே சாண்ட் விருது பெற்றதன் மூலம் இந்தியாவுக்குப் பெருமை, இந்தியாவில் வந்து பணிபுரிந்த இரட்சண்ய சேனை இயக்கத்திற்குப் பெருமை, நாகர்கோவில் மற்றும் ஆரல்வாய்மொழி வி.டி.சி தொழிற்கூடத்திற்குமாகப் பெருமை தேடித்தந்தார்.

இந்தப் பெருமை, புகழ் எல்லாம் தந்த இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை உண்டாகட்டும்.

12

ஏணிப்படிகள்

சுந்தர் தன் குறைவுகளுக்கு மத்தியிலும் தானே ஒரு ஏணியாக இருந்து அநேகரை உயர்த்தியுள்ளார். அவர்களில் சிலரது அனுபவங்கள்:

தேவராஜ்:

திரு. தேவராஜ்

1972 ஆம் ஆண்டு நாகர்கோவிலில் உள்ள பயிற்சி வளாகத்தில் செகரட்டரி வேலைக்கான இருபது வாலிபர்கள் பயிற்சிக்கென வந்திருந்தனர். ஒவ்வொருவரும் ஏதாவது ஒருவகையில் ஊனமுற்றவர்கள். அவர்கள் வெற்றிகரமாக பயிற்சியினை முடித்து விட்டனர். நிறைவு நாள் விழா கொண்டாடப்பட்டது. சுந்தர் அப்படிப் பட்டவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும்படி உதவி செய்தார். அதில் ஒரு வாலிபன் தேவராஜ். அவனும் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்டு ஒரு கால் பாதம் தரையில் பதியாமல் இருக்கும். மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆகையால் சுந்தர் எக்பர்ட் தேவராஜ் நிலைக்காகப் பரிதாபப்பட்டு தன் அலுவலகத்தில் உதவியாளராகச் சேர்த்தார். தேவராஜ் அமைதியான வாலிபன். கொடுத்த வேலையினை கச்சிதமாக நேர்த்தியாக முடிக்கக் கூடியவனாக இருந்தான். அவனது இந்தப்பண்பு சுந்தரை மிகவும் கவர்ந்தது. தொடர்ந்து அவனுக்கு பல ஆலோசனைத் தந்து தவறுகளை சுட்டிக் காட்டி நன்கு பயிற்சி கொடுத்து கெட்டிக்காரனாக மாற்றினார்.

சுமார் பதினெட்டு மாதங்களுக்குப் பின் ஒரு நாள் தேவராஜ் சுந்தரைச் சந்திக்க வந்தான். சுந்தர் - 'வாப்பா! தேவராஜ்! உட்கார்' என்றார்.

தேவராஜ் : "இல்லை சார் வந்து வந்து ...." (தயங்கியபடி கூறினான்)

சுந்தர் : "சரி எதுவானாலும் சரி! முதலில் உட்கார்.

அப்பா அம்மா சுகமா? வேலை எப்படி போகுது?" என்றபடி இயல்பாக விசாரித்தார்.

தேவராஜ்: "சார் இந்தத் தபால் நேற்று வந்தது" என்றபடி, (தபாலை நீட்டினான்).

சுந்தர் (பிரித்துப் பார்த்தபடி) அட! கவர்மெண்ட்ல உனக்கு வேலை வந்திருக்கு. பரவாயில்லை. என் வாழ்த்துக்கள். இது மகிழ்ச்சியான செய்தி, போப்பா! போய்ச் சேர்ந்து விடு என்றார் உற்சாகத்தோடு. நாம் நன்றாகப் பயிற்சிகொடுத்தோமே என்ற உரிமையுடன் உற்சாகமாய்ப் பேசினார்.

தேவராஜ் : 'சார் ...... சார் நீங்க சத்தம் போடுவீங்களோன்னு பயந்தேன் என்றபடி கண்கலங்கி நின்றான் தேவராஜ்.

சுந்தர் : இல்லை! தேவராஜ் நீ ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பையன் உன் குடும்பத்திற்கு நாங்கள் தரும் சம்பளம் போதாது. ஆகவே உன்னை சந்தோஷமாய் வழியனுப்புகிறேன். என்று தாராள மனதுடன் கூறி வழியனுப்பினார். எப்போது போக வேண்டும்? அட இன்னும் டைம் உள்ளது போய் வேலையைப் பார் என்றார்.

இதற்கிடையில் தேவராஜ் பணிபுரிந்த வேலையில் டைபாய்டு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவ விடுப்பில் இருந்தான். அவனது சொந்த ஊர் கோயில்வளை என்ற கிராமம். அப்போது சுந்தர் வேனில் 20கி.மீ. தூரமுள்ள அக்கிராமத்திற்குச் சென்றார். தேவராஜை சந்தித்துப் பழங்கள் வாங்கித் தந்து பண உதவி செய்ததை மனம் நெகிழக் கூறினார். இது நடந்து கொஞ்ச நாளில் வேலையிலிருந்து விடுபட்டு திருநெல்வேலி சென்று கலெக்டர் ஆபிசில் போய் வேலையில் சேர்ந்தார். ஆறு மாதங்கள் கடந்தன. திடீரென்று தேவராஜை வேலையை விட்டு வீட்டுக்கு அனுப்பி விட்டனர். தேவராஜ் அரசு வேலையில் இருந்த போது வாரம் ஒரு முறை சுந்தரைச் சந்தித்து பேசுவதை வாடிக்கையாக்கி

இருந்தார். ஆகவே வேலை போன செய்தியினை சுந்தரிடம் போய் தெரிவித்து தன் வருத்தத்தை பகிர்ந்து கொண்ட போது அவர் பெருந்தன்மையுடன் "பரவாயில்லை தேவராஜ் பழைய வேலையில் சேர்ந்து கொள்!" என உற்சாகப்படுத்தி அந்த வேலையையும் சம்பளத்தையும் தந்தார். தேவராஜ் இன்று திருநெல்வேலி கலெக்டர் ஆபிசில் சிவில் சப்ளை ஆபிசராக உயர்ந்துள்ளார். வேலையில் கெட்டிக்காரரர் என பெயர் எடுத்துள்ளார். அந்த அன்பு ஜாதி, மதம், அந்தஸ்து, நட்பு இவைகளுக்கு அப்பாற்பட்டது.

தேவசகாயம்:

1996 ஆம் ஆண்டு ஓ.எம். ஸ்தாபனத்தைச் சேர்ந்த செல்வக்குமார் என்ற சகோதரன் சுந்தரைத் தேடி வந்து பேசுவார். ஒரு முறை சகாயம் என்ற வாலிபனை அழைத்து வந்தார். நடுத்தர உயரமும் சிவந்த நிறமுடைய சகாயம், நோக்கமற்றவனாக வாழ்ந்து வந்தான். நேருக்கு நேர் பார்க்க இயலாத தன்னம்பிக்கையற்றத் தன்மை, ஆறு மாதத்திற்கு மேல் எங்கும் நிரந்தரமாக வேலை செய்ய மாட்டேன் என்பதை உறுதிப்படுத்தியது. மனிதர்களைப் பார்த்தவுடன் எடைபோடும் சுந்தர், இந்த காளையை வசப்படுத்திவிடலாம் என்ற நிச்சயத்துடன் பேச ஆரம்பித்தார்.

திரு.தேவசகாயம்

'தம்பி! நீ லைசென்ஸ் வைத்திருக்கின்றாயா?' என்றார் சுந்தர் ஆர்வமற்றவனாக எடுத்துக்காட்டினான் சகாயம், பொதுவாக வேலைக்கு எடுத்துக் கொள்பவர்கள் லைசன்ஸை வாங்கி வைத்துக் கொள்வார்கள். ஆனால் சுந்தர் லைசன்ஸைப் பார்த்தபின் திருப்பிக் கொடுத்துவிட்டார். இது சகாயத்திற்கு வியப்பைத்தந்தது.

நீ எவ்வளவு சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கின்றாய்? சகாயம் சொன்னதும் "என்னால் அவ்வளவு சம்பளம் தர இயலாது". என்றவர், "உனக்கு நல்ல சம்பளம் கிடைத்தால் நீ எப்போதும் போகலாம்", என உறுதியளித்தார்.

எடுத்தெரித்து பேசும் சகாயம், அப்போ நாளைக்கே கிடைத்தால் போகலாமா? என திகைத்தவனாகக் கேட்டான். தாராளமாகச் செல்லலாம் என்றார். உறுதியுடன் அப்போதே சகாயம் தீர்மானித்துவிட்டான், இவரிடம் தான் வேலையில் சேரவேண்டும் என! அடுத்ததாக சுந்தரின் நேரந்தவறாமை அவனைக் கவர்ந்தது. தேவையில்லாமல் அவனை அதிக நேரத்துக்கு முன்பாக வரச் சொல்லி காத்திருக்க வைக்காமல், தேவையான நேரத்துக்கு மட்டும் அழைப்பது அவருக்குப் பிடித்திருந்தது.

வெளியூர் செல்லும்போது, சகாயத்தின் பசி களைப்பு, தாகத்தை புரிந்து செயல்படுவார். சாப்பாட்டுக்குப் பணம் கொடுப்பார். மீதியைக் கொடுத்தாலும் வாங்க மாட்டார். ஆனால் சகாயம் அவர்முன் அப்படியே வைத்துவிட பழகிவிட்டான்.

ஒருமுறை சகாயத்தின் தகப்பனார் சுகவீனமாய் படுத்துவிட்டார். அப்போது தேவையான நேரத்தில் நேரம் கொடுத்து தகப்பனைப் பார்த்து வர உதவினார். ஒருமுறை சகாயம் மருத்துவச் செலவுக்கு கடன் கேட்டான். அப்போது சுந்தர் அந்த தொகையை கொடுத்தது மட்டுமல்லாமல் கடன் வாங்கிப் பழகாதே! என அறிவுரை கூறி வெளியில் யாரிடமும் கடன் வாங்காதே! என்று புத்தி சொல்லி அவரே உதவினார். ஏற்கனவே பெற்ற கடன் தொகையினை வாங்க மறுத்துவிட்டார். சகாயத்தின் தகப்பன் மரித்தபோது, சுந்தர் அவன் வீட்டிற்கு சென்று ஒரு தகப்பனைப் போல உதவினார். முரட்டுத்தனம், அடாவடி, பொல்லாத்தனத்துக்கு துணை போகிறவனுமாகக் காணப்பட்ட சகாயம், சுந்தர் கொடுத்த ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்ததால், மற்றவரைப் புரிந்து கொள்பவனாக, இரக்கமுள்ளவனாக, சொல் தவறாதவனாக

மாறிவிட்டான். சுந்தர் நோய்வாய்பட்ட நேரங்கள், பிரயாண நேரங்கள், மரிக்கும் வேலை வரை சுந்தரை விட்டுப் பிரியாமல் இருந்து பரலோகத்திற்கு வழி அனுப்பும்வரை உதவியாக இருந்தான். சுகந்தத்திற்குத் தேவையான உதவிகளையும் செய்து வருகின்றான். இப்போது அவன் ஒரு விவசாயி. தகப்பனின் நிலத்தைப் பராமரிக்கவும் தன் அன்பு மனைவி பிள்ளைகளைப் பொறுப்பாக கவனிப்பவனாகவும், மாடு கன்று என சொந்த வேலை செய்கிறவனாகவும் முற்றிலும் மாறிவிட்டான்.

சுந்தர் புத்திசாலியாகக் காணப்பட்டாலும், மற்றவரின் ஆலோசனைகளைப் பொறுமையாகக் கேட்பார். ஒருமுறை பிஷப் குடும்பத் திருமணத்தில் மேடைக்குப் பேச அழைத்தார்கள். அப்போது சகாயத்திடம் 'சக்கரவண்டி மேலே போகுமா?' எனக் கேட்டபோது சகாயம் 'போகும், ஆனால் சிரமப்படும்' என்றபடி வண்டியை மேலே ஏற்ற சிரமப்பட்டு மேலேறியது. அப்பொழுதும் பொறுமையுடன் அந்த சூழலை சமாளித்தார். மற்றபடி எஜமானுக்குரிய அதிகாரத்தில் எதைக்குறித்தும் கண்டிக்கவில்லை.

சுந்தர் அன்று, சகாயத்தின் ஆற்றலை எப்படி திசை திருப்பினால் எப்படி செயல்படுவான் என உணர்ந்து செயல்பட்டபோது, இன்று பொறுப்புகள் உள்ள மனிதனாக சகாயம் மாறி விட்டார்.

கிறிஸ்டினா பாண்டியன்:

'பாப்பு' என்று அழைக்கப்படும் இந்தப்பெண் உறவுக்காரப் பெண். இரண்டு வயதில் கான்சர் நோயின் பாதிப்பால் ஒரு கண்ணை எடுக்க வேண்டிய சூழல் உருவாயிற்று. ஆகவே சிறுமி கிறிஸ்டினா தாழ்வு உணர்வால் பாதிக்கப்பட்டாள். மற்றவரிடமிருந்து ஒதுங்கியிருக்கத் தொடங்கினாள். சுந்தரை அவள் சந்தித்த போது பதிமூன்று வயது சிறுமி சுந்தரின் உற்சாகமான பேச்சு, திறமையான

செயல்பாடுகளால் கவரப்பட்டாள். சுந்தரும் அந்தச் சிறுமியிடம் அடிக்கடி அவள் திறமைகளை சுட்டிக்காட்டி அவை மக்களுக்குப் பயன்பட வேண்டும் என அடிக்கடி கூறித் தூண்டினார். கிறிஸ்டினா விழிப்புணர்வுடன் செயல்பட கடுமையாக உழைத்துப் படிக்க ஆரம்பித்தாள். இன்று இங்கிலாந்து தேசத்திலுள்ள மகப்பேறு மருத்துவமனையில் ஒரு சிறந்த மருத்துவராகப் பணிபுரிகிறார்.

ஒரு மனிதன் தரும் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் இவ்வுலகில் சேவை செய்யும்படியாக அநேகரை எழுப்பி விடுவதைப் பார்த்தீர்களா? ஆகவேதான், "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமை படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என வேதத்தில் கூறப்பட்டுள்ளது. (மத் 5:16)

பேசில்ராஜன்: (கன்னியாகுமரி)

திரு. பேசில் ராஜன்

பரபரப்பான நியூடெல்லி ரயில்வே ஸ்டேஷன் நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த பேசில் ராஜன், மனிதர்களை வேகமாக ஒதுக்கியபடி வந்து, ரயிலில் ஏறுகின்றார். தனது இருக்கையில் அமர்ந்தபடி, இந்திய தலைநகர் மக்கள் கூட்டத்தைப் பார்த்தார். வடமாநில தென்மாநில மக்கள் பல மொழிக்கலவைகளின் இரைச்சல் கேட்டது. ரயில் கூ... வென கூவியபடி புறப்பட்டது, நீளமான தமிழ்நாடு விரைவுவண்டி. வெளியே நட்சத்திரங்கள் மின்னியபடி தெரிந்தன.

பேசில் ராஜனை இந்திய அரசு, மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு பள்ளிகள் வைத்து சிறப்பாக சேவை செய்ததற்காக விருது கொடுத்து பாராட்ட சமூகநலத்துறை மத்திய அரசு மூலம் அழைப்பு விடுத்திருந்தது. அதன்படி வந்து

விருது பெற்ற பின் தன் சொந்த மண்ணுக்குத் திரும்பிக்கொண்டு இருக்கிறார்.

நடுத்தரவயது கம்பீரமான தோற்றம் தெளிவாக துல்லியமாக கனத்த குரலில் கணீரென பேசுகிறார் ஒற்றைநாடி உருவம்.

கண்களை மூடி சிந்தித்துக் கொண்டிருந்த பேசில் ராஜன் இந்த விருது கிடைக்க காரணமானவர்களை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கின்றார்.

12 வயது நடக்கும் போது மணியடிச்சாம் பாறைகாண உல்லாசப் பிரயாணம் சென்ற நாட்கள், அப்படியே விடிசி பார்க்க ஆரல்வாய்மொழி சென்றது, அங்கு சக்கர நாற்காலியில் அமர்ந்த சுந்தர் எக்பர்ட் உற்சாகமாக சிறுபையன்களான பேசில் ராஜன் போன்றோருக்கு விளக்கம் அளித்தது, எல்லாம் இன்றும் பசுமையாக உள்ளது.

முதலில் சுந்தர் எக்பர்ட்டைப் பார்த்துப் பரிதாபப்பட்டதும் பின் அவரது புத்திக்கூர்மை, காலத்தின் அருமை உணர்ந்தவராக செயல்படுவதையும், ரகசியங்களைக் காப்பாற்றும் தன்மையையும், திறந்தமனதோடு பேசும் இயல்பினையும் கண்டு வியந்துள்ளார்.

பேசில் ராஜன் மனவளர்ச்சி குன்றிய மக்களுக்குத் தன் வாழ்வை அர்பணித்தபோது, அதை வரவேற்று சுந்தர் உற்சாகப்படுத்தினார். அதுமட்டுமல்ல, தரமான செயல்திறன் பேசிலிடமிருந்து வெளிப்பட, அவர் தவறுகளைச் சுட்டிக்காட்டி சரிசெய்ய முயல்வார். தன்னிச்சையாகச் செயல்பட விரும்பாமல், தன்னோடு இணைத்து சரியான வழி செல்ல நல்ல பயிற்சி கொடுத்தார் என நன்றியுடன் பேசில் நினைவு கூறுகின்றார். பலமுறை கடிந்து கொள்ளப்பட்டதை நினைத்து, சரியான நபரிடம் சென்று உருவாக கடவுள் உதவிசெய்ததாகக் கூறும் பேசில் இன்று கௌரவ டாக்டர் பட்டமும், அகில உலக சாதனையாளர்

விருதினை 2009 ஆம் ஆண்டு நவம்பரில் தாய்லாந்தில் பெறும் பாக்கியமும் பெற்று, சுந்தர் தன்னை உருவாக்கியதில் பெற்ற விருதுகள் என மகிழ்ச்சியுடன் கூறுகிறார். சுந்தர் கடிந்து கொண்ட நேரங்களையும் பகிர்ந்து கொண்டார். சுகந்தத்தின் ஆறுதல் இதமாக இருக்கும் என்கிறார்.

அருள் காட்வின்:

சுந்தர் எக்பர்ட் உருவாக்கிய மற்றொரு வாலிபன் காட்வின். உயரமான வலிமை பொருந்திய வாலிபன். பார்க்க சற்று முரடாக காணப்பட்டாலும், பாசத்துக்கு கட்டுப் பட்டுத் தன் பாதையை மாற்றி கொண்டவர். படிக்கும் போது, பகுதி நேர வேலைக்கென வந்தவர் காட்வின். விடிசியிலிருந்து ஓய்வு பெற்ற பின் பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஆலோசகராய் சுந்தர் எக்பர்ட் செயல்ப்பட்டார். அப்போது கணக்கு வழக்குகளை சரி பார்க்க உதவியாகக் காட்வினும் உடன் செல்வது வழக்கம் எம்.காம். முடித்த பின் உதவினார். எல்ஐசியில் நல்லதொரு வேலைவாய்ப்பு கிடைத்தபோது, மனப்பூர்வமாக வாழ்த்தி, வழியனுப்பி வைத்ததை காட்வின் ஆச்சரியமாக விவரிக்கின்றார். சரியான ஆள் கிடைக்கும் போது, சுயநலமாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பவாதியாகச் சுந்தர் ஒருபோதும் செயல்படவில்லை.

காட்வின் கணக்கு வழக்குகளை வீட்டில் போய் பார்க்கும் போது, அதை அவர் வரவேற்பது இல்லை. கணக்கு வழக்கு தனிப்பட்ட நிறுவனங்களுக்கு பார்க்கும் போது அதன் குறை நிறைகள் அம்பலப்படுவதை சுந்தர் ஒருநாளும் அனுமதிக்க மாட்டார் என அவரது நேர்மையினை காட்வின் பாராட்டுகின்றார். நேரந் தவறாமை, பொருட்களை ஒழுங்காக வைப்பதில் பலமுறை மாட்டிக் கொண்டதை நினைக்கும் காட்வின், தன்னை உருவாக்க அவர்பட்ட பாடுகளை இன்று நல்ல நிலையில் இருக்கும் காட்வின் மறக்கவில்லை. அதை அடிக்கடி தன் மனைவி பிள்ளைகளுடன் சுகந்தத்தை விசாரிப்பதிலும், அவரது தேவைகளைச் சந்திப்பதிலிருந்து தெரிகிறது.

ஒரு மகனிடம் பேசுவது போல, தனிமையில் தன் எதிர்காலத் திட்டங்களைப் பகிர்ந்து கொண்டதை நினைக்கிறார், காட்வின். சுந்தரின் கடைசி நேரத்தில் இருந்த ஒரு சிலரில் காட்வினும் ஒருவர். அவருடன் இருந்து தன் நினைவில் நின்ற பல பாடல்களைப் பாடி பிரியா விடை கொடுத்து அவரை பரலோகத்திற்கு வழியனுப்பி வைத்ததாக வருத்தத்துடன் காட்வின் கூறுகிறார்.

காட்வின் கற்றுக்கொண்ட மற்றொரு பாடம், சுந்தரின் கண்ணோட்டம். குறுகிய காலத்திட்டமாகக் காணப்பட்டால் தொலைதூரத் தேவைகளை சந்திப்பதாக இருக்க வேண்டும் என அறிவுரை கூறுவார். அது ஒரு சிறிய ஸ்குரூவாக இருந்தாலும் சரி, தன் மரணத்திற்குப்பின் சுகந்தத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளானாலும் சரி துல்லியமாகக் கணித்து, அதற்கான திட்டங்களை வகுத்துவிடுவார். அவரது மேசையில் நிலுவைக்கோப்புகள் (Files) இருந்து நான் பார்க்கவில்லை. இரவு பகலாக விழித்து வேலையை முடிப்பதில் கருத்தானவர். அவரது பயிற்சி காட்வினின் நிர்வாகத்திறனை உயர்த்தியுள்ளது.

சந்தாலி மக்கள் பயன்படுத்தும் படியாக ஒரு வேதக்காலண்டரை உருவாக்க சுந்தர் எக்பர்ட், காட்வினின் உதவியோடு கடுமையாக உழைத்தார். சந்தாலி எழுத்து இல்லாததால், அதற்கென பயன்படுத்தப்படும் எழுத்தில் வேத வசனங்களை எழுதி சந்தாலி மொழி தெரிந்த ஊழியருக்கு அதை அனுப்பி திருத்தி இறுதியாக வெற்றிகரமாக காலண்டரில் அச்சிட்டு ஆயிரக்கணக்கில் விநியோகம் செய்தனர். ஆதிவாசிகளுக்கு மிகவும் பயன்படும் காலண்டராக உள்ளது.

அடுத்ததாக சுந்தர் எவ்வளவு நட்புடன் பழகினாலும் மற்றவரின் கருத்தில் அவருக்கு உடன்பாடு இல்லாவிட்டால் இதைத் தெளிவாக நேரடியாகக் கூறிவிடுவார். ஆனால் நட்பை இழக்கமாட்டார்.

தெரியாத விஷயத்தை யூகித்து, தெரிந்தது போல் பேச மாட்டார். தெரியாத கணினி மொழிகளை (Computer Language) தெரியாது என கூறிவிடுவார். நடமாட்டம்

குறைந்த அளவு உள்ள சுந்தர், பலவகையான தகவல்களை தெரிந்து வைப்பதில் சூரராகக் காணப்பட்டார்.

சுந்தர் எக்பர்ட் ஒரு ஆசானாய், நண்பராய், வழிகாட்டியாய், தகப்பனாய் இருந்ததை காட்வின் கண்கலங்கி நன்றி உணர்வுடன் நினைவு கூறுகிறார்.

டாக்டர் பியூலா:

டாக்டர். கருணாவின் மனைவி திருமதி பிரின்சஸ் அம்மா டாக்டர்.பியூலாவை, சுந்தர் எக்பர்ட் குடும்பத்தாருக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அதன்பின் பியூலா, சுந்தர் குடும்பத்தாரின் ஆஸ்தான மருத்துவராகி விட்டார். சுகந்தத்திற்கு பியூலாவை அதிகம் பிடித்து விட்டது. மருத்துவராக மட்டுமில்லாமல், ஜெபப்பங்காளியாக, மருத்துவ உதவி செய்பவராக, ஆவிக்குரிய தோழியாகத் தனிமையில் துன்பவேளையில் ஆறுதல் அளிப்பவராக மொத்தத்தில் இன்றியமையாதவராக அக்குடும்பத்தில் மாறிவிட்டார். அவரது சாட்சி அக்குடும்பத்திற்கு மிகவும் உபயோகமாக இருந்தது.

சுந்தர் மரணத்தருவாயில் இருந்தபோது பக்கத்தில் இருந்த வெகு சிலரில் இவரும் ஒருவர்.

இம்மானுவேல் ஜான்:

சுந்தரின் குடும்பத்திற்குத் தேவையான நேரத்தில் வந்து விருந்தினரை உபசரிப்பதில் உறுதுணையாய் இருப்பவர்களில் ஒருவர் சகோதரி எஸ்தர், பி.காம் பட்டதாரி. வீட்டிற்கு அருகில் உள்ள செவித்திறனற்றோர் பள்ளியில் டைப்பிஸ்டாக பணிபுரிகிறார். இவரின் தம்பி இம்மானுவேல் ஜான். களையான முகம் சுத்தமாக உடை உடுத்தும் இவ்வாலிபன்,. ஒரு வேதியியல் முதுகலைப் பட்டதாரி. (எம்.எஸ்.சி., வேதியியல்). தற்போது சென்னையில் பணிபுரிகின்றார்.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் சிறுவனாக இருந்த இம்மானுவேலைத் தூக்கிக்கொண்டு அவனின் தாயார்

சுந்தரைப் பார்க்க வந்தார்கள். பையன் கூச்சத்தில் நெளிந்தான். பெரியவனாக இருந்தும் அம்மா இடுப்பில் தூக்கி வரும்படியான சூழலில் இருப்பது வருத்தமாக இருந்தது. வேறுவழி இல்லை. சிறு வயதில் உள்ளங்காலில் தோன்றியக் கொப்புளத்தை ஒரு டாக்டர் கீறிவிட்டதன் விளைவு காலில் புண்ணாகி சீழ்கோர்த்துக் கொண்டது. ஆகவே, ஒரு கால் குட்டையாக ஒரு கால் நீளமாக இருக்கும் சூழலில் பையன் வாழ்க்கையோடு போராடுகின்றான். அதோடு படிப்பில் ஆயிரத்திற்கு மேல் மதிப்பெண் வாங்கிக் காட்டிள்ளான். சுந்தர் எக்பர்ட் அவன் கால்களுக்கு சிறப்பு அமைப்புடைய காலணி செய்ய உதவினார். அதற்குப்பின் அவ்வப்போது பல உதவிகள் செய்ய மறக்கவில்லை. பி.எஸ்சி., வேதியியலில் முதல்வகுப்பும், எம்.எஸ்சி., வேதியியலிலும் தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரியில் படித்து முதல் வகுப்பில் தேறியுள்ளான்.

இம்மானுவேல் ஜான்

13

இணைந்து செய்த ஊழியங்கள்

சுந்தர் ஊனமுற்றவர்கள் என்ற பொதுவான கண்ணோட்டத்தில் பாரபட்சமின்றி நன்மைகளைச் செய்தார். சில நேரம் நல்ல ஆலோசனைகளை வழங்குவதிலும் உண்மையுள்ளவராக இருந்தார்.

பெரியவர், சிறியவர், விபத்தால் ஊனமுற்றவர்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்ட எலும்பு மற்றும் நரம்பு பகுதி பாதிப்படைந்தவர் என பலதரப்பட்ட மக்களுக்கு சுந்தர் உதவிக்கரம் நீட்டினார். அது மட்டுமல்லாமல், ஊனமுற்ற மக்களுக்காக தொண்டு செய்யும் நிறுவனங்களுக்கும் ஆலோசகராகப் பணிபுரிந்தார். அவற்றில் சிலவற்றைக் காண்போமா?

1963ஆம் ஆண்டின் பிற்பகுதியில் Worth என்று அழைக்கப்படும் தன்னார்வத்தொண்டு நிறுவனத்தில் சில ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் சுந்தருக்கு இருந்தது. சுமார் பத்து பன்னிரண்டு ஊழியருடன் ஆரம்பித்த ஊழியம் இன்று சுமார் முப்பது ஊழியர்களைக் கொண்டதாக உள்ளது. டைப்ரைட்டிங் மிஷின், கார், ரேட்டர்ஸ் மற்றும் மோட்டார் வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் நுட்பமான சில உபரி பாகங்களைத் தரத்துடன் தயாரிப்பதும் அதைச் சரியான முறையில் பொருத்துவது குறித்தும் சுந்தர் பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்ததை அந்த நிறுவனத்தில் பொறுப்பாளராக இருந்த வி.ராஜேந்திரன் நினைவு கூறுகின்றார்.

சுந்தருக்கு மேல்நாடுகளுக்கொப்பான பயிற்சித்திறன் இருந்ததைப் பார்த்த அநேகர் வியந்திருக்கின்றனர். இந்தக் காலகட்டத்தில் தான் டாக்டர். ஹாரி. வில்லியம்ஸ் காட்பாடியில் அவரைக் கண்டு, ஆரல்வாய்மொழியில் பயன்படுத்தத் திட்டமிட்டார், வி.டி.சி.யில் போய் இணைந்தாலும், நிறுவனத்திற்குத் தேவையான கட்டில் நாற்காலி போன்றவற்றைச் செய்து கொடுத்துள்ளார். அதே போல சிபிஎம் என அழைக்கப்படும் விழியிழந்த மக்களின் தேவைக்காக Mobility Cane என்று அழைக்கப்படும் மடக்க

நீட்ட வசதியான நீளமான ஊன்று கோல்களை வடிவமைத்து தந்துள்ளார். அவரோடு இணைந்து பணிபுரிந்தவர்க்கு அவர் ஒரு ஆலோசகராக மட்டுமின்றி, சமூக சேவகராக, ஊனமுற்றவர்களின் தேவையை அறிந்து செயல்படும் ஆய்வாளராக ஊழியம் செய்தார் என ராஜரத்தினம் நம்புகின்றார். இப்போது சுந்தர் நித்திரை அடைந்திருந்தாலும், கர்த்தரின் இரண்டாம் வருகையில் தேவதூதர்களோடு, கிறிஸ்துவோடு வெளிப்படுவார், என்று நம்புகின்றார்.

RUCODE INDIA

சுந்தர் எக்பர்ட் அவர்கள் திரு. நவமணி (Rucode India) அவர்களுடன்

1975 ஆம் ஆண்டு ஏ. நவமணி என்ற சகோதரர் சுந்தருக்கு அறிமுகமானார். அவர் பரி. தாமஸ் தொழு நோயாளிகள் மறுவாழ்வு மையத்தில் பணி புரிந்தவர். சுந்தர், வி.டி.சி.யில் மானேஜரான பின்பும் சில தொழு நோயாளிகளை அழைத்து வந்து அவர்கள் எப்படிப்பட்ட பணி செய்ய பொருந்துவார்கள் என ஆலோசனை கேட்பார்.

சில மாதங்களுக்குப் பின் நவமணி சொந்தமாக ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் தொடங்கி அதில் குறிப்பாகத் திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட அளவிலான ஊனமுற்ற சிறுவர், சிறுமியருக்கு உதவி புரியத் திட்டமிட்டு RUCODE INDIA என பெயரிட்டு ஆரம்பித்தார். அதிலும் சுந்தர் ஆலோசகராகப் பணிபுரிந்தார். இதே நிறுவனம் தன் கிளை நிறுவனங்களாக ஒன்று கொட்டாரத்திலும், மற்றதை பழவூரிலும் தொடங்க சுந்தர் உதவியதை நவமணி நன்றியுடன் நினைவு கூறுகின்றார்.

ஊனமுற்றோரின் தேவைகள் அவர்களிடம் காணப்படும் திறமைகளை எந்த அளவு பயன்படுத்த முடியும் என்பதை துல்லியமாக, ஒரு தீர்க்கதரிசி போலக் கணித்து, உதவுவது மற்றவர்களுக்கு மிகவும் உதவியாக இருப்பதாக நவமணி பின் கூறுகின்றார். சேவைகளை ஊனமுற்றோர் எந்த அளவு பயன்படுத்த முடியும் என்பதையும் அறிந்து செயல்பட்டார்.

CEF (Child Evangelism Fellowship of India)

1980-83 களில் சுந்தரின் ஈடுபாடு குழந்தைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கும் இயக்கத்துடன் இருந்தது என்பதை பால் தம்பதியர் பகிர்ந்து கொண்டனர். விடிசியில் பணிபுரிந்த போது ஜெஸி மற்றும் அருள் ஜானகி என்ற ஊழியப் பெண்கள் அடிக்கடி வந்து சுந்தர் மற்றும் சுகந்தத்தைச் சந்திப்பார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறுவர் மத்தியில் ஊழியம் செய்தனர். சுந்தரின் மனைவி அந்த இரு பெண்களுக்கும் தன் அன்பையும் ஆறுதலையும் காட்டினார். சுந்தரும் தன் பங்குக்கு நல்ல ஆலோசனைகளைத் தந்து இன்னும் சிறப்பாக எவ்வகையில் ஊழியம் செய்ய இயலும் என்பதை அழுத்தமாகக் கூறுவார். மூத்த சகோதரன் போல, ஆறுதல் செய்து, அன்பு செலுத்தி, ஆலோசனை வழங்கியது பால் தம்பதியருக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்கின்றனர். பால் சிறுவர் ஊழியத்தின் டைரக்டராக பணியாற்றினார்கள். அவரது மனைவி லிடியா, சுகந்தத்தின் ஜெபக்கூட்டாளி இப்போதும் அவர்கள் நட்பு தொடர்கின்றது.

எபே. 6:56 ல் சொல்லப்பட்டபடி "உங்கள் எஜமானர்களாய் இருக்கிறவர்களுக்கு பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடமற்ற மனதோடும் கீழ்படிந்து,... தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள் என்பது போல சுந்தரின் பணி ஆலோசகராய் இருக்கும்போது, நட்பு வட்டாரங்களிலும் இருந்ததைக் காண முடிந்ததாகக்

கூறுகின்றார். சுந்தர் சாப்பாட்டு மேசையிலும், அலுவலக நேரத்திலும் வீட்டிலும் ஜெப நேரத்திலும் நல்ல கணவராகச் செயல்பட்டதைக் காண முடிகின்றது என மன நிறைவால் கூறுகின்றார்.

Society Care for Handicapped Children

Dr.கருணா அவர்கள் (SCHT)

1976ஆம் ஆண்டு டாக்டர். கருணா செல்லையாவுடன் இணைந்து இந்தத் தொண்டு நிறுவனத்தை தொடங்கினார். இந்த நிறுவனத்தில் ஊனமுற்ற சிறுவர்கள் சின்னச்சின்ன கைத்தொழில்கள் செய்கின்றனர். இது பாளையங் கோட்டையை மையமாக வைத்து செயல்படுகின்றது. சிறுவர்கள் இங்குள்ள பள்ளிகளுக்குச் சென்று படித்து வருகின்றனர். ஆரம்பத்தில் 84 சிறுவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பட்டது. ஊனமுற்ற மாணவர்களுக்குப் பொருத்தமான தொழில் துறைகளை சுந்தர் தெரிந்தெடுக்க உதவி செய்தது மட்டுமல்லாமல் கணக்கு வழக்குகளைச் சீராய் வைப்பதிலும் ஆலோசனைகள் தந்து உதவியுள்ளார்.

குலவணிகபுரம் CSI ஆலயத்தில் ஊனமுற்றோர் ஆலயத்தில் பிரவேசித்து ஆராதனையில் பங்கெடுத்து ராப்போஜனம் எடுக்க வசதியாக படியில்லாத சரிவுகளைக் கட்ட ஆலோசனை தர கருணாவும், சுந்தரும் அதிகப் பிரயாசப்பட்டனர். அதன் விளைவாக நடக்க இயலாதவரின் சக்கர நாற்காலிகள், சுலபமாக இப்போது ஆலயத்திற்கு வருகின்றன.

மோட்டார் பைக் விபத்தில் கால்கள் செயலிழந்த கருணாவின் நட்பு, தோழமை சுந்தருக்கு திருநெல்வேலியில் மாற்று மருந்தாக இருந்தது. சிறந்த விளையாட்டு வீரரான

கருணாவுக்கும் சுந்தரின் நட்பு அதிக பிரயோஜனமாய் இருந்தது. டாக்டர். கருணாவுக்குச் சக்கர நாற்காலி வேண்டி வி.டி.சி. சென்ற போது கிடைத்த நட்பு, இன்று ஒரு தொண்டு நிறுவனம் ஆரம்பிக்க உதவியது. இப்போது அங்கு பயிற்சி பெற்ற ஊனமுற்ற மாணவர்களில் அநேகர் வெளியிடங்களில் பணிபுரிகின்றனர். சுந்தர் செய்யும் ஜெபத்தில் கருணாவின் மனம் நெகிழ்ந்து விடுவதாகக் கூறுகின்றார்.

Mobility India

*1994*ஆம் ஆண்டு கல்கத்தாவிலிருந்து சேப்பல் என்பவர் தொண்டு நிறுவனம் ஒன்றைத் தொடங்க விரும்பினார். ஆனால் முன்அனுபவம் ஒன்றும் இல்லை. சேப்பலுடைய கணிப்பில் சுந்தரோடு இணைந்து வேலை செய்வது கடினமாகப்பட்டது. ஆனால் முதல் முறை நடந்த போர்டு மீட்டிங்கில் சேப்பலுக்குத் தொண்டு நிறுவனம் ஒன்றை எப்படித் தொடங்குவது என்பதில் பல ஆலோசனைகளைத் தந்தார். அடுத்த நாளே சுந்தர், சேப்பலைத் தனியாக சிந்தித்து செயல்பட ஊக்குவித்தப் பின்னர் பாளையங்கோட்டை வந்துவிட்டார். ஒவ்வொருபடியாகச் சிந்தித்து செயல்பட்டு, சுந்தரின் பாராட்டைப் பெற்றார்.

சுந்தர் எக்பர்ட் அவர்கள் திரு சேப்பல் (Mobility India) அவர்களுடன்

*1994*ஆம் ஆண்டு ஆகஸ்ட் *2*ம் தேதி சுந்தர் எக்பர்ட்டை ஸ்தாபகராகக் கொண்டு பெங்களூரில் Mobility India எனறு சேவை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. சுந்தர் அதில் தலைவராகச் செயல்பட்டார். ஊனமுற்ற மனவளர்ச்சி குன்றிய சிறுவர் சிறுமியருக்கென இந்த நிறுவனம் தொண்டாற்றத் தொடங்கியது. பின் கிராமத்தை மையமாகக்

கொண்ட மறுவாழ்வு மையமாகச் செயல்பட்டு ஊனமுற்றோருக்குத் தேவையான உபகரணங்களை செய்யத் திட்டமிட்டது. இப்படி பல எதிர்காலத் திட்டங்களை சுந்தர் இவர்களுக்கு வகுத்துக் கொடுத்து அடிக்கடி பெங்களூருக்குச் சென்று அந்த நிறுவனத்தின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றினார்.

Leprosy Mission Trust:(Kanyakumari)

*1989*ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மறுவாழ்வு மையத்திற்கு துணைத்தலைவராகப் பணியாற்றினார். அடுத்த வருடமே, அந்ந நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பெடுத்தார். அப்போது இந்த மையத்தின் குழுமத்தலைவர்களாக ஜி.ஓய் ஹெண்டர் சன் என்பவரும் (ஓய்வு பெற்ற நீதிபதி) லியோான் தர்மராஜ் (கத்தோலிக்க பிஷப்) இருந்தனர். இருவரும் மகா கெட்டிக்காரரர்கள் அவர்களுக்கு இணையாக சுந்தர் துணைத்தலைவராக இருந்து மேற்கூறியவர்களை வழிநடத்தினார் என்றால், சுந்தரின் திறமைகளை நிறுவனம் எப்படி கணித்திருக்கின்றது என்பதை உங்கள் வசம் விட்டு விடுகின்றேன். சட்டத்துக்கு புறம்பாக எதையும் அனுமதிக்காத கண்டிப்பு நிறைந்தவராக செயல் ஆற்றியுள்ளார். ஆலோசிக்க வேண்டிய (Agenda) குறிப்புகள் போர்டு மீட்டிங்கில் கடைசிவரை தெளிவாகப் பேசி முடிவெடுக்க வைத்து விடும் சுந்தர் நேரத்தை ஆளும் திறமை உடையவராக இருந்தார் என சுந்தரின் காரியதரிசியாகப் பணிபுரிந்த இந்திரா அலெக்ஸாண்டர் நினைவு கூறுகின்றார். குறைவான பேச்சு அதிக செயல்திறனில் நம்பிக்கை கொண்டவர் என்பதையும் கூறுகின்றார். சுந்தரிடம் செகரட்டரியாக இருந்தபோது, கணக்கு வைப்பதிலும், நிர்வாகத்திலும் புதிய முறைகளைக் கற்றுக் கொடுத்து, அதைச் செயல்படுத்த உதவினார். உடன் ஊழியர்கள் பணியாளர்களுக்கான சம்பளம் குறித்த விபரங்கள், உபரித்தொகை, உயர்வு தொகை போன்றவற்றைத் தெளிவாக வரையறுத்து எழுதிவைப்பார். பணியாளரின் நலனுக்காகப்

பாடுபடுவார். அதே நேரம் அவர்களின் உற்சாகமற்ற தன்மைகள், அர்ப்பணிப்பற்ற வேலைகளைக் குறித்து கடிந்து கொள்வார். தரம் அவரது மந்திரம்.

இந்திராவின் தகப்பனார் ஜார்ஜின் நண்பராக சுந்தர் இருந்தார். இந்திரா, சுந்தரிடம் காரியதரிசியாகப் பணிபுரிவது நல்லது எனக்கருதி அவரது தகப்பனார் கொண்டு வந்து விட்டார். விடிசியில் சுந்தரை இந்திரா சந்தித்த போது இடையில் ஒரு பணியாளர் வந்து ஒரு இயந்திரம் பழுதுபட்டு வேலை செய்ய மறுப்பதாகக் கூறினார். சுந்தர் பேசுவதை நிறுத்திவிட்டு, அந்த பணியாளரோடு சென்று பழுதுபட்ட இயந்திரத்தைக் கண்டு, சரி செய்யத் தொடங்கி விட்டார். வேலையில் முடிசூடா மன்னராகக் காணப்பட்டதை இந்திரா பெருமிதத்துடன் கூறுகின்றார். பின்னாளில் கன்னியாகுமரி தொழுநோய் ஸ்தாபனத்தின் தலைவராக திருமதி. இந்திராவை அமர்த்திய பெருமை சுந்தரைச் சேரும். அவரிடம் பணிபுரிந்தபோது தலைமைப் பண்புகளைக் கற்றுக் கொண்டதாக இந்திரா கூறுகின்றார்.

14

பிரிவு உபச்சாரம்

சுந்தர் எக்பர்ட்
அவர்களுக்கு
தமிழ்நாடு அரசு விருது

சுந்தர் எக்பர்ட்
அவர்களுக்கு
மத்திய அரசு விருது

சுந்தர் எக்பர்ட் அவர்களுக்கு சர்வதேச விருது
பிரையிட்டன், இங்கிலாந்து, 03.09.1982

“வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு சமயமுண்டு” (பிரசங்கி 3:1)

“ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு என்று பிரசங்கி எதெதற்கெல்லாம் ஒருகாலமுண்டு’’ என வரிசைப்படுத்துகின்றான்.

இது சிந்திக்க வேண்டிய ஒரு பொன்மொழியாகும். அதன் வழியில் சுந்தர் எக்பர்ட் வாழ்க்கையைச் சொல்ல வேண்டுமானால்,

“ஓடி ஓடி உழைக்க ஒருகாலமுண்டு

ஒன்றும் செய்யாமல் ஓய்ந்திருக்க ஒருகாலமுண்டு” எனலாம்.

‘‘என்ன? சுந்தரைப் பற்றியா இப்படி சொல்கின்றீர்கள்? நீங்கள் அப்படிச் சொன்னாலும் சும்மா இருக்கும் மனிதர் அல்லவே!” என நீங்கள் நினைப்பது உண்மைதான்! ஆனாலும் பிரசங்கி இப்பிரபஞ்சத்தையும் அதன் சுழற்சியினையும் உற்றுப்பார்த்த பின் தான் மேற்கொண்ட காரியங்களைக் கூறுவதை நாம் பார்க்க முடிகிறது. சரி சுந்தரின் வாழ்வில் அப்படி என்னதான் நடந்ததெனப் பார்க்கலாம்!

சுந்தர் எக்பர்ட் வாழ்வில் சுமார் 21 வருடங்கள் வி.டி.சியில் ஓடி மறைந்தன. மேலும் பல ஸ்தாபனங்களில் ஆலோசகராய் உடன் இருந்தும், ஊழியமும் செய்தாகிவிட்டது. சில நிறுவனங்ளில் தலைவராக, செகரட்ரியாக, போர்ட் மெம்பராக இப்படி பல வேலைகளில் ஆகாய விமானத்தில் விர்.. விர்... என பலமுறை பறந்து, திரிந்தாயிற்று. சக்கர நாற்காலியின் சக்கரங்கள் ‘கட... கட.... வென சுழன்று... இப்போ... நின்று, நிறுத்தி ஓய்வெடுக்கும் காலத்தை அவை அறிமுகப்படுத்தி விட்டன.

1988-ம் வருடம் கல்கத்தாவிற்கு ஒரு வேலையாகச் சென்றார். வந்து மதிய உணவு உண்டபின், ஓய்வாக

அமர்ந்தார். சுந்தர் வயதுக்குமீறி தளர்வாகக் காணப்பட்டார். நீரிழிவு நோய் பாதிப்பால் கண்களில் பாதிப்பு ஏற்பட்டன.

சுந்தரின் இயல்பின்படி எந்தக் கஷ்டத்தையும் பொறுத்துக்கொள்வாரேயன்றி வாய்விட்டு புலம்புவது, தன்னைத்தானே நொந்து கொள்வது என்ற வழக்கமே இல்லாதவர். ஆனால் வி.டி.சியில் வேலை முடிந்து வந்ததும் களைத்துப்போய் உறங்குவதை சுந்தரின் மனைவி சுகந்தம் முதலில் கண்டுபிடித்தார்.

சிறுவயதிலிருந்தே சுகந்தம், மனதில் பட்ட காரியங்களை இயேசு கிறிஸ்துவிடம் மட்டுமே கூறுவார். ஆகவே அவரிடம் தன் மனப்பாரங்களை ஊற்றி விட்டார். இப்படிபட்ட சூழலில் சுந்தர் பத்து நாள் பயணமாக கல்கத்தா செல்ல வேண்டிய அவசியம் வந்தது. அகவே சுந்தர் வரும் வரை தீவிரமாக கர்த்தரின் சித்தம் தெளிவாகத் தெரிய வேண்டும் என ஜெபித்து வந்தாள் சுகந்தம். சுந்தரிடம் அது குறித்து நேரடியாகக் கேட்கத் தயங்கினார். கர்த்தரே பத்து நாளும் அமைதி காத்தார். எந்த வசனமும் தெளிவாகத் தெரியவில்லை. ஆகவே சுகந்தம் யெகோவாயீரே என்ற வார்த்தையின்படி 'கர்த்தருடைய பர்வதத்தில் பார்த்துக் கொள்ளப்படும்' என்று விட்டுவிட்டார். மனம் இனம் புரியாத அமைதியில் ஆழ்ந்தது.

இப்படிபட்ட சூழலில் தான் சுந்தர் வந்து விட்டார். அருமையான சாப்பாட்டை அன்புடன் படைத்த சுகந்தம் அடுப்படியைச் சுத்தம் செய்தபின் அருகில் வந்து அமர்ந்தார். 'சுகந்தம் உன்னிடம் ஒரு காரியம் சொல்ல வேண்டும் என நினைக்கிறேன்' என்றார் சுந்தர். அவர் முகத்தில் இருந்த இறுக்கமும், கண்களில் தெரிந்த உறுதியும் நான் முடிவு எடுத்து விட்டேன். இனி அது மாறாது என்பது போல் இருந்தது.

சுகந்தம் சுமார் 30 வருட வாழ்க்கையில், குடும்ப வாழ்வில் சுந்தரின் செயல்களைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தாள். குறுக்கே பேசுவது என்பது அவருக்குப்

பிடிக்காத காரியம். எவ்வளவு நேரமானாலும் அவராகச் சொல்லும் வரை காத்திருக்க வேண்டும் என்பது சுந்தர் எதிர்பார்க்கும் காரியம். சுகந்தம் படபடவென கொட்டி விடும் அருவி போலத் தெரிந்தாலும் இன்று குறிப்பாக அமைதி காத்தார்.

"நான் ஆரல்வாய்மொழி வேலையிலிருந்து விடுபடும் நேரம் வந்துவிட்டது" எனத் தெளிவாக அமைதியாகக் கூறினார் சுந்தர்.

சுகந்தம் நிம்மதியாக பெருமூச்சு விட்டார்கள்

"அப்பாடா! இதைத்தான் எதிர்பார்த்தேன். இதைத்தானே, நான் சொல்ல நினைத்தேன். இப்பொழுது என் கணவர் ஓய்வெடுக்க வேண்டிய தருணம் என பாரப்பட்டேனே! கர்த்தர் நல்லவராகவே இருக்கின்றார்" என சமாதானமடைந்தார். அடுத்த பிரச்சனை, எங்கே போவது? திருநெல்வேலியா? சென்னையா? வேலூரா? எதுவெனப் புரியவில்லை. அரசு சார்பிலிருந்தும் அழைப்பு வந்தது. சுந்தர் அதை நிராகரித்து விட்டார். அடுத்ததாக வீடு, ஒரு நல்ல பெரிய வீட்டில் இருந்து பழகி விட்டது. இனி இவ்வளவு பெரிய வீட்டில் இருக்க இயலாது! சுகந்தம் சுந்தர் இருவருமாக அதை ஜெபத்தில் வைத்தனர். அப்போது ஒரு மனப்பாட்டைக் கொடுத்த கர்த்தர் பின்னால் விட்டு விடுவாரோ? விடமாட்டார் என்ற நிச்சயம் இருந்தது.

இருந்தாலும் வீட்டில் உள்ள பொருட்களை சுகந்தம் மூட்டை கட்ட ஆரம்பித்தார். சில நாட்களுக்கு பின் பாளையங்கோட்டை செல்லலாம் என உணர்வு வெளிப்பட்டது. 1989-ம் ஆண்டு பல சாதனைகளுக்கு வாய்ப்பளித்த ஆரல்வாய்மொழி வி.டி.சி வளாகத்திலிருந்து இருவரும் புறப்பட்டனர். உடன் ஊழியர், பயிற்சியாளர்கள் பிரியாவிடை கொடுத்தனர். ஒன்பது மாதத்தில் வேறு வீடு பார்க்கலானார்கள். குடியிருந்த வீட்டில் சரியான கழிப்பறை இல்லை, தொடர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தனர்.

எகிப்தில் இஸ்ரவேலர் பார்வோனின் கொடுமைகளுக்கு முடிவு வேண்டி கர்த்தரை நோக்கிக் கதறிய போது, மோசே என்ற இரட்சகனை எழுப்பி, அவர்களுக்கு விடுதலை வாங்கித் தந்தார். தாவீது வனாந்திரத்தில் பசியோடு அலையும் போது அபிகாயில் போன்ற யாரையாவது அனுப்பி போஷித்தார். அதுபோல இயலாத சூழலில் சுந்தரும் சுகந்தமும் கர்த்தரை நோக்கிக் கதறியபோது எட்வர்ட் ஜோனத்தான் என்பவரது மகள் திருமதி நித்திலா மற்றும் மருமகன் திரு ராஜைக் கர்த்தர் எழுப்பினார். அவர்களது புதுவீடு ஒன்று முடியும் தருவாயில் இருந்தது. அதைத்தர முன் வந்தனர். சுந்தர் சில மாற்றங்களைச் செய்ய நினைத்தபோது அந்த அருமையான தம்பதிகள் மனப்பூர்வமாகச் சம்மதித்தனர். படிக்கட்டுக்குப் பதில் சரிவு வழிகளை வைக்கவும் வசதியானது.

1991-ம் ஆண்டு கண்பார்வையில் பிரச்சனை ஏற்பட்டதால் சுந்தரின் உறவினர் டாக்டர். இரத்தினராஜின் ஆலோசனைப்படி சென்னையில் உள்ள நேத்திராலையா சென்று லேசர் சிகிச்சை செய்தனர். கர்த்தரின் கிருபையால் பார்வை தெளிவானது. 2000ம் ஆண்டு சுந்தரின் குடும்பத்திற்கு அதிர்ச்சி தரும் ஆண்டாகும். இம்முறை லேசான மாரடைப்பால் சுந்தர் தாக்கப்பட்டார். நீரிழிவு நோய் பலவழிகளில் அவரைப் பாதித்தது. நல்லவேலையாக வீட்டில் இருந்த போது அது ஏற்பட்டபடியால் டாக்டர் கருணா, டாக்டர் லூனா, டாக்டர் சுபானி போன்றவர்களால் சிகிச்சை அளிக்கப்பட்டு குணம் கிடைத்தது.

நல்ல கிறிஸ்துவப் பாடல்களைக் கேட்பதிலும், நல்ல புத்தகங்களை வாசிப்பதிலும் நேரம் சென்றது. சுந்தர் அதிகம் பேசாத காரணத்தால் அவருக்கு என்ன செய்கிறது என்பது புதிராகத் தெரிந்தது. ஒன்று மட்டும் நிச்சயம், அசாதாரன அமைதிக்குள் அவர் பிரவேசித்தது போல ஒரு மோன நிலைக்குள் அடிக்கடி சென்று விடுவார். கண்கள் மூடியிருக்க ஆழ்ந்த அமைதி அவர் முகத்தில் ஆட்சி செய்தது. ஆனால் நாளாக நாளாகத் திரும்ப கலகலப்பாக மாறினார். சாதாரண

உணவுகளை உட்கொண்டார். பெங்களூர் போன்ற இடங்களிலிருந்து ஆலோசனைக்காக அழைப்பு வந்த போது செல்ல ஆரம்பித்தார்.

குலவணிகபுரத்தில் குடியிருந்த காலத்திலிருந்து காலையில் சுகந்தத்திற்கும் சேர்த்து தேநீர் போட ஆரம்பித்தார். காலையில் இருவரும் எழுந்து குடும்ப ஜெபம் செய்வது, வேதம் வாசிப்பது என்ற ஒழுங்கை திரும்ப வழக்கமாக்கினார்.

2002ம் ஆண்டு டிசம்பர் குளிர் திருநெல்வேலியை மூடிக்கொண்டது. கிறிஸ்தவ மக்கள் அருட்பணியில் வாஞ்சைமிக்கவர்கள். தாமிரபரணி தாவிப்பாயும் அந்த பூமியில், வானில் மட்டுமல்லாது வீடுகளிலும் 'முணுக் முணுக்கென' பல நட்சத்திரங்கள் மின்ன ஆரம்பித்தன. அவை கிறிஸ்துவின் பிறப்பை அடையாளம் காட்டியபடி இருந்தன. நடுநிசியில் பாடல் குழுவினர் வீதிவலம் வந்து உறங்கிக் கொண்டிருந்த அநேகரை எழுப்பி, கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியினை அறிவித்தபடி இருந்தனர். இப்படி கிறிஸ்துமஸ் கால அடையாளங்கள் எழுச்சியுடன் ஆங்காங்கே காணப்பட்டன.

SCHT Boys விடுதியில் கிறிஸ்துமஸ் விழாவுக்கு சுந்தர் எக்பர்ட் தம்பதிகள் விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஊனமுற்ற சிறுவர்கள். சுந்தர் சிறுவர்களுடன் அன்புடன் பேசி மகிழ்ந்தார். அவர்கள் அன்புடன் அளித்த இடியாப்பம், கோழி வறுவல் குழம்பை அனுபவித்து உண்டபின், இரவு வீட்டுக்கு வந்தனர். சுந்தருக்கு இயல்பாக இருக்க இயலாமல் வயிற்றில் ஏதோ வலி ஏற்பட்டது. ஜெலுசில் சாப்பிட்ட பின் உறங்கினார்.

ஒருநாள் இரவு உறங்கிக் கொண்டிருந்த சுகந்தம் விழித்து பார்த்தபோது சுந்தர் விக்கல் எடுத்தபடி கஷ்டப்பட்டுக் கொண்டு இருந்தார். நல்லவேளை, அன்று சகாயம் இருந்தபடியால், தண்ணீர் கொடுத்தார். அப்படியும்

விக்கல் நின்றபாடில்லை. சகாயம் அந்த இரவு வேளையில் டாக்டர். பியூலாவை அழைத்து வந்து சிகிச்சை கொடுத்தும் நிற்கவில்லை. ஆகவே, மறுநாள் ஆஸ்பத்திரியில் சேர்த்து, வைத்தியம் செய்தனர். பத்து நாளைக்குப் பின் குணம் கிடைத்தாலும் மருத்துவர்கள் சி.எம்.சி. மருத்துவமனைக்கு கொண்டு செல்ல ஆலோசனை தந்தனர். சுந்தரின் வயிற்றில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வலி தொடர்ந்து இருந்தது. சகாயம் கார் ஓட்ட சுந்தர் முன் இருக்கையில் கண்களை மூடியபடி இருந்தார்கள்.

சுகந்தத்தின் மனம் தவித்தது. 'ஏன் மௌனமாக இருக்கின்றார்? தைரியசாலியான சுந்தர், எனக்கு ஒன்றுமில்லையம்மா கவலைப்படாதே என்று சொல்ல மாட்டாரா?' என ஏங்கினார்கள். திடீரென ஒரு பயம் உள்ளத்தில் தோன்றி மறைந்தது. "உயிரோடு கணவரை திரும்ப அழைத்து வருவோமா?' என மருண்டார். 'ச்சி! இந்த பொல்லாத பிசாசு என்னை எப்படியெல்லாம் பயமுறுத்துகின்றான் 'பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அவன் ஓடிப்போவான்' என்ற வசனம் நினைவுக்கு வந்தது. 'இயேசுவே! பிசாசுக்கு எதிர்த்து நிற்க எனக்கு பெலன் தாரும்!' என பிரார்த்தித்தார் சுகந்தம். "கர்த்தாவே சுகம் தந்து பெலப்படுத்தும்" என கர்த்தரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தபோது இருதயத்தின் தத்தளிப்பு மறைந்து அமைதி ஆட்கொண்டது.

திருச்சியில் சுந்தரின் உறவுக்காரப் பெண் திருமதி. சந்திரா சாமுவேல் வீட்டில் தங்கி ஓய்வெடுக்கத் திட்டமிட்டனர். சகாயம் மெல்ல சுந்தரைத் தூக்கி நாற்காலியில் அமரவைக்கும் போது சுந்தர் துவண்ட கீரை போல் வாடி, சோர்ந்திருந்தார். மற்ற நாட்களில் சுந்தர் டக்கென ஒரே குதியில் நாற்காலியில் மாறிவிடுவார். வீட்டுக்குள் வந்ததும் சுந்தர் வாந்தி எடுத்தார். சுற்றியிருந்த சுகந்தம், சந்திரா அக்கா, சகாயம். செல்லக்குமார் அண்ணன் முகங்கள் வெளிறின. சுந்தர் வாந்தி எடுத்தது செரிக்காத உணவை அல்ல. ரத்தமாக எடுத்திருந்தார். யார் யாருக்கு

உதவுவது? யார் யாரைத் தேற்றுவது? அவ்வளவு களைப்பிலும் சுந்தர் முதலில் பார்த்தது சுகந்தத்தைத்தான், எனக்கு ஒன்றும் செய்யாது கவலை வேண்டாம் என்றார். சுகந்தம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

டிசம்பர் 30-ம் தேதி போல் வேலூர் சென்றனர். கிருபாகரனின் மைத்துனர் சுந்தரபாலையா மேஷாக் கிருபாகரனிடம் தொலைபேசியில் பேசி மருந்து வாங்கிக் கொடுத்தபின் சற்று குணம் கிடைத்தது. மறுநாள் சி.எம்.சி மருத்துவமனை சென்று அனுமதிக்கப்பட்டார். அங்கு நர்ஸ், சுந்தரைக் கண்டு, நோயாளியும் நடக்க இயலாமல் சக்கர நாற்காலியில் இருக்கின்றார். அவரது மனைவியும் நடக்க இயலாதவராக இருக்கிறாரே என வியந்தபோது, அதை உணர்ந்த சுந்தர் அந்த நர்ஸிடம், “அம்மா நன்கு சமைப்பார்கள்” எனக்கூறி சுகந்தம், மற்ற வேலைகளையும் செய்வார்கள் என உணர்த்தினார். மனைவியை யாரும் குறைவாக மதிப்பிட அவர் மனம் இடம் கொடுக்கவில்லைபோலும்!

சி.எம்.சியில் வேலை செய்த கிருபாகரன் ஆஸ்திரேலியா சென்று விட்டார். கிருபாகரனின் மனைவி செல்லம் கிருபாகரன் சி.எம்.சி மருத்துவமனையில் மருத்துவராக இருந்ததால் அவர்கள் மூலம், சுந்தருக்கு அறுவை சிகிச்சை நாள் குறிக்கப்பட்டது. அறுவை சிகிச்சையில் சுந்தர் குடலில் புற்றுநோய் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து ஆறுமாத சிகிச்சை கொடுக்கப்பட்டது. கிமோதெரபி கொடுக்கப்பட்டபோது, சுந்தர் அதிகக் கஷ்டப்பட்டார். ஆனால் முறுமுறுப்பு வேதனைகளைக் காட்டவில்லை. அத்தனை வலிகளையும் சகித்துக் கொண்டார்.

டாக்டர். கிருபாகரன் மற்றும் இதர மருத்துவர்களின் ஆலோசனைபடி, ஜூலை மாதம் சுந்தரை அழைத்துக்கொண்டு பாளையங்கோட்டை வந்தார்கள்.

தொடர்ந்து படுக்கையில் இருந்ததால் பெட்சோர் எனப்படும் படுக்கைப்புண்கள் வந்தன. திருநெல்வேலியில்

டாக்டர். பியூலா சி.எம்.சி. மருத்துவர்களின் ஆலோசனையினை அவ்வப்போது கேட்டு, மருத்துவம் செய்தார்கள். கிருபாகரன், சுந்தரிடம், 'உங்கள் வசதிப்படி ஒரு வீட்டைக் கட்டுங்கள்!' எனக் கூறி பெருமாள்புரத்தில் ஒரு அடுக்குமாடி வீட்டில் ஒரு பகுதியை விலைக்கு வாங்கியிருந்தார். சுந்தரின் திட்டப்படி அவ்வீட்டில் சுகந்தம் வசதிக்கு ஏற்ப, சமையல் மேடை, கழிப்பறைகள் வசதியாகக் கட்டி முடிக்கப்பட்டு இருந்தது. இவர்கள் திருநெல்வேலி போய் கொஞ்ச நாளில் பெருமாள்புரம் வீட்டிற்குச் சென்றனர். கர்த்தர் சுந்தருக்குத் தேவையான உதவிகளைச் செய்யும்படி, கிருபாகரனின் இருதயத்தை திறந்தபடியால், அவர் சுந்தரின் வசதிக்கு ஏற்றார்போல உதவிகளைப் பர்ர்த்துப் பார்த்து செய்தார்.

பியூலாவும் மருத்துவரீதியாக மனரீதியாக ஜெபிப்பதிலும் ஆறுதல் செய்வதிலும் அதிக உதவியாக இருப்பதைக் காணமுடிகின்றது.

சுகந்தமும் சுந்தருக்குப் புற்றுநோய் என்று தெரிந்தது முதல், சுந்தரிடம் துக்கத்தோடு இருக்கக் கூடாது எனவும், அவரிடம் எவ்வளவு தூரம் அன்பைக் காட்டமுடியுமோ அவ்வளவு தூரம் அன்பைக் காட்ட வேண்டும் எனவும், அவரது கருத்துகள் எதுவானாலும் அப்படியே ஏற்றுக்கொள்வது எனவும் பல தீர்மானங்கள் எடுத்து அதில் நிலைத்திருந்தார்கள்.

ஜன்னல் வழியாகப் பார்க்கும்போது ஆடுகள் மேய்த்து கொண்டிருக்கும் காட்சிகளைக் காண்பது உண்டு. சில வருடங்களுக்கு முன், சுந்தரோடு பயணப்பட்ட நாட்களிலும் இப்படிப்பட்ட காட்சிகளைக் கண்டதுண்டு. ஆடுகள் அமைதியாக, திருப்தியுடன் மேயும் போது, 'கர்த்தரும் நம்மை எவ்வளவு நேர்த்தியாய் பசும்புல் தரையில் மேய்த்து, அமர்ந்த தண்ணீரண்டை அழைத்து வந்துள்ளார், என நினைத்ததுண்டு. நம்மைக் கண்காணிக்க நமக்கு ஒரு மேய்ப்பன் உண்டு, என்பதில் எவ்வளவு நிம்மதி' உண்மையான மேய்ப்பன்

ஆண்டவராகிய 'இயேசு கிறிஸ்து மட்டுமே!' என்பதை கர்த்தர் அடிக்கடி இப்படிப்பட்ட காட்சிகள் மூலம் சுகந்தத்திற்கு உணர்த்தி வந்தார். கணவர் ஒரு துணை என்பதையும் தேவையான நேரத்தில் கர்த்தர் அவரை இணைக்கிறார் எனவும், யாருக்கு அழைப்பு வந்தாலும் செல்ல வேண்டும், நிரந்தர மேற்பார்வையாளர் கர்த்தர் தான்! என்பது இன்றைய அநேகப் பெண்களுக்கு புரிவதில்லை.

2003-ம் ஆண்டு சுந்தர் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டார். நல்ல வேளை அதிக பாதிப்பு இல்லை. ஆனால் பேச இயலாது போய் நாக்கு குழறியது. சுகந்தத்திடம் எழுதிக்காட்ட கண்களால் தூண்ட சுகந்தம் சலிக்காமல், எழுதிக்காட்ட ஆரம்பித்தார். சுந்தரின் கால்கள், கரங்கள், வாய் என அத்தனையும் செயலற்றுப் போனாலும், கண்களால் உணர்த்த முயற்சித்தார். சுகந்தம் தன் அன்புக் கணவரின் ஒவ்வொரு அசைவையும் புரிந்து வைத்திருந்ததால், அவர் பேச நினைப்பதை சுகந்தம் புன்முறுவலோடு செய்ய ஆரம்பித்தார்கள். சகாயத்தையும் அடிக்கடி பார்ப்பார்.

14.9.2003 அன்று இரவு லேசான மூச்சுத்திணறல் ஏற்பட்டது. மருத்துவரான பியூலா ஆஸ்பத்திரியை விட்டு பல மணி நேரம் சுகந்தம் குடும்பத்தாரோடு செலவழித்தார்கள். பியூலா சுந்தர் கர்த்தரிடம் போக வேண்டிய நேரம் வந்துவிட்டதை உணர்ந்து, அவர் முகத்தைப் பார்த்தபடி, கர்த்தரின் சமூகம் எவ்வளவு நேர்த்தியானது என பேச ஆரம்பித்தார்.

சுகந்தத்திடம் நிங்கள் அங்கிள் அருகில் இருங்கள். அவருக்கு நாம் பிரிவு உபசாரம் செய்யும் நேரம் நெருங்கி விட்டது என சொல்லாமல் சொன்னார்கள்.

'அங்கிள்', ஆண்ட்டி பக்கத்தில் வரவேண்டுமா? என பியூலா மென்மையாகக் கேட்டார்கள்.

சுந்தரின் அருகில் இருந்தபடி சுகந்தம் தன் கணவரிடம் பரலோக வாழ்வைக் குறித்தும் பரிசுத்தரைக் குறித்தும்

பேசினார்கள். சுந்தர் சுகந்தத்தின் உள்ளங்கையில் ஒரு சிலுவைக்குறியை இட்டார்கள். சுகந்தமும் அவர்கள் உள்ளங்கையில் ஒரு சிலுவைக்குறியை இட்டார்கள். சுகந்தம் "ஐயா, நான் பரலோகத்தில் உங்களைச் சந்திப்பேன். அங்கே இந்தச் சக்கர நாற்காலி இல்லை. கஷ்டங்களும் இல்லை. என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். கர்த்தர் என்னைக் காப்பாற்றுவார்" என்று சொன்னார்கள். சுந்தர், சுகந்தம் சொன்னவைகளை கேட்டுக் கொண்டிருந்தார்கள். தன் கடமைகளை நிறைவேற்றி முடித்து தூங்கப்போவது போல் கண்களை மூடினார்கள்.

டாக்டர். பியூலாவுடன் திருமதி. டிக்ஸி ஜெயகரன் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். சகோதரர். O.M.செல்வக்குமாரும் ஜெபித்துக் கொண்டிருந்தார். சுந்தரை வழியனுப்பி வைக்க வந்தவர்கள் அமைதியாக நின்று கொண்டிருந்தார்கள். சுகந்தம் சில வினாடிகள் சுந்தரின் முகத்தைப்பார்த்தார். அடர்த்தியான அமைதி அவர் முகத்தில், தவழ்ந்தது. சக்கர நாற்காலி தனிமையில் உருள ஆரம்பித்தது தன் கட்டில் ஓரமாய் போய் தலைகவிழ்த்து ஜெபிக்க ஆரம்பித்தார்கள். "ஆண்டவரே! உமக்கு நன்றி. பலவகையான பலவீனங்கள் குறைவுகள் மத்தியில் எனக்கென ஒரு துணைவரையும் நீர் ஆயத்தப்படுத்தி வைத்து என்னை திருமண வாழ்க்கைக்குத் தகுதி படுத்தினீரே! அதற்கு நன்றி. நீர் அனுமதிக்கும் காலம் வரை என்னை உத்தமசாட்சியாக வைத்திரும்!" என்றார்கள்.

மனம் தத்தளித்தது, சுந்தர் சுகந்தத்தை விட்டுவிட்டு வெளியூர் செல்வதானால் பலரை ஆயத்தப்படுத்தி வைத்திருப்பார். பொதுவாகச் சுந்தர் வெளியூர் சென்று விட்டால், "அம்மா சர்க்கரை வாங்கணுமா? ரேஷனுக்கு நான் போகிறேன்" என பலர் உதவ முன்வருவர்.

"அம்மா! இன்று தபாலில் போடவேண்டியதை எடுத்து வையுங்கள்" என மற்றொருவர் கூறுவார். இப்படி பலருக்குக் கட்டளை கொடுத்து பராமரித்தவர் வாய்மூடி மௌனியாக உறங்குவது மனதுக்குக் கஷ்டமாக இருந்தது.

சுகந்தத்தின் நினைவலைகள், சுந்தரைக்குறித்தும், இன்றைய சூழலைக் குறித்தும், கர்த்தரிடம் பேசுவதிலுமாக அவர்களின் வாழ்க்கைக் கோடுகள் மேலும் கீழுமாக இறங்கி ஏறின. தூங்கமுடியவில்லை. தேவன் உலகம் தரக்கூடாத சமாதானத்தைக் கொடுத்து தேற்றினார்.

ஏரேமியாவைக் குறித்து நான் படித்த ஒரு பகுதி நினைவுக்கு வருகின்றது. உலகத்தின் கண்களுக்கு ஏரேமியா ஒரு வெற்றியுள்ள மனிதனாகக் காணப்படவில்லை. அவனிடம் பணம் இல்லை. அவனுக்கென குடும்பம் இல்லை. அவன் தேசத்தின் மற்றும் தலைநகரின் மேலும், எருசலேம் தேவாலயத்தின் அழிவு குறித்தே தீர்க்கதரிசனம் கூறினான் அவனது ஆலோசனைகளை அரசியல்வாதிகளும் தலைவர்களும் கேட்கவில்லை. யாரும் அவனை மதிக்கவில்லை நாம் அவனது வாழ்க்கையைத் திரும்பிப்பார்க்கும் போது, உலகத்தின் காரியங்களில் வெற்றி கொள்ள முடியாத அவன், உலகத்தை உண்டாக்கியது முதல் கர்த்தர் அவனுக்கென வைத்திருந்த வேலையை, மனிதரைப் பிரியப்படுத்தும் நோக்கில் அவர்களுக்கு ஒத்துப்போகாமல் கச்சிதமாகச் செய்துமுடித்தான். வெற்றி என்பது விளம்பரப்படுத்துவதில் அல்ல, புகழப்படுவதால் அல்ல, எதிர்காலப் பாதுகாப்பின் நிச்சயத்தில் அல்ல. சிதேக்கியா ராஜாவின் குறிக்கோள் அத்தனையும் சுயநலமாகக் காணப்பட்டது. கர்த்தர் நம்மை எப்படிபட்ட அளவுகோலால் அளப்பார் தெரியுமா? நாம் கர்த்தரின் சித்தத்துக்கு எந்த அளவு கீழ்படிகின்றோம். உண்மையாய் இருக்கின்றோம். நீதியாய் அவருக்குப் பயந்து நடக்கிறோம் என்பதை பொருத்தே! கர்த்தர் நமக்கென கொடுத்த வேலையில் உண்மையாய் இருப்பதே, அவரது பார்வையில் வெற்றியுள்ள மனித்னாக காணப்பட ஏதுவாகும். (Life Application Bible)

சுந்தர் பதினோரு வயதில் முடமாக மாறியதும், எத்தனை பேரால் புறக்கணிக்கப்பட்டு உதாசீனப்பட்டிருப்பார். பாரமாய் நினைக்க வழியிருந்திருக்கும். ஆனால் அவர் கர்த்தரை அறிந்து அவர் கரத்தில் விழுந்ததால், அதே

ஊனமுற்ற சமூதாயத்தில் அவரை உலக அளவில் உயர்த்தி உண்மையாக, நீதியாக தரமுள்ளதை உருவாக்க இயேசுக்கு ஆராதனை செய்ய அர்ச்சனைப் பூக்களாக சுந்தரை மாற்றிவிட்டார்.

கர்த்தர் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நோக்கத்தோடு படைக்கின்றார். அந்த நோக்கம் நிறைவேற உடனிருந்து உதவுகிறார். அந்த நோக்கம் பூமியில் முடிந்ததும் மெல்ல அழைத்துக் கொள்கின்றார். அவரோடு இணைந்து செயல்படுவோரை உலகத்தில் மகிமைப்படுத்துகிறார்.

அப்படி செயல்படுவோரும் கர்த்தரை மகிமை படுத்தும்படி வாழ்கின்றனர்.

ஞானிகளை வெட்கப்படுத்த பேதைகளையும் பலவான்களை வெட்கப்படுத்த பலவீனரையும் தெரிந்து கொண்டு மனித ஆற்றலுக்கு மேலாக உயர்த்துகின்றார்.

கர்த்தர் சகலத்தையும் அறிந்தவர்.

அவர் செய்ய நினைத்தது தடைபடாது யோபு 42:1 என யோபு சும்மாவா சொன்னார். அவருக்கு நன்றாகத் தெரிந்த ஒன்று,

"அவரால் எல்லாம் கூடும்".
"தேவனால் கூடாதது ஒன்றுமில்லையே".

டாக்டர். மேஷாக் கிருபாகரன் அண்ணன் சுந்தரை ஆராய்ந்து பார்த்து அவரது திறமைகளைப் பட்டியலிட்டு இருக்கின்றார். அதைப் பார்ப்போமா?

1. 12 வயதில் படிப்பை நிறுத்திய சுந்தர் கர்த்தரின் உதவியால் சுயமாகப் படித்து தேறிய பாடங்கள் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம். பட்டப்படிப்பு மாணவர்களுக்கு சொல்லித்தரும் அளவு ஆங்கில மொழியில் புலமை பெற்றிருந்தார்.

2. பல சிறுகதைகள் மற்றும் ஒரு துப்பறியும் நாவலை ஆங்கிலத்தில் எழுதியிருந்தார்.

3. விழியிழந்தவர் பயன்படுத்தும் "பிரையில்" முறை கற்றலைப் படிக்க, எழுதப் பாளையங்கோட்டை விழியிழந்தோர் பள்ளியில் தேர்ச்சி பெற்றார்.

4. திரு.கோலே என்ற சுவிட்சர்லாந்து என்ஜினியரால், பயிற்சி கொடுக்கப்பட்டு சுமார் 34 பாடங்களில் தேர்ச்சி பெற்று 'கடிகாரம் செய்யும்' கலை கற்ற ஒரே மாணவர்.

5. கையில் தொழில் ரீதியாக டைப் அடிப்பவரை விட வேகமாக ஒரே கையில் டைப் அடிக்கும் அபாரமான ஒரே டைப்பிஸ்ட்.

6. ஊனமுற்றோருக்கான புதிய உபகரணங்கள், உதிரி பாகங்கள் செய்வதில் பலரால் பாராட்டப்பெற்ற பொறியியல் வல்லுநர்.

7. சுந்தரின் கண்டுபிடிப்புகள் மற்றும் அவரால் செய்யப்பட்ட தளவாடப் பொருள்கள் பல மருத்துவமனைகளில் இன்னும் பழுதில்லாமல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வேலூர் சி.எம்.சி மருத்துவமனை அதற்கு விதிவிலக்கல்ல.

8. ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான பல புதுத்திட்டங்கள் சுந்தரால் வகுக்கப்பட்டு ஆஸ்திரேலியா நியூசிலாந்து போன்ற வெளிநாட்டு நிபுணர்களால் பாராட்டப் பெற்றன. அந்த நாடுகளுக்கு எவ்வித மனிதத் துணையுமின்றி கர்த்தரின் ஒத்தாசையால் தனியாகப் பயணம் செய்த ஊனமுற்றவர் என்ற பாராட்டைப் பெற்றார்.

9. உலக சமூகநலத்துறையினரால் இங்கிலாந்து தேசத்தில் கொடுக்கப்படும் 'ரேனே சாண்ட்' விருது பெற்ற இரண்டாவது இந்தியர் என்ற பெயர் பெற்றவர்.

இப்படி கிருபாகரனின் பட்டியல் நீண்டு கொண்டு போகின்றது. ஆனால் பட்டியலில் வராத பல சாதனைகள் ஜீவ

புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளன. ஒருவருக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தாலும் அதையும் கணக்கில் வைக்கும் கர்த்தர் எதையும் விடமாட்டார். முரடர்கள், வீம்புக்காரரர்கள், ஊனமுற்றோர், மனதில் ஊனமுற்றோர் இப்படி பலரை அழைத்துப் பழகி பேசி சாதனையாளராக்கிய சாதனையாளர் சுந்தர்.

ஒரு வேளை பரலோகத்தின் தேவன் சுந்தர் நடந்து வருவதைப் பார்த்து (பரலோகில் வியாதி இல்லை, பசி இல்லை, ஜாதியில்லை, பணக்காரரர் இல்லவே, இல்லை! ராஜாதி ராஜா இயேசு, என்றென்றும் ஆண்டிடுவார்).

'வா! உண்மையும் உத்தமமும் உள்ள ஊழியனே! நீ கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தாய்! உன் எஜமானின் சந்தோஷத்தில் பிரவேசி என்பாரோ!'

அன்புள்ள வாசகர்களே!

கர்த்தர் உங்களை எந்த நோக்கத்திற்காக படைத்தார் என அவரிடமே, கேளுங்கள். அவர் வெளிப்படுத்துவார். உதவி செய்வார். முடிவு பரியந்தம் உடன் இருந்து அதை முடிக்க பெலன் தருவார்.

காலங்கடந்திடுமுன்! காலத்தை பயன்படுத்துங்கள். 'ஒருவரும் கிரியை செய்யக்கூடாத ராக்காலம் வருகின்றது! ஆமென்! அல்லேலுயா!!

"நல்ல போராட்டத்தை போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன்.
விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்
இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக
வைக்கப்பட்டிருக்கிறது
நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே
அதை எனக்குத் தருவார்."



இந்த நூல் எழுத பயன்பட்ட பிற நூல்கள்

1. Robinson, B.Bodidy Compassion Ph.D., Thisis, Ottawa University
2. Booth Tucker, The life of Catharine Booth, Biography, Vo I II Sp & S. London 1893, 419 pg.
3. Successful Disabled persons international People to People, Washington DC International, washington D.C William P.Mccahill. 27 pg.
4. The Salvation Army year Book 2006. International Mission Statement Salvation Army A.Quatus, UK.-Major. Travar How 2004, P.11.
5. *ஆனந்தவிகடன் - 27.1.85 பக்.84*
6. Reader's Digest Feb. 1984, Page No.51.
7. "It Began with Andrews" by Miriam M. Richarads Salvationist Publishing and supplies Ltd., 1971 St. Albans, Herts Pg.67
8. Brokenness as a way of Blessing by Usha Jesudasan ICSA Books 2008.
9. *'இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்' ஆயர் ஆர். ஜோசப், டாக்டர் மேஷாக் கிருபாகரன் 2005,* Centinary celebration (Bishop. Rt. Rev. Augustine Gnanadason Jebaraj life History Collection)
10. The Inside Story-Vera Williamson (Memories of Vera Williamson) 2003.
11. "An Army needs Ambulance Corps" - Harry Williams. Salvation Books. Salvation Army International Head Quarters, London U.K. 2009.

இந்நூல் ஆசிரியரைப்பற்றி ...

டாக்டர் லலிதா செல்லப்பா பல அருட்பணியாளர்கள் வரலாறுகளை எழுதியவர், அநேக சிறு கதைகள் எழுதியவர். இதழியலில் முதுகலைப் பட்டமும், வாழ்க்கை வரலாறு நூல்கள் குறித்த டாக்டர் பட்டமும் பெற்றவர்.

டாக்டர் செல்லப்பா அரசு கல்லூரியில் வேதியியல் பேராசிரியராக வேலை பார்த்தவர். தமிழக நற்செய்தி மாணவர் மன்றத்தில் ஊழியராகப் பணியாற்றியவர். ஆவிக்குரிய கட்டுரைகள் எழுதுவதில் வல்லவர். பல ஆண்டுகள் தரிசனச்சுடர் இதழின் ஆசிரியராகப் பணிபுரிந்து அந்த நூலை பல மாணவர்களுக்கும் மற்றும் நற்செய்தி பட்டதாரி ஐக்கிய குடும்பத்தாருக்கு பிரயோஜனமாக மாற்றி நல்லூழியம் செய்தவர்கள். இருவரும் பல எழுத்தாளர் முகாம்களை நடத்திய அனுபவம் பெற்றவர்கள். பல இளம் எழுத்தாளர்களை புதிய சிந்தனையோடு எழுதுவதற்கு ஊக்குவித்தவர்கள். இவர்கள் எழுதிய பல வரலாற்று நூல்கள் இன்றும்அனேகர்க்கு ஆசீர்வாதமாக அமைந்திருப்பது கடவுளின் கிருபையே.

பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி
தேவன் உலகத்தில்
பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்

1 கொரிந்தியர். 1:27